# முருகன் பெருமை

முருகா எனஉனை ஓதும் தவத்தினர் மூதுலகில்
ருகாத செல்வம் அடைவர் வியாதி யடைந்துநையார்
ஒருகால முந்துன்பம் எய்தார் பரகதி யுற்றிடுவர்
பொருகாலன் நாடு புகார்சம ராபுரிப் புண்ணியனே.

*மெய்யன்பர்களே!*

முருகப் பெருமானுக்குரிய பெரிய விழாவாகிய இச் சஷ்டி விழாவில் இன்று எனக்குப் பேசும் பொருளாக இருப்பது முருகன் பெருமையாகும். முருகன் என்று சொல்லும்போதும் நினைக்கும்போதும் எனக்கே ஓர் ஆனந்தம் பிறக்கின்றது. அவன் திருப்பெயரை ஓதினால் நினைத்தால் என்ன பலன் கிடைக்கும் என்பதை நமது திருப்போரூர் சிதம்பரசாமிகள் பாடிய, நான் முதற்கண் கடவுள் வணக்கமாக, "முருகா என உனை ஓதும் தவத்தினர்," என்று பாடிய பாடலால் தெரியலாம். அத்தகைய சிறப்பு அவன் திருப்பெயருக்கு இருக்குமானால், அவனுக்குப் பெருமையும் மிகுதியாக இருக்கும் என்பது பெறப்படுகின்றதன்றோ? ஆனால் அவனது பெருமை எத்தகையது எனக் காளமேகப் புலவரை வினவினால் அவர்,

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

அப்பன் இரந்துண்ணி ஆத்தாள் மலைநீலி
ஒப்பரிய மாமன் உறிதிருடி—சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன் ஆறுமுகத் தானுங்கிக்
கெண்ணுங்கால் பெருமை இவை

என்று கூறிவிடுவர். அதனுல், யானும் காளமேகப்புலவர் போக்கில் முருகனது பெருமையினைக் கூறி முடிப்பேன் என்று கருதவேண்டா.

முருகப்பெருமான் யாவன்? அவன் பெருமை எங்ஙனம் துலங்குகிறது என்பன போன்ற விஞக்களுக்கு இனி விடை காண்போமாக. முருகப் பெருமான் இறைவனது திருமகன் என்னும் சிறப்புக் குரியவன் என்பது உங்கள் யாவர்க்கும் தெரிந்ததே ஆகும். இறைவன் இத்திறத்தன், இவ்வண்ணத்தன், இவன் இறைவன் என்று எழுதிக் காட்ட. ஒண்ணு நிலமையினன் என்ருலும், அன்பர்களின் பொருட்டு உருவத்திருமேனி கொண்டு அருளுவது அவனது கருணை உள்ளத்தின் கோட்பாடாகும். இதனைக் கச்சியப்ப சிவாசாரியர்,

உருவொடு தொழில்பெயர் ஒன்றும் இன்றியே
பரவிய நீஅவை பரித்து நிற்பது
விரவிய உயிர்க்கெலாம் வீடு தந்திடும்
கருணை யதேஅலால் கருமம் யாவதே

என்று பாடித் தெளிவுபடுத்தியுள்ளார். இந்த அளவிலும் அவர் கூறிநிறுத்தாது,

தன்னை நேரிலாப் பரம்பொருள் தனியுருக் கொண்ட
தென்ன காரணம் என்றியேல் ஐந்தொழில் இயற்றி
முன்னை ஆருயிர்ப் பாசங்கள் முழுவதும் அகற்றிப்
பின்னை வீடுபே றருளுவான் நினைந்த பேர்அருளே

என்றும் விளக்கிப் போந்தார். இக் கருத்துக்களை நமது

சைவசித்தாந்த சாத்திரமும் ஆணித்தரமாக அறிவித்துக் கொண்டிருக்கிறது. அருணந்தி சிவாசாரியார்,

உருமேனி தரித்துக் கொண்ட தென்றலும் உருவிறந்த
அருமேனி அதுவும் கண்டோம் அருவுரு வானபோது
திருமேனி உபயம் பெற்ரும் செப்பிய மூன்றும் நந்தம்
கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு காணே

எனச் சிவஞான சித்தியாரில் செப்பியுள்ளார்.

இதுகாறும் எடுத்துக் காட்டிய ஏதுக்களால் இறைவன் உருவத் திருமேனி கொள்வது அன்பர்களின் பொருட்டு என்பது பெற்ரும். இம்முறையில் எடுத்த திருமேனியே முருகன் திருமேனியாகும்.

முருகப்பெருமான் இறைவனுக்குத் திருமகன் இளைய பிள்ளை என்று கூறப்படுவதும், கருதப்படுவதும் உபசாரமே அன்றி, உண்மை யில்லை. பின்னை முருகன் யாவன்? அவன் முழுமுதற் பரம்பொருளே ஆவான்; அவனும் இறைவனும் வேறல்லர். இருவரும் வேறு வேருயின் கந்த புராணம்,

வந்திக்கும் மலரோன் ஆதி வானவர் உரைத்தல் கேளா
புந்திக்குள் இடர்செய் யற்க புதல்வனைத் தருதும் ஞ
அந்திக்கு நிகர்மெய் அண்ணல் அருள்புரி அறிஞர் ஆயோர்
சிந்திக்கும் தனது தொல்லைத் திருமுகம் ஆறும் கொண் டான்

எனக் கூறுமோ? இப்பாடலால் இறைவனே ஆறு திருமுகம் கொண்டு திகழ்ந்தான் என்பது புலனுகின்றதன்றே?

முருகப்பெருமான் பிறப்பைப் பற்றிப் பேசும்போதும், இறைமைப்பண்பு இலங்கவே இயம்பியுள்ளார் கச்சியப்ப சிவாசாரியார்·

அருவமும் உருவ மாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும்
கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய

என்ற திருப்பாடலைக் காண்க. என்றும் எங்கும் நிறைந்த பரம்பொருளே முருகனுக்குத் தோற்றம் அளித்தது என்ற நுண்குறிப்பை "வந்தாங்கு உதித்தனன்" என்னும் தொடர் உணர்த்தி நிற்கிறது. இத்தொடரின் பொருள், வந்தது போலப்பிறந்தான் என்பதே அன்றி, வந்து அங்குப் பிறந்தான் என்பதன்று. ஆங்கு என்னும் சொல் ஈண்டு உவமை உருபே அன்றி, இடப்பொருளை உணர்த்தும் மொழி அன்று. "பெம்மான் முருகன் பிறவான் இறவான்" ஆதலின், வந்தாங்கு உதித்தனன் என உவமை நயம்தோன்ற உரைத்தனர் ஆசிரியர்.

கந்தபுராண ஆசிரியர் மேலும் இக்கருத்தினை வற்புறுத்தும் முறையில்,

மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் நினைக்கொணாமல்
நிறைவுடன் ஆண்டு மாகி நின்றிடும் நிமல மூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி அருளொடு சரவணத்தின்
வெறிகமழ் கமலப் போதில் வீற்றிருந் தருளி னானே

என்றும் அறிவித்தருளினர். எனவே, இவ்வேதுக்களாலும் எடுத்த மொழிகளாலும் இறைவனே முருகன் என்பதும், அவனுக்கும் முருகனுக்கும் எந்தவிதமான வேறுபாடும் இல்லை என்பதும் பெற்றாம் அன்றோ?

முருகப்பெருமானும் முழுமுதற் பரம்பொருளும் அல்லர் என்னும் கருத்துக்களைப் பிறர் கூறுமுறை கருதும் முறையிலோ நாம் அறிவதோடு இன்றி

முழுமுதற் பரம்பொருளாம் பரசிவத்தின் திருவாயின் மூலமாகவும் அறிந்து நாம் இவ் உண்மையினை உணர்ந்து கொள்ளலாம்.

ஆதலின் நமது சத்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதகம் அன்றால் நம்போல் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையும் உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்

எனச் சிவபெருமானே மொழியும் மொழிகளால் தெளியலாம்.

ஈண்டே இறைவன் ஆறு திருமுகங்களுடன் திகழ்வதன் உட்பொருளை உணர்ந்து மேலே செல்வோமாக. முருகப்பெருமான் ஆறு திருமுகம் கொண்டமைக்குரிய காரணங்களை அனுபவம் மிகுந்த அறிஞர்கள் அறிவித்தே சென்றுள்ளனர். நக்கீரர் தமது திருமுருகாற்றுப்படையுள்,

மாஇருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம்; ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக்
காதலின் உவந்து வரம்கொடுத் தன்றே! ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்விஓர்க் கும்மே; ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே; ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட் டன்றே; ஒறுமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகைஅமர்ந் தன்றே

என்றனர்.

இதன் பொருள், "இருள்மிகுந்த உலகம்ஒளியுடன் திகழவும், அன்பர்கள் தம்மைத் துதித்து வணங்க, அவர்கள்

வேண்டியதைத் தந்தருளவும், முறைப்படியும் மந்தி விதிப்படியும் அந்தணர்கள் செய்யும் யாகாதி காரியங்களுக்குத் தீங்கு நிகழாதிருக்கவும், அரிய பொருள்களை இருஷிகளுக்கு அறிவித்துத் திசைகளை விளக்கமுறச் செய்யவும், பகைவர்களாம் அசுரர்களைக் கொன்று களவேள்வி புரியவும், வள்ளி அம்மையாருடன் இன்புற்றுக் கொஞ்சி விளையாடவும் முருகனும் பரமன் 'ஆறு திருமுகங்களைக் கொண்டான்'' என்பதாம்.

குமரகுருபரர் ஆறு திருமுகங்களைப் பற்றிய குறிப்புக்களைக் கூறுங்கால்,

வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூரனைத்தடிந்து
தெவ்வர்உயிர் சிந்தும் திருமுகமும்—எவ்வுயிர்க்கும்
ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்பம்,
வாழ்வுதரும் செய்ய மலர்முகமும்—சூழ்வோர்
வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்கும் கமல முகமும்—விடுத்தகலாம்
பாச இருள்துரந்து பலகதிர் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும்—நேசமுடன்
போக முறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோகம் அளிக்கும் முகமதியும்—தாகமுடன்
வந்தடியில் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்தருளும் தெய்வமுகத் தாமரையும்

என்றனர். இதன் பொருள் ''பகைவர் உயிரை மாய்க்கவும் உயிர்கட்கு நல்வாழ்வு தரவும், வேதாகமப் பொருளை முற்றுப்பெறச் செய்யவும், அஞ்ஞானத்தை ஒழித்து, மெய்ஞ்ஞானத்தை மக்களுக்கு உணர்த்தவும், வள்ளி நாச்சியார்க்கும், தெய்வயானை அம்மையார்க்கும் இன்பம் அளிக்கவும், தன்னடியினை வந்தடைந்த அன்பர்கட்கு வரம் பல அருளவும் முருகன் ஆறு திருமுகம் கொண்டான்'' என்பதாம்.

அருணகிரிநாதர் ஆறுமுகங்களின் பெருமை இன்னது என்பதைப் பாடுங்கால், "ஆதியொடும் அந்தம் ஆகிய நலங்கள் ஆறுமுகம்" என்று பாடிப் பரவினர்.

சிதம்பர சுவாமிகள், "ஆறுசமயக் கடவுளும் வேறு வேறு இன்றி யான் ஒருவனே அங்கங்கே இருந்து அன்பர்க்கு முத்தி தரும் வித்து—என்று அறிவித்த வதனம்" என்று இனிது எடுத்து ஓதினர். இந்த அளவோடு இன்றி அவரே,

"பேறுதரும் தெய்வம் யவைக்கும் யான் பெருந் தேவன் என்றே வீறுமுகம் கொண்டு போரூர்முருகன் விளங்கியதே"

என்றும் பாடிப் பரவியுள்ளார்.

"கீறும் வைவேல் பெருமான் முகம் ஆறும் கிளத்தும் எல்லாக்கடவுளும் ஓர் வடிவாகி இருந்தே"

என்று வழுத்தும் ஆறெழுத்து அலங்காரம்.

'ஆறுசமயமும் தன்முகமாம் என்றறியும் அன்பர் வீறு சிந்தைக்கு இடைவீற்றிருக்கும் குகன்'

எனக்கூறும் மயில் அலங்காரம்

ஆறுகொ லாம்அவர் தம்திரு மாமுகம்
ஆறுகொ லாம்அவர் தோற்றிய ஓர்இடம்
ஆறுகொ லாம்அவர் தானமும் நூல்களும்
ஆறுகொ லாம்அவர் மந்திரம் தாமே

என்று பாடிப் பரவினர் ஓர் அன்பர். இதனால், அவர் திருமந்திரங்களான "சரவணபவ" "குமாராயநம" என்பனவற்றை அன்பர்கட்கு உணர்த்தவும்தாம் ஆறுமுகம் கொண்டார் என்றறிவோமாக. முருகப் பெருமான் திருமந்திரம் ஆறெழுத்தால் ஆயது என்பது 'ஆறெழுத்தடக்கிய அருமறை' என்னும் நக்கீரர் வாக்கிற்கு உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் உரை எழுதுங்கால், 'அது

நமோ குமாராய என்பதாம்' என்று விளக்கியிருப்ப தால் அறிய வருகிறது. இது நிற்க.

முருகன் என்னும் சொல் தெய்வத்தன்மை இளமை, அழகு, மணம் என்று பொருள்பட்டு நிற்றலைக் காணலாம். இதனை நச்சினார்க்கினியர் மதுரைக்காஞ்சி யில் வரும் முருகன் என்னும் சொல்லுக்குத் "தெய்வத் தன்மை" என்று பொருள் தந்து எழுதியிருப்பதைக் கொண்டு தெளியலாம். நக்கீரர் "என்றும் இளையாய் அழகியாய்!" என்றதனால் முருகன் என்னும் சொல் லுக்கு இளமைப் பொருளும் அழகுப் பொருளும் இருத்தலைக் காண்க. மேலும், கமல மடமங்கை முருகப் பெருமானது வதனத்து அழகு காண்பள் என்றும், கரிய முகில் வண்ணனும் செங்கண் அழகு காண் பன் என்றும், முக்கண் மூர்த்தி அச்சொல்லின் பொருள் அழகு காண்பன் என்றும், உம்பர் வேந்து வேல் அழகு காண்பன் என்றும், அடியார் நின்று அடி அழகு காண்பர் என்றும், கௌரி உற்று நோக்கி முருகனது பின்அழகு காண்பாள் என்றும் அறிந்தோர் கூறுமாற்றால் முருகன் அழகன் ஆதலைக் காணலாம். இப் பண்புகள் அனைத்தும் ஒருங்கே இயைந்தமையின் முருகன் பெருமை ஏற்ற முறு கின்ற தன்றோ?

முருகப் பெருமானது தெய்வத்தன்மைக்கு வேதங் களும் சான்றாய் நின்று சாற்றுகின்றன. வடமொழி வேதத்தின் முடிவு,

சுப்ரமண்யோம், சுப்ரமண்யோம், சுப்ரமண்யோம் என் பதாக மும்முறை ஓதி முடிவதாகக் கூறுவர். நக்கீரர், முருகன் பெருமையினைத் தேவர்கள் அவனைக் காணக் குழுமி நிற்கும் நிலையினை விளக்கும் முகமாகவும் அறிவித் துள்ளார். அவர்,

உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்
தீரிரண் டேந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெரும் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்
நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவரும் தலைவ ராக
ஏமுறு ஞாலம் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாவில் ஊழி
நான்முகன் ஒருவன் சுட்டிக் காண்வரம்
பகலில் தோன்றும் இகலில் காட்சி
நால்வே றியற்கைப் பதினொரு மூவரொ
டொன் பதிற் றிரட்டி உயர்நிலை பெறீஇயர்
மீன்பூத் தன்ன தோன்றலர் மீன் சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர் வளியிடைத்
தீயெழுந் தன்ன திறவினர் தீப்பட
உருமிடித் தன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கில்தம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவினன்குடி அசைதலும் உரியன்

என்று பாடிக் காட்டினர்.

"சிவபெருமான், இந்திரன், திருமால், யமன், வருணன், குபேரன், முப்பத்து முக்கோடி தேவர்கள், பதினெண் கணங்கள் முதலானவர் தம் தம் தொழில் முறையே இனிது நடக்க வரம் வேண்டி முருகப் பெருமானைக் குழுமி நின்றனர்" என்பதே இதன் கருத்து.

முருகப் பெருமானது ஈடும் எடுப்பும் அற்ற பெருமையினைத் திருப்போரூர் சிதம்பர சுவாமியின்,

அஞ்சக் கரப்பரத் தொட்டிலில் சதுர்வேத
மான வடமொழி நாலையும்
ஆதியுடன் இச்சை ஞானம் கிரியை நாமமுற்
றருள் வளர்ந்தொளிர் சத்திகள்
தஞ்சக் கரங்கொடு பிடித்தாங் கசைத்திடத்
தகுபரையும் ஆதி சிவனும்
தாமுள மகிழ்ந்துறச் சோமனென நிலவுபொழி
தவள யானைக் கடவுளும்
விஞ்சக்கரம் புனையும் முதல்வர் பதினொருவரும்
விபுதர்களும் அரிபிரமரும்
வேணி முனிவரும் அருண்ஞானமுனிவர ராதி
வியனுலகரும் பரவவே
செஞ்சக்கரப் புரிதி என நிலவு போரூர
செங்கீரை யாடியருளே
திமிர மலமகல வருகுமர சரவணமுருக
செங்கீரை யாடிஅருளே

என்று போற்றிப் புகழ்வாராயினர்.

முருகனது பெருமையினைத் திருமாலும், நன்கு உணர்ந்தவர். இதனை அவர் கூற்றுக்களாகிய

ஓதியாகியும் உணர்ந்தவர்க் குணரவும் ஒண்ணு
நீதியாகியும் நிமலமதாகியே நிகழும்
சோதியாகியும் தொழுதிடும் எம்மனோர்க் கெல்லாம்
ஆதியாகியும் நின்றவன் அறுமுகன் அன்றோ

ஈறியாதமாபரனே குழவியின் இயல்பாய்
ஆறுமாமுகம் கொண்டுதித்தான் என்பதல்லால்
வேறுசெப்புதற்கு இயையுமோ மேலவன் தன்மை
தேறியும் தெளிகின்றிலை உமது சிந்தையுமே

என்பனவற்றால் அறியலாம்.

எனவே, இதுவரை எடுத்துக் காட்டிய ஏதுக்களால் பெருமைக்குரிய முருகனது மாண்பு சீரியது என்பதை அன்பர்களின் வாக்காலும் அரிபரந்தாமன் அரிய உரையாலும் உணர்ந்தனம். ஆனால், ஒரு சில அன்பர்கள் முருகனது அடியார்கள் ஆதலாலும், திருமால் மாமனார் ஆதலாலும், முருகன் பெருமையினை மொழிவதில் அத்துணை ச்சிறப்பில்லையே என்றும் கூறக்கூடும்; கருதவும் கூடும். இதே நேரத்தில் முருகப் பெருமானுக்கு நேர்பகைவர்களும் முருகனது பெருமையினை அறிந்து போற்றிப் புகழ்ந்துள்ளனர் என்பதை எடுத்துக் காட்டினால், முருகன் பெருமை முற்றிலும் பெருமைக்குரியது என்பது பெறப் படும் அன்றோ!

இரணியன் என்பவன் சூரபதுமன் குமாரர்களில் ஒருவன். அவன் முருகனது பெருமையினை உணர்ந்து, தன் தந்தையை நோக்கி,

ஆறுமுகத் தொருவன் ஆகும் அமலனை அரன்பால் வந்த
சிறுவன் என் றிகழன் மன்னு செய்கையால் பெரியன் கண்டாய்

இறுதிசேர் கற்பம் ஒன்றின் ஈறிலா தவன்பால் தோன்றும்
முறுவலின் அழலும் மன்றே உலகெலாம் முடிப்பதம்மா

வாசவன் குறையும் அந்தண் மலரவன் குறையும் மற்றைக்
கேசவன் குறையும் நீக்கிக் கேடிலா வெறுக்கை நல்க
ஆசில்ஓர் குழவி போலாய் அறுமுகம் கொண்டான் எண்டோள்

ஈசனே என்ப தல்லால் பிறிதொன்றை இசைக்க லாமோ

என்றனன்.

இவ்வாறு இரணியன் இறைவனும் முருகனது பெருமையினை எடுத்து இயம்பியதையும் ஏற்காத நிலையில் ஒரு சிலர் இருக்கலாம். ஏன்? "இரணியன் சிறுவன்; அவன்

அறிவு சிறிது; ஆகவே, அறியாமல் இங்ஙனம் அறிவித் தனன்'' என்பர்.

அடுத்தாற்போல் சிங்கமுகனைக் காண்பாம். சிங்க முகன் சூரபதுமனது நேர் இளையவன். போர் என்ன வீங்கும் பொலங்கொள் தோளினன். புறமுதுகு காட்டி ஓடா அத்துணை வீரன். அத்தகையனும் முருகன் பெருமையினை உணர்ந்து, தன் அண்ணனாகிய சூரபதுமனுக்குச் சாற்றியவை இன்ன என அறிந்தால், முருகன் பெருமையினை நன்கு அறியலாம் அன்றோ? இனிச் சிங்கமுகனது செம்மை சான்ற மொழிகளைக் காண்பாம்.

மானுடத் தவரில் விலங்கினில் புட்களில் மற்றும்
ஊனமுற் றுழல்யாக் கையில் பிறந்துளார் ஒப்ப
நீநினைக் கலைபரஞ்சுடர் நெற்றியம் தலத்தே
தானு தித்தனன் மறைகளும் கடந்ததோர் தலைவன்

சீல மில்லவர்க் குணரஒண் ணாத சிற்பரனைப்
பாலன் என்றனை அவனிடத் தில்பல பொருளும்
மேலைநாள் வந்து தோன்றிய சிறியதோர் வித்தின்
ஆலம் யாவையும் ஒடுங்கியே அவதரித் ததுபோல்

அருவமும் ஆகுவன் உருவமும் ஆகுவன்அரு
உருவும் இல்லதோர் தன்மையும் ஆகுவன் ஊழின்
கருமமும் ஆகுவன் நிமித்தமும் ஆகுவன் கண்டாய்
பரமன் ஆடலை யாவரே பகர்ந்திடற் பாலார்

வேதக் காட்சிக்கும் உபநிடதத் துச்சியில் விரித்த
போதக் காட்சிக்கும் காணலன் புதியரில் புதியன்
மூதக் கார்க்கும் மூதக்கவன் முடிவிற்கும் முடிவாய்
ஆதிக்கும் ஆதியாய் உயிர்க்குயிராய் நின்ற அமலன்

ஞாலம் உள்ளதோர் பரம்பொருள் நாம் எனப் புகலும்
மாலும் வேதனும் மாயையாம் வரம்பினுள் பட்டார்
மூல மாகிய தத்துவம் முழுவதும், கடந்து
மேலும் உயர்ந்திடும் தனிமுதல்வன் ஆவன்

அன்றி வேறு யார் என்று உணர்ந்து பேசினுன் சிங்க முகன். இவன் முருகனைச் சிறப்பித்துப் பேசிய பேச்சுக் களையும் அவ்வளவு சிறந்தனவாக ஏற்க இயலாது, முருக னது நேர் பகைவனுன சூரபதுமனே முருகனது பெருமை யினை உணர்ந்து போற்றிப் புகழ்ந்திருப்பின்; அது முரு கனது பெருமைக்கு ஒப்புயர்வற்ற காரணமாகத் துலங்கும் என்று நீங்கள் அவாவி இருக்கலாம். உங்கள் அவா அடங்கச் சூரபதுமனும் முருகன் பெருமையினை உணர்ந்து போற்றியதையும் ஈண்டே கூறுவோமாக.

போர்க்களத்தில் முருகப் பெருமானும் சூரபதுமனும் எதிர்த்து நிற்கின்றனர். சூரபதுமன் தன்னை மறந்து முருகப் பெருமானது இளமைக் கோலத்தில் ஈடுபட்டு, அவன் தன் அருமை பெருமைகளை நன்கு உணர்ந்து, போற்றிப் பரவலுற்றனன். அவன் முருகனை நோக்கி,

கோலமா மஞ்சைமீது குலவிய குமரன் தன்னைப்
பாலன்என்றிருந்தேன் அந்நாள் பரிசிவை உணர்ந்தி
லேன் யான்
மாலயன்தனக்கும் ஏனைவானவர்தமக்கு யார்க்கும்
மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம்மூர்த்தி அன்றோ

சூழுதல் வேண்டும் தாள்கள் தொழுதிடல் வேண்டும்
அங்கே
தாழுதல் வேண்டும் சென்னிதுதித்திடல் வேண்டும்தாலு
ஆழுதல் வேண்டும் தீமை அகன்றுநான் இவற்காளாகி
வாழுதல் வேண்டும் நெஞ்சம் தடுத்தது மானம் ஒன்றே

என்று பாராட்டியதைக் கேண்மினே கேண்மின். பகைவனு லேயே இங்ஙனம் பாராட்டப்படும் பெருமை சான்றவன் முருகன் எனில், அவனது பெருமையினை எம்போல்வரால் எங்ஙனம் எடுத்து இயம்பப் பெறும்? ஆகவே, இந்த அள

வில் முருகன் பெருமை என்னும் பொருள் பற்றிப் பேசி முடித்துக் கொண்டு,

அஞ்சு முகம்தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரம் தோன்றில் வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என் றோதுவார் முன்.

என்ற பாடலைப் பாடியும்,

'விழிக் குத்' துணைதிரு மென்மலர்ப்பாதங்கள் மெய்மை குன்று
மொழிக்குத் துணைமுரு காஎனும் நாமங்கள் முன்புசெய்த
'பழிக்குத்' துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
'வழிக்குத்' துணைவடி வேலும்செங் கோடன் மயூரமும்

என்ற அருணகிரியாரது அமுத மொழிகளையும் பாடி முருகனது பங்கயப் பாதங்களைப் பரவிப் போற்றுகின்றேன்.

# வேலின் சிறப்பு

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.

*மெய்யன்பர்களே!*

வணக்கம்; இரண்டாவது நாளாகிய இன்று நமக்குப் பொருளாக அமைந்தது 'வேலின் சிறப்பு' என்பது. வேல் இன்னது என்பதை உங்கட்கு யான் கூற வேண்டுவது இல்லை. இது முருகப் பெருமான் கொண்டுள்ள படைகளில் ஒன்றாகும் என்பது உங்கட்கு நன்கு தெரியும்.

தெய்வங்கள் தம் திருக்கரங்களில் படைகளைக் கொண்டுள்ளமைக்குக் காரணம் அப்படைகளைக் கொண்டு அன்பர்களின் பகைவர்களை அழித்து அன்னார் தமக்கு அருள் தருதற்கே ஆகும். இதனைத் திருமூலர் தம் திருமந்திரத்தில்

கருத்துறை அந்தகன் தன்போல் அசுரன்
வரத்தின் உலகத் துயிர்களை எல்லாம்
வருத்தம்செய் தான்என்று வானவர் வேண்டக்
குருத்துயர் சூலங்கைக் கொண்டுகொன் றானே

என்று அறிவித்துள்ளார். இம் முறைக்கு இணங்கவே முருகப் பெருமானும் தன் திருக்கரத்தில் இவ்வேல் படையினைத் தாங்கி, தன் அடியவர்களின் பகைவர்களை அதனால்

அழித்து, அவர்கட்கு இன்னருள் பாலித்துக் கொண்டுள்ளான்.

முருகப் பெருமான் பல படைகளைக் கொண்டிருந்தாலும் வேற் படைக்குள்ள பெருமதிப்பு ஏனைய படைகளுக்கு இல்லை என அறுதியிட்டு உறுதியாகக் கூறி விடலாம். இது குறித்தே ஈண்டு வேலின் சிறப்பு என்ற தலைப்பில் பேசுதற்குக் காரணமாயிற்று. வேலின் மாண்பைப் பல்லாற்ருலும் உணரலாம். இனி அதன் மாண்பினைச் சிறிது காண்போமாக.

வேல் என்னும் இச்சொல் முதல்நிலை திரிந்த தொழிற் பெயராகும். அதாவது வெல் என்னும் வினைப்பகுதி (முதல் நிலை) வேல் எனத் திரிந்து பெயர்ச் சொல்லாக அமைந்துள்ளது என்பதாம். இதனுல் இப்படை ஒன்றே வெல்லும் தன்மையினைப் பெற்றுள்ளது என்பது புலனுகின்ற தன்ருே? ஏனைய படைகளும் வெல்லுதற்குப் பயன் பட்டாலும், சொல்லும் பொருளும் இயைந்த நிலையில்அப்படைகளின் பெயர் அமையா திருத்தலை நன்கு ஓர்தல் வேண்டும்.

வெல்லும் சிறப்பு இதன்பால் இருத்தலினுல்தான், மக்களும் தங்கள் பெயரைத் தங்கவேல் என்றும், கதிர்வேல் என்றும், வேலாயுதம் என்றும், வேல் என்றும், மாணிக்க வேல் என்றும் அமைத்துக் கொண்டு, இப்படையின் பெருமையினைப் பார் அறியச் செய்து வருகின்றனர். இப் பெருமை வேறு எந்தப் படைக்கும் இல்லை என்று ஒரு தலையாக உணர்த்தி விடலாம். ஆனுல், ஈண்டு ஓர் ஆசங்கை ஒரு சிலர் உள்ளத்தில் எழக் கூடும்.அதாவது பினகபாணி, சக்கர்பாணி, கோதண்டபாணி, சாரங்கபாணி, (பினகம், கோதண்டம், சாரங்கம் என்பன வில் என்ற பொருளைத் தருவன) என்னும் பெயர்கள் இல்லையோ, அவைகள்

யாவும் ஆயுதத்தின் அடியாக அமைந்த பெயர்கள் அல்லவோ என்று வினவலாம். அப்பெயர்கள் ஆயுதங்களை மட்டும் சுட்டிக் காட்டும் நிலையில் இன்றிப் பாணி என்ற சொல்லுடன் சேர்ந்து வழங்கப்படுதலின், அவ்வளவு தனிச் சிறப்பு அப் படைகட்கு ஏற்பட இடன் இல்லை என்பதை நன்கு அறிதல் வேண்டும். பாணி என்ற சொல்லுடன் கூடிய வழியே அவைகள் மக்கள் பெயராகும் மாண்பினைப் பெறுகின்றன. ஆனால், வேல் என்னும் ஆயுதம் அங்ஙனம் இன்றி, ஆயுதப் பொருளைச் சுட்டும் சொல்லாகவே நின்று மக்கள் பெயராக அமைந்து அப்பெயரைத் தாங்கியவர்களை மாண்புறச் செய்து வருகின்றது. இவ்வாறு கூறுவதில் எவர்க்கேனும் ஐயம் வர இடன் உண்டா? இல்லை அன்றோ?

எந்த விதமான அடைமொழிகளும் அமைத்துக் கூறாத நிலையினும், வேலுக்குத் தனிப் பெருமையுண்டு. மாணிக்கவேல் பிள்ளை என்றோ, தங்கவேல் பிள்ளை என்றோ, கதிர்வேல் பிள்ளை என்றோ கூறப்படுவதோடின்றி வேலுப்பிள்ளை என்று கூறும் நிலையிலும், மக்கட் பெயராகும் வாய்ப்பு இப் படைக்கு உண்டு. அடை மொழிகளுடன் கூற விரும்புவது அவரவர் வேட்கையினைப் பொருத்ததாகும். அடை மொழி கொடுத்து வேலை அலங்கரிக்காமையே அதன் மாண்புக்கு ஓர் அறிகுறியாகும். இதனை அருணகிரியாரது அமுதவாக்கைக் கொண்டும் நிலைநாட்டலாம். கந்தரனு பூதியில்

> ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
> பாடும் பணியே பணியா அருள்வாய்
> தேடும் கயமா முகனைச் செருவில்
> சாடும் தனியா னைச்சகோ தரனே

என்று பாடப்பட்டுள்ள பாடலில், முருகப் பெருமானது ஊர்தியாகிய பரிக்கு "ஆடும்" என்னும்

அடையிணைத்தந்தும், கொடியாகிய சேவலுக்கு 'அணி' என்னும் சிறப்புச் சொல்லும் தந்து பாடிய அருணகிரியார் வேல் என்னும் ஈடும் எடுப்பும் அற்ற படைக்கு எந்த விதமான அடைச் சிறப்பும் தந்து அறிவிக்காததை நன்கு உன்னுதல் வேண்டும். அருணகிரியார் நன்கு சிந்தித்தே வேல் என்னும் வெற்றிதரும் படைக்கு எந்த விதமான அடை மொழிகளையும் அமைத்திலர். அதனையும் பரிக்கும் சேவற்கும் அடை கொடுத்து அறைந்தது போல அறிவித்திருப்பாராயின், அவ்விரண்டு பொருள்களோடு இப் பொருளாகிய படையும் ஒரு பொருளாகும்; அவற்றோடு ஒருங்கு வைத்து எண்ணப்படும் நிலையில் நின்று விடும். ஆனால் வேல் தன்னேரில்லாத் தனிச் சிறப்புப் பெற்றுள்ளமையின் அதனைத் தனித்துப் பிரித்துக் காட்ட வேண்டி அடைமொழி கொடுத்து அறிவியாது சென்றனர் அறிஞர் பெருமானாகிய அருணகிரியார்.

அடை மொழி கொடுப்பதுதானே சிறப்பு? அடைமொழியினால் அன்றோ பொருளின் சிறப்புப் பொலிவதாகும் என ஒரு சிலர் கருதக் கூடும். சிற்சில பொருள்களுக்கு அடை கொடுத்துத்தான் சிறப்பிக்க வேண்டியுள்ளது. ஆனால், ஒரு சில பொருள்களுக்கு அடை மொழி கொடாமல் இருப்பதே அவற்றின் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாகும். இதனை மணிவாசகப் பெருமானார் பாடிய திருக்கோவையாரில் ஒரு பாடலைப் படித்தும், அதற்கு விளக்க உரை கண்ட பேராசிரியரது பேருரையைக் கொண்டும் நன்கு தெளிந்து கொள்ளலாம்.

திருவளர் தாமரை சீர்வளர் காவிகள் ஈசர் தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்
கொண்டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியின் ஒல்கி அனநடைவாய்ந்
துருவளர் காமன்தன் வென்றிக் கொடிபோன்றொளிர்கின்றதே

என்பது அத் திருக்கோவையார் பாடல்.

இப் பாடலில் தாமரை என்னும் சொல் முகத்தையும், காவிகள் என்னும் கூற்று கண்களையும், குமிழ் என்னும் கிளவி மூக்கினையும், கோங்கு என்னும்மொழி முலையினையும், காந்தள் என்னும் பதம் கையினையும் சுட்டிக் காட்டும் சொற்களாம்.

இங்கே காட்டப்பட்ட உறுப்புக்களைச் சுட்ட கருவியாக நின்ற சொற்களாகிய தாமரை என்னும் சொல் திருவளர் என்ற அடையினைக் கொண்டும், காவிகள் என்னும் கூற்றுச் சீர்வளர் என்னும் அடையினைக் கொண்டும், குமிழ் என்னும்மொழி பூங்குமிழ் என்னும் அடையுடனும், காந்தள் என்னும் கிளவி பைங்காந்தள் என்ற சிறப்புடனும் பேசப் பட்டிருந்தும், அமிர்த கலசமாகிய கொங்கையினை உணர்த்தி நிற்கும் பதமாம் கோங்கு என்பது எந்த வித மான அடைமொழியும் தந்து, உரைக்கப் படாமல் இருத் தலை ஈண்டு நன்கு சிந்தித்தல்வேண்டும். இங்ஙனம் அடை கொடுத்துப் பேசப்படாமைக்குரிய காரணம் இன்னது என் பதைப் பேராசியர், 'மகளிர்க் குறுப்பில் சிறந்த உறுப் பாகிய முலைக்கு உவமையாகப் புணர்க்கப்பட்ட கோங் கிற்கு அடை கொடுக்கக் கடவதன்றோ எனின், அடை கொடுப்பின், பிற உறுப்புக்களுடன் இதனையும் ஒப்பித்த தாம். ஆகலான், இதற்கு அடை கொடாமையே முலைக்கு ஏற்றத்தை விளக்கி நின்றது. அஃது முற்கூறிய வகை யில் திருக்கோயில், திருவாயில், திருவலகு என்றவற்றிற்கு நாயகராகிய நாயனாரைத் திருநாயனார் என்னாதது போல எனக்கொள்க' என்று விளக்கிப் போந்தார். இவ்விளக் கத்தைக் கண்ட நாம் வேலுக்கும் அடை வேண்டாமையே அதன் பெருமைக்கு ஏற்ற சான்ருகும் என்று அறிகிரேம் அல்லமோ?

இத்தகைய பெருமைசான்ற வேல் முருகனுக்கே உரித்தாகிய படையாகும். இன்னின்ன தெய்வங்கட்கு உரியபடை இது இது என்று நிகண்டு எடுத்துக் காட்டுகிறது.

"கொன்றையார்க்குப் பரசொடுகடிய சூலம் பிறைகவில் [படைகள்"

"மாலுக்குச் சிலை ஆழி சங்குவாள் கதை படையைந் தாகும்"

"அறுமுகன் உறுபடைவேல்"

என்பன அந்நிகண்டு அடிகள்.

வேல், எஃகம், ஞாங்கர், உடம்பிடி, சத்தி என்பன வேலைக்குறிக்கும் சொற்கள். இவற்றுள் வேலுக்குச் சத்தி என்னும் பெயருண்மையினை நன்கு சிந்தித்தல் வேண்டும். படைகளுக் கெல்லாம் இப்படை அரசாக இருத்தலின் இது சத்தி என்றும், படை அரசு என்றும் கூறப்படும் பெருமை சான்றது. இப்படை, எப்படைக்கும் நாயகமாதலைக் கந்த புராணம்,

ஆயதற்பின்னர் ஏவின் மூதண்டத்தையும், பெரும் பூதமும் அடுவது
ஏய பல்லுயிரும் ஒருதலை முடிப்ப தேவர் மேல் விடுக்கினும் அவர்தம்
மாயிரும் திறனும் வரங்களும் சிந்தி மன்னுயிர் உண்பதெப்படைக்கும்
நாயக மாவதொருதனிச் சுடர்வேல் நல்கியே மதலை கைகொடுத்தான்

என்றும்,

தேயுவின் எடுத்த அண்டத் திறங்களும் பிறங்குஞாலத்து
ஆயிரம் கோடி அண்டத்து அங்கியும் ஒன்றிற்று அன்ன
மீயுயர்ந்து ஒழுகி ஆன்றோர் வெருவரும் தோற்றம்கொண்டு
நாயகன் தனது தெய்வப்படைக்கலம் நடந்ததன்றே

என்றும் இயம்புகின்றது.

# வேலின் சிறப்பு

பாம்பன் சுவாமிகள் "அரன்பால் படை அரசை வாங்கினான்" என்று பாராட்டுகின்றார். தண்டபாணி சுவாமிகள் இவ்வேலின் மாண்மைக் குறிப்பிடும்போது, வேலாயுதத்திற்கு மேலாயுதம் என்ன வேறு இல்லையே என்றும், "சத்தி படைத்தெய்வமே" என்றும் சிறப்பித்துச் செப்பியுள்ளார்! அருணகிரியார் "பழநிப்பதியில் திருஞான பூரண சத்தி தரித்தருள் பெருமாளே" என்று போற்றிப் புகழ்ந்துள்ளார்.

அருணகிரியார் தம் திருவாக்கின் மூலம் சத்தியாம் வேல் இன்னது என்பதை விளக்கியும் போந்தனர். அதனைத் திருஞான பூரண சத்தி என்றனர். ஆம், சத்தி ஞானமேயாகும். "சத்திதான் தடையிலாஞானம் ஆகும்" என்பது சிவஞான சித்தியார். ஆகவே ஞானமாகிய அறிவையே முருகன் தன் திருக் கரத்தில் படையாகக் கொண்டனன் என்பது புலனாகின்றதன்றோ! இதனால் அஞ்ஞானமாகிய இருளை அம்மெஞ்ஞான மாகிய சத்திவேல் போக்கும் என்பது, தெரியவருகின்றதன்றோ? வேல் மருளைப் போக்கி அருளை நல்கும் என்று கூறலாம் அன்றோ.

இக் கருத்தைக் கச்சியப்ப சிவாசாரியர் சூரபதுமன் சம்ஹாரத்தின் மூலம் நமக்கு நன்கு விளக்கிக் காட்டியுள்ளார்.

ஏயென முருகன் தொட்ட இருதலை படைத்த ஞாங்கர்
ஆயிர கோடி என்னும் அருக்கரில் திகழ்ந்து தோன்றித்
தீயழல் சிகழி கான்று சென்றிட அவுணன் கொண்ட
மாயிருள் உருவம் முற்றும் வல்விரைந்து அகன்றதன்றே

என்றும்,

விடம்பிடித்து அமலன் செங்கண் வெங்கனல்உறுத்திப்பாணி
இடம்பிடித் திட்ட தீயில் தோய்ந்துமுன் இயற்றிஅன்ன
உடம்பிடித்தெய்வம் இவ்வாறு உருக்கெழு செலவின்ஏகி
மடம்பிடித்திட்ட வெஞ்சூர் மாமுதல் தடிந்ததன்றே

என்றும் பாடிய வாற்றால் பார்க்கலாம்.

இவ்வாறு சூரனைக் கொடுமை செய்தது இவ்வேல் என்றதனால், அவ்வேல் கொடுமைக்குணமே வாய்ந்ததோ என்று கருதுதல் கூடாது. இங்ஙனம் செய்வது அதன் மாட்டுள்ள மறக் கருணையே அன்றி வேறன்று. போற்றுதர்க்கு அறக் கருணை புரிந்து அல்லார்க்கு நிகரில் மறக் கருணை புரிந்து ஆண்டு கொள்ளுதல் இயல்பு என்க.

வேல் கொடுமை சான்றது என்று எண்ணுதல் கூடாது. அஃது அருள் உருவாய் அமைந்திருப்பது என்று நம்மனோர் அறியவே கச்சியப்ப சிவாசாரியர் விழிப்புடன்,

> புங்கவர் வழுத்துச் சிந்தும் பூமழை இடையின் ஏகி
> அங்கியின் வடிவம் நீங்கி அருள் உருக்கொண்டு வான்தோய்
> கங்கையில் படிந்துமீண்டு கடவுளர் இடுக்கண் தீர்த்த
> எங்கள்தம் பெருமான் செங்கை எய்தி வீற்றிருந்த தவ்வேல்

என்று அறிவுறுத்திச் சென்றார்.

மேலும், வேல் அலங்காரம் என்னும் நூல், இதன் அருளின் தன்மையினையும் வடிவத் தோற்றத்தையும், "திருவருள் சத்தி வடிவான வேல் படை எண்ணில், வேதாகமங்கள் பகர்ந்த தெய்வத் துருவம் எல்லாம் அதுதானு விளங்கிடும் உண்மையதே" என்று வாயார வழுத்துகிறது. இதனால் நமது வேலை, வேலை வணங்க வேண்டுவதன்றோ? இதனையே நம் முன்னோர்கள்,

"தோகை மேல்உலவும் கந்தன் சுடர்க்கரத்தில் இருக்கும் வெற்றிவாகையே சுமக்கும் வேலை வணங்குவது நமக்கு வேலை," என்று கட்டளையிட்டுச் சென்றுள்ளார். இங்ஙனம் வேலைப்பணியும் வேலையுடைய பெரியார்க்கும் பிறப்பில்லை என்பது ஆன்றோர் துணிவு. இதனை "வேற் படையைப்

பேணிப் பரவும் பெரியார்க்குப் பின்னைப் பிறப்பில்லையே'' என்ற அடி விளக்கி நிற்கிறது.

வேல் என்னும் மொழியின் பொருள் வெல்லும் பண்பைப் பெற்றது என்பது இருந்தாலும், அச்சொல்லுக்கு மற்றும் ஒரு பொருள் சீரிய முறையில் பொருந்தியுள்ளது என்பது சீவக சிந்தாமணிப் பாடலால் தெரிய வருகிறது.

வீழ்ந்து மயில்போல் விசயைக் கிடந்தாளைத்
தாழ்ந்து பலதட்பம்தாம் செய்து வேல் பெற்றுப்
போழ்ந்த கன்ற கண்ணாள்புலம்பா எழுந்திருப்பச்
சூழ்ந்து தொழுதிறைஞ்சிச் சொன்னார் அவன்திறமே

என்பது அச் செய்யுள். இதில் வரும் 'வேல் பெற்று' என்னும் தொடர்க்கு விளக்கம் கூற வந்த உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர், 'உணர்ச்சி பெற்று' என்று எழுதியுள்ளார். இதனால் வேல் உணர்ச்சி தருவது என்பதும் ஊக்கம் ஊட்டுவது என்பதும் ஆக்கம் அளிப்பது என்பதும் ஆகிய பொருள்களுக்கெல்லாம் இடமாய் இருட்பது என்பது போதருகின்றதன்றோ.

இத்துணைக்கும் பெருங் காரணமாக இருக்கும் வேல் அன்பர்களின் பெருருட்டு இன்னின்ன செய்யவல்லன என்பதும் திருமுருகாற்றுப் படை என்னும் நூலில் காணும் நக்கீரர் வாக்கினாலும் தெளியலாம்.

குன்றம் எறிந்ததும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும்—இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும் பில் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்.

அன்பர்களை ஆபத்தில் காக்கவே ஆறுமுகன் வேலைத் தாங்கியுள்ளான் என்பதை நக்கீரர் ''வெஞ்சமரில் அஞ்சல்

என வேல் தோன்றும்'' என்றும் கூறியுள்ளார். அருணகிரியார் ஆறுமாமுகனது வேல் செய்த வீறுடைச் செயல் களையும், அன்பர்கட்கு அது துணையாய் நிற்பதையும் பாடுங்காலத்து,

செருவிலகும் அசுரர் மங்கக்
குலகிரிகள் நடுநடுங்கச்
சிலுசிலுவென அலைகுலுங்கத் திடமான

செயமுதவும் மலர்பொருங்கைத்
தலம்இலகும் அயில் கொளும்சத்
தியைவிடுதல் புரியும் முன்பில்—குழகோனே

என்றும்.

பருத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு
கவிப்புலவன் இசைக்குறுகி வரைக்குகையை
இடித்து வழிகாணும்
...க்கும் முனிவர்க்கும் மகபதிக்கும்விதி
...க்கும் அரிதனக்கும் நரர்தமக்கும் உறும்
இடுக்கண் வினைசாடும்
...திக்கும் அடியவர்க்கொருவர் கெடுக்கஇடர்
நினைக்கின் அவர் குலத்தைமுதல் அறக்களையும்
எனக்கோர் துணையாகும்
...க்கின்நமன் முடுக்கவரின் எருக்குமதி
தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை
கழற்கு நிகர்ஆகும்
தனித்துவழி நடக்கும் எனதிடத்தும்ஒரு
வலத்தும் இருபுறத்தும் அருகடுத்து இரவு
பகல் துணையாகும்
சிறுத்தணியில் உதித்தருளும் ஒருத்தன் மலை
விருத்தன் எனது உளத்திலுறை கருத்தன்மயிலை
நடத்துகுகன் வேலே

என்று வாயாரப் புகழ்ந்து பாடியுள்ளார்.

இங்ஙனம் பல்லாற்றாலும் அன்பர்க்கு உதவு வேலின் சிறப்பினை மேலும் எடுத்து இயம்புதற்கு எற்கு வன்மை யேது? இத்துடன் இன்று வேலின் சிறப்பினைச் செப்பி நிறுத்திக்கொண்டு,

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

என்று போற்றி அமைகின்றேன்.

# மயிலின் மாண்பு

கார்மா மிசைகா லன்வரின் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரி தலாரியெனும்
சூர்மா மடியத் தொடுவே லவனே

*மெய்யன்பர்களே !*

மூன்றும் நாள் சொற்பொழிவாகிய இன்றைத்தினம் நமக்குப் பொருளாக முன்னிற்பது மயிலின் மாண்பு என்பதாகும். மெய்யன்பர்கட்குப் பெருந்துணையாக இருப்பவை வேலும் மயிலும் ஆதலின், வேலின் சிறப்பைப் பற்றிப் பேசிய பிறகு, மயிலின் மாண்பைப்பற்றி அடுத்தாற்போல் பேசும் கடப்பாடு பொருத்தமானதேயாகும். மேலும், அன்பர்களை இவ்விரண்டும் ஆபத்துக் காலத்தில் காப்பவை என்பதற்காகவே, வேலும் மயிலும் துணை என்ற தொடரும் நாட்டில் வழங்கப்பட்டு அன்பர்கள் வாயிலும் எப்போதும் கூறப்பட்டு வருகின்றது.

வேல் முருகப்பெருமானுக்குப் படையாக இருந்து பயன்பட்டு வருவதுபோல, மயில் அவனுக்கு ஊர்தியாக இருந்து உதவி புரிந்து வருகிறது. வேல் முருகனுக்கு ஆயுதமாக இருப்பதனுல் எங்ஙனம் சீரும் சிறப்பும் உற்றுத் திகழ்கிறதோ அது போலவே, மயிலும் சண்முகப்

பெருமானுக்கு ஊர்தியாக இருந்து அருமையும் பெருமை யும் நிறைந்ததாக விளங்குகிறது.

ஈண்டு நாம் ஒன்றை அறிந்து கொண்ட பிறகே மயி லின் மாண்பைப் பேச மேலே செல்லுதல் வேண்டும். முரு கப் பெருமானுக்கு உரிய வாகனமாக மயிலினைக் குறிப் பிட்டோம். மயில் ஒன்றுதான் அவனது வாகனம் என்ற ஐயம் சிலர் உள்ளத்தில் எழலாம் அன்றோ? மயில் மட்டும் அவனுக்குரிய வாகனம் என்பதில்லை. ஆம், முருகப்பெரு மானுக்கு கரியும் மறியும்கூட, அதாவது யானையும் ஆடும் கூட வாகனங்களாக அமைந்துள்ளன. யானை முருகப் பெருமானுக்கு ஊர்தியாக இருக்கிறது என்பதை நம் அருணகிரியார்,

செழுமதகரி நீல கோமள அபநவ மயில்ஏறு சேவக
செயசெய முருகா கோவளர் கந்தவேளே

என்று யானையினைச் செழுமதகரி என்றும், மயிலினை அபநவ மயில் என்றும் அடை கொடுத்துப் பாடிய அழகினை நாம் உன்னி உன்னி உவகை கொள்ளுதல் வேண்டும்.

ஆறுமுகப்பெருமானுக்கு ஆடும் வாகனமாக அமைந் ததைக் கந்த புராணத் தகரேறு படலத்தால் நன்கு தெளிய லாம். (தகர்-ஆடு) நாரதர் சிவப்பிரீதியாக யாகம் ஒன்று செய்தார். அவ் யாகத்தில் ஓர் ஆடு தோன்றியது. அது யாவரையும் துன்புறுத்தத் தொடங்கியது. அதுபோது முருகப்பெருமான் அதன் கொட்டத்தை அடக்கி அதனை வாகனமாகக் கொண்டனர். அங்ஙனம் ஊர்தியாகக் கொள்ளுமாறு தேவர்களும் முனிவர்களும் வேண்டிக் கொண்டனர் என்பதும், அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி அதனை ஊர்தியாகக் கொண்டனர் என்பதும்,

ஏர்தரு குமரப் புத்தேள் இவ்வகை இசைப்ப அன்னோர்
கார்தரு கண்டத் தெந்தை காதல வேள்வித் தீயில்
சேர்தரு தகரின் ஏற்றைச் சிறிய ரேம் உய்யும் ஆற்றால்
ஊர்திய தாகக் கொண்டே ஊர்ந்திடல் வேண்டு என்றார்
என்னலும் தகரை அற்றே ஆனமாக் கொள்வம் பார்மேல்
முன்னிய மகத்தை நீவிர் முடித்திரென் றருள யார்க்கும்
நன்னய மாடல் செய்யும் நாரதன் முதலோர் யாரும்
அன்னதோர் குமரன் எந்தை அடிபணிந் தருளல்
போந்தார்

என்னும் கந்த புராணச் செய்யுட்களால் தெரியவருகின்றன.

ஈண்டு மற்றும் ஒரு குறிப்பினையும் தெளியவேண்டிய வராய் உள்ளோம். ஆடு ஆறுமா முகனுக்கு ஊர்தியாக அமைந்தது. நாரதன் வேள்வி, காரணமாக என்று புரா ணத்தின் மூலம் கண்டோம் அல்லமோ? ஆனால், பரிபாடல் என்னும் பழம்பெரு நூல் அதாவது சங்ககால நூல் இந்த ஆடு இயமனால் முருகப்பெருமானுக்குக் கொடுக்கப்பட்டது என்ற அரிய குறிப்பை வெளிப்படுத்துகிறது. அக் குறிப்புக் காணப்படும் இடத்திலேயே மற்றும் சில அரிய குறிப்புக்களையும் தெரியவருகின்றோம். அவையே, அக் கினி பகவான் ஆறுமாமுகனுக்கு ஆனை ஈந்தது; இந்திரன் இனியமா முருகனுக்கு இன்மயில் ஈந்தது என்பதாம்.

அல்லல்இல் அனலன்தன் மெய்யில் பிரித்துச்
செல்வ வாரணம் கொடுத்தோன் வானத்து
வளம்கெழு செல்வன்தன் மெய்யில் பிரித்துத்
திகழ்பொறிப் பீலி அணிமயில் கொடுத்தோன்
திருந்துகோல் ஞமன் மெய்யில் பிரித்து
இருங்கண் வெள்யாட்டு எழில்மறி கொடுத்தோன்

என்பன அப்பரிபாடல் அடிகள்.

மேலே காட்டப்பட்ட அடிகளில் மயில் ஊர்தி சூரபது மன் முருகப்பெருமானிடம் தோற்று மயில்வாகனமாக மாறி

அன்னுனுக்கு வாகனமாக அமைதற்குமுன்பே மயில்வாகன மாயிற்று என்பது புலனுதலைக் காண்க. இந்தக் காரணம் கொண்டே கச்சியப்ப சிவாசாரியர், போர்க்களத்தில் சூரன் முன்பு காட்சி அளித்த முருகப் பெருமானைக் குறிப்பிடும்போது, "கோலமா மஞ்சைமீது குலவிய குமரன்" என்று குறிப்பிட்டுள்ளார். இந்த மயிலே அவனுக்குக் கொடியாக உள்ளது என்பதை சங்க நூல், "மணிநிற மஞ்சை ஓங்கிய புட்கொடி" என்கிறது. வாகனமாக வாய்ந் திருப்பதைப் பிணிமுகம் ஊர்ந்த வெல்போர் இறைவ என்றும் சங்க நூல் தெரிவிக்கும். (பிணி முகம்—மயில்) கந்தப் பெருமான் வாகனங்கள் இன்னின்ன என்பதையும் அவை எங்ஙனம் அவனுக்கு அமைய நேர்ந்தன என்பதையும் கண்டோம். இனி மயில் வாகனத்திற்கிருக்கும் தனிச் சிறப்பைக் கருதுவாம். மயில் மக்களால் வணங்குதற்குரிய பொருள் என்பது அருணகிரியார் கருத்து. அவர் தம்திருவாக்கில்,

பரவி உனதுபொற் கரமும்முத்
தணியும் உரமும் மெய்ப்பிரபையும் மருமலர்ப்
பதமும் விரவுகுக் குடமும் மயிலும் உருபரிவாலே

என்றருளிப் போந்தார். இவ்வாறு மயில் வணங்குதற்குரிய பொருளாக அமைதற்குக் காரணம் உண்டு. மயில் பிரணவ வடிவமாக இருப்பது. இதனை அருணகிரியார் "அவளை அணைதர இனிதின் ஓங்கார பரியின் மிசை வருவாயே" என்று வேண்டும் வேண்டுகோளால் விளங்கிக் கொள்ளலாம். இறைவனைத் தலைவனுகவும், உயிர்களைத் தலைவியாகவும் கொண்டு பாடுகின்ற மரபு திருக்கோவையார், திருவாய்மொழி போன்ற நூல்களில் பரக்கக் காண்கின்றோம். ஆதலின், ஈண்டு அவளை என்பது முருகனும் இறைவனைக் கட்டி அணைத்து இன்புற விழையும் சீவனும்

தலைவியே ஆவாள். பரி என்றது ஈண்டுக்குதிரை என்னும் பொருளில் இன்றி, ஊர்தி என்ற பொருளில் நின்று மயிலாகிய ஊர்தியை உணர்த்தி நிற்கிறது. இப்பொருட்டாதலை "ஆடும்பரி" என்னும் கந்தர் அனுபூதிப் பாடலாலும் அறியலாம். பிரணவமாம் பெருமந்திரத்தின் முதல் எழுத்து ஓ காரமாதலின் "ஓகாரம் பரி" என்று ஈண்டுக் குறித்தருளினர்.

முருகப்பெருமான் ஊர்தியாம் மாமயில் ஓங்காரமாம் பிரணவ நிலையில் மட்டும் இயங்காது, மகாமந்திரவடிவமாகவும் இயங்கவல்லது என்பது ஆன்றோர்களது முற்ற முடிந்த முடிபாகும். இதனையும் வாக்கிற்கு அருணகிரியார் என்று வழுத்துதற் குரிய அப்பெரியார்,

ஆதியொடும் அந்தம் ஆகிய நலங்கள்
ஆறுமுகம் என்று தெளியேனே
ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்ட
தாடுமயில் என்பதறியேனே

என்று பாடியுள்ளார்.

ஈண்டு அருணகிரியார் தாம் ஆடுமயில் மந்திர ரூபம் ஆனது என்பதை அறியாமல் இருந்ததாகப் பாடிக் காட்டுவது, தமது அறியாமையினை உணர்த்துதற்கு அன்று. உலகமக்கள் இந்த உண்மையினை உணராமல் இருக்கின்றனரே என்று அவர்கள்பால் இரக்கம் கொண்டு அவர்கள் சார்பில் அவர்கள் தம் குற்றத்தைத் தம்மாட்டு ஏற்றிக்கொண்டு இவ்வாறு மொழிந்ததாகும். இது குழந்தைகட்கு நோய் வந்துற்றபோது தாய்மார் மருந்துண்டு பத்திய முறைகளைக் கையாளுவது போன்றதாம்.

இங்ஙனம் அருமைக்கும் பெருமைக்கும் உரிய மயிலின் குரலாலும் மக்களுக்குப் பயனுண்டு; அக்குரல் தணந்திருப்

போரையும், சேர்ந்து வாழ்மின் என்று அழைத்துச் சேர்ப்பிக்கும் தன்மையது என்பதைப் பரிபாடல் என்னும் பழம் பெருநூல் "தோகையார் குரல் மணந்து தணந்தோரை நீடன்பின் வாரும் என்பவர் சொற் போன்றனவே" என்ற அடிகளில் காணவும்.

எங்ஙனம் ஆபத்தான வேளையில் வேல் தோன்றிப் பெருந்துணை செய்கின்றதோ, அது போல மயிலும் ஆபத்தான வேளைகளில் முருகப் பெருமானைத் தன்மீது சுமந்து வந்து, அருள் செய்ய வல்லது. இதனை அருணகிரியார் வரலாற்றுக் குறிப்பின் ஒரு பகுதியினால் அறிந்து கொள்ளலாம்.

திருவண்ணாமலையில் சம்பந்தாண்டான் என்பான் ஒருவன் இருந்தான். அவன் தேவி உபாசகன். அதனால் பார்வதி தேவியின் திருவருளைக் கைவரப் பெற்றவன். அருணகிரியார் முருகப் பெருமான் திருவருளில் தேங்கித் திளைத்தவர் என்று யான் கூறவேண்டுவதில்லை. இவ்விருவரும் பிரபுட தேவ மகாராஜன் காலத்தவர். அவனது சபையினை அலங்கரிக்கும் புலவர்களாகவும் திகழ்ந்தனர். ஒருமுறை சப்பந்தாண்டான், தன் தனிச் செருக்கால் தானே தெய்வத் திருவருள் பெற்றவன் எனத் தற்பெருமை பேசிக் கொண்டனன். தன்னால் தேவியையும் கூடக் காட்டமுடியும் என்றும் கழறினன். அருணகிரியார் அடக்கமாகத் தாம் ஆறுமா முகனைக் காட்ட இயலும் என இயம்பினர்.

மன்னன் இவ்விருவர் தம் உரைகளைக் கேட்டான். உடனே 'யார் யார் தம்தம் உபாசனா மூர்த்திகளை இவ்வரச சபையில் வரவழைக்கின்றனரோ, அவர்கள் தாம் பெரியவர்' என்று பகர்ந்தனன். அவ்வளவுதான், சம்பந்தாண்டான்

தேவி மந்திரத்தை உச்சரிக்கத் தொடங்கினான். பல கால் உச்சரிக்கத் தொடங்கினான். முருகப் பெருமான் தேவி யாரைச் சிறிதும் அப்புறம் இப்புறம் செல்ல ஒண்ணு நிலையில் அவள் தன் மீதமர்ந்து கொஞ்சிக் கொண்டிருந்தான். இக்கொஞ்சு மொழியில் ஈடுபட்டிருந்த தேவி சம்பந்தாண்டான் முன் வந்து காட்சி அளிக்கும் வாய்ப்பினைத் தாராது ஒழிந்தார். ஆகவே, சம்பந்தாண்டான் தோல்வியுற்றனன். உடனே அருணகிரியார் முகப்பெருமானை தம்முன் வருமாறு

சந்தித் தரஹர சிவசிவ சரணென
 கும்பிட் டிணையடி அவைஎன தலைமிசை
தங்கப் புளகிதம் எழஇரு விழிபுனல் குதிபாயச்

சம்பைக் கொடியிடை விபுதையின் அழகுமுன்
 அந்தசத் திருநடம் இடுசரண் அழகுற
சந்தச் சபைதனில் எனதுளம் உருகவும் வருவாயோ

என்று பாடினார். ஆனால் சம்பந்தாண்டான் தேவியை மந்திர ரூபம் வழிபட்டு முருகனைச் சபைமுன் வராதவாறு செய்து தடுக்க முயன்றான். இதனை உள்ளுணர்வால் உணர்ந்த அருணகிரியார், மயிலை இணைத்து முருகனை வருமாறு வேண்டத் தொடங்கினார். அங்ஙனம் வேண்டி நின்ற திருப்பாடல்,

உதயதாம மார்பான ப்ரபுடதேவ மாராஜன்
 உளமும் ஆட வாழ்தேவர்—பெருமாளே
அதலசேடனார் ஆட அகில மேரு மீதாட
 அபின காளி தானாட—அவளோடன்று
அதிரவீசி வாதாடும் விடையில் ஏறு வாராட
 அருகுபூத வேதாளம்—அவையாட
மதுர வாணி தானாட மலரின் வேதனார் ஆட
 மருவு வானுளோர் ஆட—மதியாட
வனச மாமியார் ஆட நெடிய மாமனார் ஆட
 மயிலும் ஆடி நீயாடி—வரவேணும்

இவ்வாறு பாடிவேண்டியதும் உடனே முருகப் பெருமான் மயில்மீது இவர்ந்து மன்னன் சபையில் தோன்றிக் காட்சி அளித்தனன். இதனை, அருணகிரியார் சமயம் வாய்க்கும் போதெல்லாம் தம் திருப்புகழில் குறிப்பிட்டே சென்றுள்ளார்.

உலகினில் அனையவர்கள் புகழ்வுற அருணையில்
ஒருநொடிதனில் வரும்—மயில்வீரா

என்றும்,

சயிலம் எறிந்தகை வேல் கொடு
மயிலினில் வந்தெனை ஆட்கொளல்
சகம் அறியும்படி காட்டிய—குருநாதா!

என்றும் பாடிப்பரவசமுற்றுள்ளார்.

மேலே காட்டிய நிகழ்ச்சி உண்மையானது என்பது அனையவர்கள் புகழ்வுற அருணையில் வரும் மயில் வீரா என்றும், மயிலினில் வந்தெனை ஆட்கொளல் சகம் அறியும் படி காட்டிய குருநாதா என்றும் பிரபுட தேவ மாராஜன் உளமும் ஆட வாழ்தேவர் பெருமாளே என்றும் திகழும் அடிகளால் தெளிவாதலைக் காணவும். ஆகவே பகையைத் தடுப்பதற்கு மயில் பெருந்துணையாகிறதல்லவா? இதனால் அன்றோ உலகில் வேலும் மயிலும் துணை, என்ற தொடர் நிலவி வருகிறது. இது குறித்தன்றோ சிதம்பர சுவாமிகளும் மயிலும் அயிலும் கொண்டு வன்பகை தணிக்கலால் என்றருளிச் செய்தனர்.

இயமபயத்தினின்றும் மீளுதற்கும் இம்மயில் அருந்துணையாக இருக்கவல்லது. இயமனது வாகனம் இன்னது என்பது உங்கட்குத் தெரியும். அது, எருமைக்கடா. அவனது தோற்றத்தைப் பற்றியும் கூறவேண்டுவதில்லை. அவனது தோற்றம் பயங்கரமான தோற்றம். இந்தத்

தோற்றத்தோடும் வாகனத்தோடும் வந்தால் யார்தாம் அஞ்சுரூர்? எவரும் அஞ்சுவர். இந்த நேரத்தில் அஞ்சாத நிலையினை அளிக்கவல்லது மயூரமே ஆகும். இந்த உண்மை தெரிந்தே அருணகிரியார்,

கார்மா மிசைகா லன்வரின் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார் பவலா ரிதலா ரியெனும்
சூர்மா மடியத் தொடுவே லவனே

என்று வேலனை வேண்டி நின்ருர். (கலபத்தேர்-மயில்.)

அருணகிரியார்தாம் இந்த உண்மை அறிந்து உரைத்தார் என்பது இல்லை. திருப்போரூர் சிதம்பர சுவாமிகளும் இந்நிலையினை நன்கு அறிந்து அவரும் தம் அனுபவ மொழியில்,

காலன் செங்கட் கடாவினில் ஏறியே
கயிறு வீசிப் பிடியாமுனம் எனை
வேலும் செங்கையில் ஏந்தி மயில்மிசை
விரைவினில் வந்து உவந்து அஞ்சல் என்ருளுவாய்
ஆலமுண்ட களத்தரிடத்துறை
அரிவை கொஞ்சுற கொஞ்சுபைங்கிள்ளையே
தாலம் பாளை மதுக்குடம் ஏந்திய
சமராபுரிச் சண்முக வேலனே

என்று பரவி நின்ருர்.

இவ்விருவர்தம் திருவாக்குகளினுல் மயிலுக்கு அச்சம் தரும் பொருள்களையும் அடக்கிஆளும் வன்மை உண்டு என்பது தெளிவாகின்றதன்ருே? மேலும் இம்மயிலின் மாண்பு இத்தகையது என்று கூறக் கருதிய அருணகிரியார்,

சேலில் திகழும் வயல் செங்கோடை-வெற்பன் செழுங்கலவி
ஆலித் தனந்தன் பணமுடி தாக்க அதிர்ந்ததிது
காலிற் கிடப்பன மாணிக்க ராசியும் காசினியைப்
பாலிக்கும் மாயனும் சக்ராயுதமும் பணிலமுமே

என்று பாடியருளினர்.

மேலும் இம்மயிலின் மாண்பினை உரை விழைவார் மயில் விருத்தம் என்னும் நூலில் பரக்கக்காண உங்களை வேண்டுகிறேன். அதில் மயிலின் சிறப்பு,

சிந்தா மணிக்கலச கரகட கபோலத்ரி
யம்பக விநாயகன்முதற்
சிவனைவலம் வரும்அளவிலே உலகடைய நொடியில்வருடு
சித்ரக கலாப மயிலாம்

என்றும்

சேடன்முடி திண்டாட ஆடல்புரி வெஞ்சூரர்
திடுக்கிட நடிக்கும் மயிலாம்

என்றும்

விழிபவுரி கவுரிகண் டுளமகிழ விளையாடும்
விஸ்தார நிர்த்த மயிலாம்

என்றும்

வேலைச் சுறச் சூரர் நடுக்கம் கொளச் சிறகை
வீசிப் பறக்கும் மயிலாம்

என்றும்

கீர்த்திமா அசுரர்கள் மடியக்ர வுஞ்சகிரி
கிழிபட நடாவு மயில்

என்றும்

கொடியநிசி சரருதரம் எரிபுகுத விபுதர்பதி
குடி புகுதநடவு மயில்

என்றும்

துரககஜ ரதகடக விகடநட நிருதர்குல
துஷ்டர்நிஷ் டுர மயில்

என்றும், குறிப்பிட்டிருப்பது கொண்டு தெளியவும் இவ்வாறு பலசிறப்பும் பெருமையும் தரும்மயிலை நாம் பரவ வேண்டியது கடமையன்றோ? அப்படிப்பரவவே பெருங் கருணைகொண்டு அருணகிரியார் மயில் விருத்தம் பாடி அருளினர். அம்மயில் விருத்தம் கொண்டு மயிலைப் பரவிஞல் பயன் உண்டு என்று அறிவிக்கும் திருப்பாடலைப் பாடி என்னுடைய சொற்பொழிவினை முடித்துக் கொள்கின்றனன். அதன் கருத்து மயிலைப் பாடிப்பரவுவோர் கல்வி, செல்வம், வாழ்நாள் மிகுதியும் பெறுவர் என்பதாம்.

எந்நாளும் ஒருசுனையில் இந்த்ரநீ லப்போது
இலங்கிய திருத்த ணிகைவாழ்
எம்பிரான் இமையவர்கள் தம்பிரான் ஏறும்ஒரு
நம்பிரான் ஆன மயிலைப்
பல்நாளும் அடிபரவும் அருணகிரி நாதன்
பகர்ந்தஅதி மதுர சித்ரப்
பாடல்தரு மாசறு விருத்தம்ஒரு பத்தும்
படிப்பவர்கள் ஆதி மறைநூல்
மன்நான் முகம்பெறுவர் அன்னம்ஏ றப்பெறுவர்
வாணிதழு வப்பெ றுவரால்
மகரால யம்பெறுவர் உவணம்ஏ றப்பெறுவர்
வாரிட மடந்தை யுடன்வாழ்
அந்நாய கம்பெறுவர் அயிராவ தம்பெறுவர்
அமுதா சனம்பெ றுவர்மேல்
ஆயிரம் பிறைதொழுவர் சீர்பெறுவர் பேர்பெறுவர்
அழியா வரம்பெ றுவரே.

# ஆறுமுகனுக் குகந்த ஆறுதிருப்பதிகள்

ஈனமிகுத் துளபிறவி யணுகாதே
யானும்உனக் கடிமையென வகையாக
ஞானஅருள் தனைஅருளி வினைதீர
நாணம்அகற் றியகருணை புரிவாயே
தானத்தவத் தினின்மிகுதி பெறுவோனே
சாரதிஉத் தமிதுணைவ முருகோனே
ஆனதிருப் பதிகமருள் இளையோனே
ஆறுதிருப் பதியில்வளர் பெருமாளே!

மெய்யன்பர்களே !

இன்று நாம் பேசவேண்டிய பொருள் ஆறு முகனுக் குகந்த ஆறு திருப்பதிகள் என்பது. இறைவன் அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் இருப்பவனே. பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம் அற நிறைகின்ற பரிபூரணானந்தம்தான். இதில் எந்தவித ஐயமும் இல்லை. இல்லையானால் திருக் குறிப்புத் தொண்டர் நாயனார், தாம் ஆடையை ஒலிக்கும் கல்லினின்று இறைவனது கை தோன்றி, அந் நாயனார் தம் தலையினை மோத முயன்ற போது, தடுத்திருக்க முடியுமோ? முடியாதன்றோ? இதனால் இறைவன் எங்கும் நிறைந்திருப்பவன் என்பதற்கு வேறு சான்று வேண்டா என்பது தெளிவன்றோ? என்று

லும், நம் முன்னோர்கள் அத்தகையனை ஆலயங்களில் வைத்து வழிபடுவதை ஒரு தனிச் சிறப்பாகக் கொண் டனர். அங்ஙனம் அவர்கள் அமைத்ததன் நோக்கமும் நல் எண்ணம் கொண்டே யாகும். இறைவனால் கொடுக்கப் பெற்ற உடல் உறுப்புக்கள் அவனுக்குப் பயன்படுவதற்கே ஆகும். திருவள்ளுவர்,

> கோளிற்பொறியில் குணமிலவே எண்குணத்தான்
> தாளை வணங்காத்தலை

என்று கடவுள் வாழ்த்து என்னும் தலைப்பின் கீழ்ப் பாடியருளினார்.

இதன்கண் வந்துள்ள வணங்காத்தலை என்பதற்கு அரியவிளக்கம் காட்ட வந்த பரிமேலழகர், 'காணுதகண் முதலியனபோல், வணங்காத தலைகள் பயனில எனத் தலைமேல் வைத்துக் கூறினார்; கூறினாரேனும் இனம்பற்றி வாழ்த்தாத நாக்களும் அவ்வாறே பயனில் என்பதும் கொள்க' என்று விளக்கி அருளினார். ஆகவே, கால்களைப் பெற்றவர்கள் கடவுளர் ஆலயங்கட்குச் சென்று வலம் வந்து வழிபடல்வேண்டும் என்பது அறிய வருகின்றது தன்றோ? அப்பர் பெருமானும் தாம் பாடியுள்ள திருவங்க மாலையில்,

> கால்களால் பயன்என் கறைக்கண்டன் உறைகோயில்
> கோலக் கோபுரம் கோகரணம்சூழாக் கால்களால் பயன்
> என்!

என்று வினவி மக்களை விழிப்புறச் செய்து ஆலய வழி பாட்டை ஆதரித்துப் பேசினார். இக்கருத்தை உட் கொண்டே, "திருப்பதி மிதியாப் பாதம்சிவனடி வணங்காத்

சென்னி'' என்று விவேக சிந்தாமணியும் விளக்கிக் கூறு கிறது. திருப்பதி என்பது ஈண்டு சிறந்த அழகிய தேவா லயங்கள் என்பதாம்.

இவ்வாறு இறைவன் வீற்றிருக்கின்ற ஆலயங்கள் எங்கும் இருப்பினும், சிறப்புடைய ஆலயங்களாகச் சில வற்றைக் கூறுவதும் உண்டு. இறைவன் மண், நீர் நெருப்பு, காற்று, வெளி யாகிய ஐம்பெரும் பூதவடி வினன் என்பதை விளக்கி நிற்கும் பஞ்ச பூதத் தலங்களை உதாரணமாகக் காட்டலாம். அவை முறையே திரு வாரூர், திருவானைக்கா, திருவருணை, திருக்காளத்தி, திருத் தில்லை என்பன. திருவாரூர் இறைவன் பிருதிவி (மண்) வடிவானவன் என்பதை ஆண்டுள லிங்கம் புற்று வடி வாய்த் திகழ்வது கொண்டு தெளியலாம். இது குறித்தே அவனைப் புற்றிடங் கொண்ட புனிதன் என்றும், வன்மீக நாதன் என்றும் வழங்குவர். (வன்மீகம்-புற்று.) காஞ்சியம் பதியைப் ப்ருதிவித்தலம் என்று கூறும் மரபும் உண்டு. திருவானைக்கா அண்ணல் நீர் வடிவாய் நிலவுபவன். இந்த உண்மையினை இன்றும் அவனது திருமேனி நீரால் சூழப்பெற்றுத் திகழ்வதாற் காணலாம். எவ் வளவுதான் இறைத்து இறைத்து நீரைப்போக் கினும் நீர் ஊற்றெடுத்து இறைவன் திரு மேனியை நிறைத்துவிடும். திருவருணை என்பது திருவண்ணாமலை யாகும். இன்றும் திருவண்ணாமலை மூலட்டானத்தை அணுகி உற்றுக் கவனித்தால் நம்மீது ஏதோ அக்கினிச் சுவாலை வீசுவது போன்ற உணர்ச்சியை உணரலாம். இஃது அவ்விடத்து இறைவன் நெருப்பு உருவினன் என்ப தற்கு அறிகுறி அன்றோ? திருக்காளத்தி இறைவன் காற்றுவடிவினன் என்பதையும் கண் கூடாகக் காணலாம். மூலட்டானத்துள் இறைவனைச் சூழ்ந்து பல திருவிளக்கு கள் எரிந்து கொண்டிருக்கும். அவற்றுள் ஒரு விளக்கு

இவ்விறைவனது அண்மையில் எரிந்துகொண்டிருக்கும். அவ்விளக்கு மட்டும் எந்த நேரமும் அசைந்து கொண்டே எரியும். அவ்விறைவனைச் சூழ உள்ள ஏனைய விளக்குகள் இவ்வாறு அசைவுடன் எரியமாட்டா. இஃது உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை. இதனை உற்றுக் கவனியாதார் இனியேனும் அங்குச் சென்றக்கால் கவனிக்கவும். இறுதியாகத் திருத்தில்லையாம் சிதம்பரத்தில் உள்ள நடராஜப் பெருமான் ஆகாய வடிவமாய் உள்ளான் என்பதைச் சிதம்பர ரகசியம் என்று கூறித் திரையிட்டு மூடியுள்ள இடமோ நமக்குத் தெளிவாக்குகின்றது. அவ்விடத்தில் எந்தவிதமான உருவமும் கிடையாது; வெற்றிடமே ஆகும். ஆனால், தரிசனார்த்தமாகச் செல்லும் நாம் தெளிவாக அந்த இடத்தைக் காணவே முடியாது.

இங்ஙனம் காணாதவாறு ஆண்டுள தீட்சதர்கள் தீபாராதனையினைத் திரை நீக்கிச் சட்டெனக் காட்டித் திரையினை மூடிவிடுகின்றனர். அவ்வாறு திரையிட்டு மூடப் பெறும் இடம் இன்னது என்று அறியவிரும்புபவர், திருவெண்காடு சென்றால், அங்குள்ள வீரபத்திரப் பெருமானுக்குப் பக்கத்தில் சிதம்பர ரகசியம் போன்று திரையிட்டு மறைக்கப்பட்ட இடத்தைக் காணலாம். ஆனால் அங்ஙனம் மறைக்கப்பட்ட இடம் அவசரம் சிறிதும் இன்றித் திரை நீக்கப் பெற்று அன்பர்கள் நிதானமாகத் தரிசனம் செய்யும் வரையில் தீபாராதனை காட்டப்படுவதை இன்றும் கண்டு களிப்புறலாம்.

தியாகேசப் பெருமான் சிவாலயங்களில் இருப்பரேனும், அவர்க்குச் சிறப்பான இடங்களாக ஏழு இடங்களைக் கூறுவர். அவையே சப்தவிடங்கர் ஸ்தலங்கள்

எனப்படும். அத்தலங்கள், திருவாரூர், திருநாகை, திரு நள்ளாறு, திருக்காருயில், திருக்கோளிலி, திருவாய்மூர், திருமறைக்காடு என்பன. திருவாரூரில் உள்ள விடங்கர் வீதி விடங்கர் என்னும் திருப்பெயருடன், அசபா நடனம் புரிவர். திருநாகையில் உள்ள விடங்கர் சுந்தர விடங்கர் என்னும் பெயருடன் தரங்க நடனம் இயற்றுவர். திரு நள்ளாற்றில் இறைவர் நாக விடங்கர் என்ற நற்பெய ருடன் உன்மத்த நடனம் உருற்றுவர். திருக்காருயில் பதியில் ஆதிவிடங்கர் என்னும் அழகிய பெயருடன் குக்குட நடனம் குதூகலமாய் நடிப்பர். திருக் கோளிலி என்னும் திருப்பதியில் அவனி விடங்கர் என்னும் அற்புதத் பெயர் தாங்கிப் பிருங்கி நடனம் புரிவர்; திருவாய்மூரில் நீலவிடங்கர் நிலவி, கமல நடனத்தைக் களிப்புடன் நடிப்பர். திருமறைக்காட்டில் புவனவிடங்கராய்ப் பொலிந்து, அம்ஸ நடனத்தை அணியுடன் ஆற்றுவர்.

ஆகவே, இதுவரையில் கூறிவந்த செய்திகளில் கோயில்களிலும் தனிச் சிறப்புடைய திருக் கோயில்கள் இருக்கின்றன என்பது தெளிவாகிற தன்றோ? இம்முறைப் படியே ஆறுமா முகனுக்கும் ஆலயங்கள் பலவாக அமைந் தாலும், அவனுக்குரிய உகந்த இடங்கள் ஆறு என்பதை யும் ஆன்றோர்கள் அறிவித்துள்ளனர். இவையே அப் பெருமானது ஆறு படை வீடுகள் என்பன். இவ்வாறு ஆறு படை வீடுகள் உண்டு என்பதை உணர்த்திய பெருமை நக்கீரரைச் சாருமோ என்று யான் யூகிக்கின் றேன். அவரே தம் பழம் பாடலாகிய, அதாவது சங்கப் பாடலாகிய திரு முருகாற்றுப் படையில் பாடி அருளினர். இவரையொட்டியே, கச்சியப்பசிவாசாரியரும், அருண கிரிநாதரும் ஆறு திருப்பதிகளைச் சிறப்பு முறையில் பாடிக் காட்டினர். அவ் வாறு திருப்பதிகள் திருப்பரங்குன்றம்,

திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோருடல், பழமுதிர்ச்சோலை என்பன. இனி ஒவ்வொன்றன் சிறப்பையும் அங்கங்கு ஆறுமுகன் வீற்றிருக்கும் வீறினையும் உணர்வோமாக.

### திருப்பரங்குன்றம்

இத்தலம் மதுரைக்குத் தென்மேற்கே நாலுகல்தொலைவில் உள்ளது. திருப்பரங்குன்ற ரயில்வே ஸ்டேஷனிலிருந்து கால்மைல் தூரத்திலும் உள்ளது. இத்தலம் மதுரையின் மேற்கே அமைந்திருத்தலை "மாடமலி மறுகில் கூடல் குடவயின்" என்று திருமுருகாற்றுப் படையிலும் 'கூடற் குடவயின் பரங்குன்று' என அகநானூற்றிலும் குறிக்கப் பட்டிருத்தலினால் தெரியலாம். குடவயின் என்பது மேற்குப் பக்கம். இது திருப்பரங்கிரி என்றும் கூறப்பெறும். இங்குத்தான் நக்கீரர் பூததத்தால் குகையுள் அடைக்கப்பட்டபோது, அவர் திருமுருகாற்றுப்படை பாடி அக்குகையினின்று திருமுருகன் திருவருளால் விடுதலை பெற்று வெளிவந்தனர். தெய்வானையம்மையை முருகன் திருமணம் புரிந்த தலமும் இதுவே. இது மலையில் குடைந்து எடுக்கப்பட்டகோயில். இத்தலத்திற்கு நிரம்ப அழகியர் என்னும்பெயரியபுலவரால் பாடப்பட்ட தல புராணமும் உண்டு. இங்குள்ள தீர்த்தம் சரவணப் பெய்கை என்பது. மலைமீதும் ஒரு தீர்த்தம் உண்டு. அது காசிதீர்த்தம் எனப்படும். இம்மலை மீதுள்ள தீர்த்தத்தில் பலவண்ண மீன்கள் நடமாடுவதை இன்றும் காணலாம். மலைமீது முஸ்லிம்கள் தங்கள் மதக்கொடியினை நாட்டி, இத்தலம் தங்களுக்கும் உரிமையுடையதாகக் கூறிக் கொள்கின்றனர். இந்த மலையை வலமாக வந்தும் வழி படலாம்.

திருப்பரங்குன்றம் முருகப் பெருமானுக்குரிய ஆறு படை வீடுகளுள் முதன்மை வாய்ந்த தலமாக இருப்பதோ

டன்றி, முழுமுதற் பரம்பொருளாம் முக்கண் மூர்த்தியின் திருத்தலமாகவும் இது விளங்குகின்றது. இதனால் இத் தலத்தைத் திரு ஞானசம்பந்தரும், சுந்தர மூர்த்தி சுவாமிகளும் பாடியுள்ளனர். "திருபரங்குன்றம் மேயபரமன்" என்பர் சுந்தரர். "நன்னகர்" என்று இதனை ஞானசம்பந்தர் போற்றுகிறார். சுந்தரர் தேவாரத்தில் இத்தலம் கோத் திட்டை என்று கூறப்படுகிறது.

இங்குச் சிவபெருமான் தம் திருமகன் திருமணத்தில் உமாதேவியாருடன் எழுந்தருளி முருகப்பெருமானுக்குத் திருவருள் புரிந்து தேவர்கட்குக் காட்சி தந்தருளியுள் ளார். சுந்தரர் முடியுடை மூவேந்தர்களான சேர சோழ பாண்டியர்களுடன் சென்று வழிபட்ட குறிப்பு, அவர் இத் தலத்தைப் பற்றிப்பாடிய இறுதிப்பாடலில் "முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே" என்று பாடிய அடியால் தெரிகிறது. இத்தலத்து இறைவர் பரங்கிரி நாதர் என்றும் இறைவியார் ஆவுடை நாயகி என்றும்அழைக்கப் பெறுவர். இது முருகப்பெருமானால் வழிபடப்பட்டதலம்; இத்தலத்தில் வெள்ளியால் ஆகிய சிவாலயம் ஒன்று இருந்ததாகவும் கூறுகின்றனர்.

திருப்பரங்குன்ற மலைக்குத் தெற்கில் உமையாண் டாள் கோயில் ஒன்று உண்டு. ஈண்டுள்ள இறைவர் சத்திய கிரீஸ்வரர் என்றும், தேவியார் கோவர்த்தனாம்பிகை என்றும் அழைக்கப் பெறுவர். ஆனால், கல்வெட்டுக்களில் இறைவர் சுந்தரபாண்டியர் என்று சுட்டப் பட்டிருக்கின் றனர். மலைமீதுள்ள சுனையின் அருகு சிவலிங்கம், நந்தி உருவங்கள் உள்ளன. இந்த இலிங்கம் விஸ்வநாதர் என்றும், தேவியார் விசாலாட்சி என்றும் அழைக்கப்படு கின்றனர்.

திருப்பரங்குன்றம் சங்க நூற்களில் பல இடங்களில் குறிக்கப் பட்டுள்ளது. குன்று என்றே இது குறிக்கப் படுதலை 'குன்றமர்ந்து' என்னும் பரிபாடல் தொடரால் புலனாகிறது. 'சீர் மிகு முருகன் தண் பரங்குன்றத்து' என்று அக நானூற்றிலும், அங்குரல் தனிமழை பொழியும் தண்பரம் குன்று, என மதுரைக் காஞ்சியிலும், 'மா கொன்றவென் வேலோன் குன்று' எனக் கலித்தொகையிலும், 'ஒடியாவிழவின் நெடியோன் குன்றம்' என்றும் பாடப்பட்ட அடிகளாலும் காணலாம்.

இவ்வாறு திருப்பரங்குன்றம் பாடப்பட்ட பாடல்களில் ஓர் உண்மை ஊடுருவி உள்ளதைக் கவனித்தல் வேண்டும். அதாவது இக் குன்றம் முருகப்பெருமானுக்கே சிறப்புமுறையில் உரிய குன்றம் என்பதாம். திருப்பரங் குன்றத்தில் மழை அடிக்கடி பொழியும் என்பதும், இடையறாது விழாக்கள் நிகழப் பெறும் என்பதும் ஈண்டே அறியக் கிடக்கும் உண்மைகளாகும். பரங்குன்றத்தில் சுனைகளும் இருத்தல் உண்மை யாதலின், ஆண்டு பன்மலர்கள் மலர்ந்திருத்தலையும் திரு முருகாற்றுப்படை அழகுறச் சித்திரம் தீட்டினாற் போல வர்ணித்துக் காட்டுகிறது.

கண் போல் மலர்ந்த காமரு சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்

குன்று என்பது திருமுருகாற்றுப்படை.

திருப்பரங் குன்றத்தில் பல புராண இதிகாசச்சித்திரங்கள் எழுதப்பட்டிருந்தன என்னும் செய்தியும் அறிய வருகின்றது.

இந்திரன் பூசையாயினள் அகலி கைஇவன்
சென்ற கௌதமன் சின்னுறுக் கல்லுரு
ஒன்றிய படியிதன் றுரைசெய்வோரும் இன்ன
பலபல எழுத்து நிலைமண்டபம்

எனப்பரிபாடல் பாடுகிறது.

திருப்பரங்குன்றம் உயரமானதும் அடர்ந்துள்ள காடுகளைக் கொண்டதும் என்றும் சோலைகளை யுடையது என்றும் தேவர்கள் வந்து பணியும் தலம் என்றும் சூரிய சந்திரர் வந்து தங்கும் மலை என்றும் அருணகிரி யார் அன்புடன் பாடுகின்றூர்.

மதியும்கதி ருந்தட வும்படி
உயர்கின்ற வனங்கள் பொருந்திய
வளமொன்று பரங்கிரி வந்தருள் பெருமாளே
மதியும்கதி ரும்புய லும்தின
மறுகும்படி அண்டம் இலங்கிட
வளர்கின்ற பரங்கிரி வந்தருள் பெருமாளே
தெனத்தெ னந்தன எனவரி அளிநறை
தெவிட்ட அன்பொடு பருகுயர் பொழில்திகழ்
திருப்ப ரங்கிரி தனிலுறை சரவணப் பெருமாளே
செழித்த தண்டலை தொருமில் கியகுட
வளைக்கு லந்தரு தரளமு மிகுமுயர்
திருப்ப ரங்கிரி வளநகர் மருவிய பெருமாளே
சீதள முந்தும ணந்தயங் கும்பொழிலை
சூழ்தர விஞ்சைகள் வந்திறைஞ் சும்பதி
தேர்ப ணிந்தெழு தென்பரங் குன்றுறை பெருமாளே
திங்களும் செங்கதிரும் மங்குலும் தங்குயர்
தென்பரங் குன்றிலுறை பெருமாளே

என்ற பாடல்களைக் காணவும்.

***திருச்செந்தூர்***

திருச்செந்தூர் என்னும் தலம் அலைவாய் என்ற பெயரினையுடையது. இத்தலம் கடற்கரையில் இருத்தலின் அலைவாய் என்ற பெயர் பெற்றுள்ளது. இன்றும் இத்தலத்தின் மடியில் வந்து படியும் நிலையில் கடல் அலைகள் வந்து படிதலைக் கண் கூடாகக் காணலாம். இது கடற்கரைத் தலம் என்பதைக் கச்சியப்ப சிவாச்சாரியர்,

*பருமணி வயிர முத்தம் பல வளம் பிறவும் ஆழித்*
*திரை எறி அலைவாய் ஆகும் செந்திமா நகரம்*

என்றும் சிறப்பித்துப் போந்தார். குரு குருபரர் தெள்ளு திரை கொழிக்கும் செந்தூர் என்றார்.

திருச்செந்தூர் திருநெல்வேலியிலிருந்து முப்பத்தைந்து கல் தொலையில் உள்ளது. இதனை இரயில் மூலமும், பஸ் மூலமும் அடையலாம்: இங்கு வதனாரம்ப தீர்த்தம் என்ற பெயரில் ஒரு தீர்த்தம் உண்டு. நாழிக்கிணறு என்ற ஓர் அற்புதமான கிணறும் ஒன்று உண்டு. இது ஒரு சிறு செம்பு புகும் அளவுதானுடையது. அச்செம்பைக் கொண்டு எத்தனை தரம் முகந்து முகந்து நாம் குளிப்போமானாலும், நீர் ஒரே மட்டத்தில்தான் நிற்கும். இதனைக் கண்டு குளித்து இன்புறவேண்டியது நம் கடமை. இத்தலம் பலவாறு சிறப்பித்துப் பேசப்படுகிறது. கயிலை மலை அனைய செந்தில் என்றும், மகா புனிதம் தங்கும் செந்தில் என்றும் இதனை அருணகிரியார் பாடுகிறார். அப்பர் பெருமானார் அகத்தைப் பிணித்த அரும்பதியும் ஆகும்இது. அவர் "நம் செந்தில் மேயவள்ளி மணாளர்க் குத்தாதை" என்று இறைவனைப் பாடும்போது செந்திலைக் குறிப்பிட்டுள்ளார். உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர் அலைவாய் என்பர் நக்கீரர். வேல் திகழ் பூண் முருகன் தீம்

# ஆறு திருப்பதிகள்

புனல் அலைவாய்எனத் தொல் காப்பிய மேற்கோள்பாடல் பாடுகிறது. திருமணி, விளக்கின் அலைவாய் என அக நானூறும் வெண்திரைப் புணரி அலைக்கும் செந்தில் நெடு வேள் நிலை இய காமர் வியன்துறை எனப் புறநானூறும் போற்றுகின்றன. சீர் கெழு செந்தில் எனச் சிறப்பிக் கிறது சிலப்பதிகாரம்.

தாவரங்கள் மிகுதியும் பெற்ற இடம் திருச்செந்தூர் ஆகும். இதனை,

வளரும் வாழையும் மஞ்சளும் இஞ்சியும்
இடைவி டாதுநெ ருங்கிய மங்கல
மகிமை மாநகர் செந்தில் வந்துறை பெருமாளே

என்ற அருணகிரியார் வாக்கே தெளிவு படுத்தும்.

இப்பதிக்கு மதிற்பெருமையும் உண்டு. அம் மதிலின் உயர்ச்சியினை உயர்வு நவிற்சி அணியில் அருணகிரியார் குறிப்பிடும் போது, சூரியனது குதிரைகள் இடறும் வகை யில் உயர்ந்துளது என்று பாடுகிறார்.

தினகர திண்டேர்ச் சண்டப்
பரியிட றும்கோட் டிஞ்சித்
திருவளர் செந்தூர்க் கந்தப் பெருமாளே

என்ற பாடலைக் காண்க. மற்றும் ஓர் இடத்தில் "பவளத்துங்கப் புரிசைச் செந்தில்" என்றும் பாடுகிறார்.

இப்பதியில் நீர் வளம் நிலவளம் அலைவளம் இன்ன என்பனவற்றை அருணகிரியார் பலபடப் புனைந்துள்ளார்.

தீரளுமணி தரளமுயர் தெங்கில் தங்கிப்
புரள எறி திரைமகர சங்கத் துங்கத்
திமிரசல நிதிதழுவு செந்தில் கந்தப் பெருமாளே

என்றும்,

தினவரி வண்டார்த் தின்புற்
றிசைகொடு வந் தேத்திஞ்சித்
திருவளர் செந்தூர்க் கந்தப் பெருமாளே

என்றும்,

சிறக்கும் தாமரை யோடையில் மேடையில்
நிறக்கும் சூள்வளே பால்மணி வீசிய
திருச்செந் தூர்வரு சேவக னேசுரர் பெருமாளே

என்றும்,

செழிக்கும் சாலியும் மேகம ளாவிய
கருப்பஞ் சோலையும் வாழையும் மேதிகழ்
திருச்செந் தூர்தனில் மேவிய தேவர்கள் பெருமாளே

என்றும்,

சாலிசேர் சங்கினம் வாவிசூழ் பங்கயம்
சாரலார் செந்தில்அம் பதிவாழ்வே

என்றும்,

சேணுயர் சோலையின் நீழலி லேதிகழ்
சீரலே வாய்வரு பெருமாளே

என்றும்,

மன்றல்கமழ் பூக தெங்குதிரள் சோலே
வண்டுபடு வாவி புடைசூழ
மந்தி நடமாடு செந்தில்நகர் மேவு
மைந்தஅம ரேசர் பெருமாளே

என்றும்,

சிகர கோபுத் தினும்மதி வினும்மேல்
செம்பொன் கம்பத் தளமீதும்
தெருவி லேயுநித் திலம்எறி அலேவாய்ச்
செந்தில் கந்தப் பெருமாளே

என்றும்,

சேலொடு வாளைவ ரால்கள் கிளம்பித்
தாறுகொள் பூகம்அ ளாவிய இன்பச்
சீரலைவாய் நகர் மேவிய கந்தப்பெருமாளே

என்றும்,

வாலுக மீது வண்டல் ஓடிய காலில் வந்து
சூல்நிறை வான சங்கு மாமணி ஈனவுந்து
வாரிதி நீர்பரந்த சீரலை வாயுகந்த பெருமாளே

என்றும்,

அலைமு கந்த வழ்ந்து சினைமு திர்ந்த சங்கம்
அலறி வந்து கஞ்ச மலர்மீதே
அளிக லந்தி ரங்க இசையு டன்து யின்ற
அரிய செந்தில் வந்த பெருமாளே

என்றும் பாடிக்காட்டினர்.

அறிஞர் நிறைந்த பதியும் ஆகும் இது என்பதற்கு அன்னார் வாக்காகிய,

செஞ்சொற் புலவர்கள் சங்கத் தமிழ்தெரி
செந்தில் பதிநகர் உறைவோனே

என்பதைக் காணவும். இத்தனை மாண்புகளும் இதன் கண் இருத்தலின் இதனைச் சுந்தரமான செந்தில் என்றும் பாடிக் காட்டினர். இத்தலத்தின் மதிலின் மாண்பை மறவாது இத்தலத்துத் திருப்புகழ் ஈற்றுப் பாடலிலும்,

செண்பக காடவி நீடிய துங்க மாமதிள் சூழ்தரு
செந்தில் மாநகர் மேவிய பெருமாளே!

என்றனர் குமரகுருபரர்.

கந்திப் பொதும்பர்எழு கார்அலைக்கும் சீரலைவாய்ச்
செந்திப் பதி புரக்கும் செவ்வேளே

ன்றனர்.

*திருவாவினன்குடி*

திருவாவினன்குடி முருகப் பெருமானது மூன்றுவது படைவீடு. திருவாவினன்குடி பழனித்தலத்தில் உள்ள பதி. திண்டுக்கல் புகைவண்டி மூலம் இத்தலத்தை அடையலாம். அங்கிருந்து முப்பத்தாறு கல் தொலைவில் உள்ளது. பழனி புகை வண்டி நிலயத்திருந்து மூன்று கல்லில் இது உள்ளது. இத்தலத்தினை வையாபுரி என்றும் கூறுவர். இங்கு வையாபுரி, சண்முக நதி ஆகிய தீர்த்தங்கள் விசேடம். இது சேரநாட்டுவைகாவூர் நாட்டினைச் சார்ந்தது என்ற குறிப்பு,

> ஆதியந்தவுலாவாசு பாடிய
> சேரர் கொங்குவை காவூர் நல்நாடதில்
> ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே

என்ற திருப்புகழ் அடிகளால் புலனுகின்றது.

திருவாவினன் குடிக்குச் சித்தன் வாழ்வு என்ற திருப் பெயரும் உண்டு என்பது தெரியவருகிறது. இவ்வாறு கருதுபவர் உச்சிமேற்புலவர் கொள் நச்சினார்க்கினியர் ஆவார். அவர் திருமுருகாற்றுப் படைக்கு உரை கூறுமிடத்து "இனிச்சித்தன் வாழ்வு என்று சொல்லுகின்ற ஊர் முற்காலத்தில் ஆவினன்குடி என்று பெயர் பெற்றதென்னுமாம்" என்று கூறுகின்றனர்.

> நல்லம்பர் நல்லகுடியுடைத்துச் சித்தன்வாழ்
> இல்லந் தொருமூன் றெரியுடைத்து— நல்லரவப்
> பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டியநின்
> நாட்டுடைத்து நல்ல தமிழ்

என்பது ஔவையார் வாக்கு. சித்தன் என்பது பிள்ளையாருக்குத் திருநாமம். பிள்ளையார் என்பார் ஈண்டு இளய பிள்ளையாராம் முருகப் பெருமான். சித்தன் என்பான்

முருகனே ஆயினும், பழநிமலைமீது போகரது சமாதி இருத்தலை இன்றும் நாம் கண்கூடாகக்காணும் நிலையில் இருப்பதால், அப்போக முனிவர் சிறந்த சித்தர் ஆதலின், அவர் வாழும் இடம் என்ற பொருளில் இத்தலம் சித்தன் வாழ்வு என்ற திருப்பெயரைப் பெற்றது என்று கூறினும் அமையும்.

ஆவியர் குடியினர் இந்த ஊரில் வசித்ததாக கூறப் படுகிறது. இக்குடிக்குத் தலைவனாய் இருந்து இதனை ஆண்ட சிற்றரசன் பேகன் என்பவன். இவன் வையாவிக் கோப் பெரும் பேகன் என்று குறிப்பிடப் பட்டதிலிருந்து இவன் ஆவியர் குடிக்குத் தலைவன் என்பது உண்மையாகிறது. இவன் மயிலுக்குத் தான் போர்த்திருந்த விலை யுயர்ந்த போர்வையினை ஈந்த மாண்பைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

இந்த ஆவினன் குடித்தலம் பழநி மலைக்குப் போகும் வழி யிலேயே உள்ளது. இதுவே, ஆறுமுகனது ஆறுபடை வீடுகளில் ஒன்றாகவிளங்கும் பெருமைக்கு உரியது. இதுவும் பழனியும்ஒன்றேதான் என்று ஏற்றுக் கொள்ளுதற்குஇடம் இல்லை. நக்கீரர் திருவாவினன் குடி என்றுதான் குறிப் பிடு கின்றனரே அன்றிப் பழநி என்பதைப் பற்றிய குறிப்பே கூறிற்றிலர். கச்சியப்ப சிவாசாரியர் ஆறு திருப்பதிகளைக் குறிப்பிட்டுவணங்கிய இடத்தும், "திருவாவினன்குடி வரும் அமலன் போற்றுவாம்" என்று போற்றினரே அன்றிப் பழநி மாமலையை இணைத்தோ குறித்தோ பேசிற்றிலர். அருணகிரியாரும் தமது திருப்புகழில் திருவாவினன் குடியை வேறாகவும் பழநி மலையினை வேறாகவும் பாடிக் காட்டி யுள்ளார். திருவாவினன் குடி பழநி என்னும் ஊரில் உள்ள தலம் என்ற குறிப்பும்,

அமரர்க்கிறை யேவ ணங்கிய பழநித்திரு வாவி னன்குடி
அதனில்குடி யாயி ருந்தருள் பெருமாளே

என்ற அடிகளில் பெறப்படுகின்றது.

திருவாவினன்குடிக் கோபுரச் சிறப்பையும்செல்வவளத்தையும், கரும்பாலை வளத்தையும், சோலைச் சிறப்பையும், நீர் வளத்தையும் அழகு படப் புனைந்து பாடினர் அருணகிரியார்.

ஆதவன்கதிர் ஓவாது லாவிய
கோபுரங்கிளர் மாமாது மேவிய
ஆவினன்குடி யோனேசு ராதிபர் பெருமாளே!
ஆலையும் பழனச் சோலையும் புடைசுற்
ருவினன்குடியில் பெருமாளே
கொந்தவிழும்தட மேநிரமபிய
பண்புதருந்திரு வாவினன்குடி
குன்றுகள் எங்கினும் மேவ ளர்ந்தருள் பெருமாளே

என்றும் அவர் பாடிய பாடலைக் காணவும்.

திருவாவினன்குடியினை வணங்கும் அன்பர்கள் பழநித் தலத்தையும் வணங்கும் கடப்பாட்டினை மிகுதியும் உடையவராய் உள்ளனர். திருவாவினன்குடியினைப் பற்றிக்கூட அவ்வளவு அன்பு காட்டாது, பழநி மலைக்கே அன்பர்கள் பெரிதும் அன்பு காட்டுகின்றனர். பழநிப் பெருமாளுக்கே அபிடேக மாண்பு பெருஞ்சிறப்பாக அமைந்துள்ளது. அப்பழநி ஆண்டவர் போகர் என்னும் சித்தராய் நவபாஷாணம் என்னும் மருந்துப் பொருளால் ஆன திரு உருவம் என்பது உண்மை புணர்ந்தோர் கூற்ருகும். ஏனைய மூலஸ்தானங்களில் உள்ள கல்லுருவம் போன்றதன்று பழநி ஆண்டவர் திருவுருவம். அருணகிரியாருக்கும் திருவாவினன் குடியினை விடப் பழநி மலையிடத்து அன்பு மிகுதி என்றுகூடக் கூறிவிடலாம். திருவாவினன்குடிக்குப் பன்னிரண்டு திருப்புகழைப் பாடிய அவர், பழநி மலைக்கு எண்பத்து மூன்று திருப்புகழினைப் பாடியுள்ளார். பழநிமீது தமக்குள்ள அன்பினை, 'படிக்கின்றிலை பழநித்

திருநாமம்' எனக் கந்தர் அலங்காரத்திலும், திருவேரகத்தைப் பாடிய திருப்புகழிலும் இத்தலத்தினை இணைத்து 'அதிசயம் அநேகம் உற்றபழநிமலை'' என்று பாடுகின்றார். ''பதினாலுலகோர் புகழ் பழநி'' என்றும், ''காசியின் மீறிய பழநி'' என்றும் கூறி மகிழ்வர்.

பழநி மலை சிவகிரி, சிவமலை என்ற பெயர் பெற்றிருப்பதை,

சிறக்கும் அழகிய திருமகள் வஞ்சிக்
குறத்தி மகளுமை மருமகள் கொங்கைச்
சிலைக்குள் அணைகுக சிவமலை கந்தப் பெருமாளே

என்றும்,

குழகென எடுத்து கந்த உமைமுலை பிடித்தருந்து
குமரசிவ வெற்ப மர்ந்த குகவேலா

என்றும்,

அங்கம் கஞ்சம் சங்கம் பொங்கும்
கயனிறை வளமுறு சிவகிரி மருவிய பெருமாளே

என்றும்,

பழநிச் சிவகிரி மீதினி லேவளர் பெருமாளே

என்றும் கூறப் பட்ட அடிகளில் காணவும்.

பழனித் தலம் வீரை நகர் என்ற பெயரினையும் பெற்றது. இது, வீரா புரி வரு கோவே பழநியுள் வேலா என்றும், வீரை வருபழநி ஞான மலை என்றும், வீரை நகர் வந்து வாழ்பழநி என்றும், வீரை யுறை குமர என்றும் வரும் அடிகளால் தெளி வுறும் செய்தியாகும்.

பழநித் தல மதில் சிறப்பையும், மலை மீதிருப்பது என்பதையும், பல நீர் வளம், நிலவளம் பொருந்தியது என்பதையும் அருணகிரியார் அன்புடன் பாடிச் சென்றுள்ளார்.

பவளத் தவளக் கனகப் புரிசைப் பழநி
பவளக் கொடிசுற் றியபொன் கமுகின்
தலையில் குலையில் பலமுத் துதிர்செய்ப்
பழநிப் பதிவெற் பினில்நில் குமரப் பெருமாளே

என்றும்,

பலவின் முதுபழம் விழைவுசெய் தொழுகிய
நறவு நிறைவயல் கமுகடர் பொழில்திகழ்
பழநி மலைவரு புரவல அமரர்கள் பெருமாளே

என்றும்,

மதி தவழ் பழநி மலை

என்றும்,

பதுமமிசை வண்ட லம்பு சுனைபலவி ளங்கு துங்க
பழநிமலை வந்த மர்ந்த பெருமாளே

என்றும்,

சொம்பிற் பலவளம் உதிர்சோலை கள்சூழ்
இஞ்சித் திருமதில் புடைசூழ் அருள்சேர்
துங்கப் பழநியில் முருகா இமையோர் பெருமாளே

என்றும்,

நாளி கேரம்வ ருக்கை முத்துதிர்
சோலை சூழ்பழ நிப்பதி யில்திரு
ஞான பூரண சத்தித ரித்தருள் பெருமாளே

என்றும்,

பனிமலர் ஓடைச் சேலுக ளித்துக்
ககனம ளாவிப் போய்வரு வெற்றிப்
பழநியில்வாழ் பொன் கோமள சத்திப் பெருமாளே

என்றும்,

பணைபணிசிறந்த தரளமணி சிந்து பழநி

என்றும் இன்னும் பல விதமாகவும் பாடிப் பரவி யுள்ளார் அருணகிரியார்.

இம் மலையினை ஏறி இறைவனைக் கண்டு வணங்க நல்ல படிகள் உண்டு. வழியில் இடும்பனைக் கண்டு வணக்கம் செலுத்தலாம். இவனே இம் மலையினை ஈண்டுக் கொணர்ந்தவன் என்பது புராண மரபு. மலை மீதுள்ள ஆண்டவனது பின்புறத்தில் முஸ்லிம்கள் அமர்ந்து வருவார் போவார்க்குச் சாம்பிராணிப் புகையூட்டித் திரு நீறு அளித்துப் பழநி ஆண்டவன் தங்கள் தெய்வம் என்ற குறிப்பினைக் காட்டிக் கொண்டிருக்கின்றனர். மலையினைச் சுற்றி வரவும் வசதியுண்டு. மலையினைச் சுற்றி வருகையில் வண்டுகள் ஒலியினையும் மலர்கள் கீழே விழுந்து அழகிய காட்சி அளிப்பதையும், அருணகிரியார் உன்னிப்பாகக் கவனித்துப்பாடுகிறார். ''பரிமள கற்காடவி அரியளி சுற்று பூவுதிர் பழநிமலை'' என்பது அவர் வாக்கு. மலையினை விட்டுக்கீழே இறங்கும்போது, ஒரு பெரிய நந்தி இருப்பதையும் கண்டு களிக்கலாம்.

### திருவேரகம்

திருவேரகம் திருமுருகனது நான்காம் படைவீடு. பெரிது உவந்து ஏரகத்து உறைதலும் உரியன் என நக்கீரர் பாடுதலால் இத்தலத்தில் இருப்பதை முருகன் பெரிதும் விரும்பினான் என்பது புலனாகிறது. ஏரகம் என்பது இக்காலத்தில் கும்பகோணத்துக்கு மேற்கே நாலுகல் தொலைவில் உள்ள சுவாமிமலை எனக் கருதுகின்றனர். இங்ஙனம் கருதுதற்கு அருணகிரியார் வாக்குகள் சான்றாக உள்ளன. அவர்தாம் திருவேரகமும் சுவாமிமலையும் ஒன்றெனக் கருதுகின்றனர். இத்தலம் இன்ன இடத்தில் இருக்கிறது என்பதையும் தெளிவுறக் கூறுகின்றனர். இவ்வுண்மைகளை அவர்தம் திருவாக்குகளாகிய,

**ஏரக வெற்பெனும் அற்புதம் மிக்கசு**
**வாமிம லைப்பதி மெச்சிய சித்தனே**

ராஜத லக்ஷண லக்ஷுமி பெற்றருள் பெருமாளே
குளிர்கா மிகுத்த வளர்பூக மெத்து
குடகா விரிக்கு வடபாலார்
திருவே ரகத்தில் உறைவா

என்றும்

வளைகுல மலங்கு காவி ரியின்வட புறம்சு வாமி
மலைமிசை விளங்கு தேவர் பெருமாளே

என்றும்,

காவேரி வடகரைச் சாமிமலையுறைதம்பிரா

என்றும்,

ஏலம்இல வங்க வர்க்க நாகம் வகு ளப்ப டப்பை
பூகமரு தந்த தழைக் கரவீரம்
யாவுமலை கொண்டு கைத்த காவிரிபு றம்பு சுற்றும்
ஏரகம மர்ந்த பச்சை மயில்வீரா

என்றும் பாடும் ஆற்றல் தெளியலாம்.

சுவாமி மலையினைக் குருமலை என்றும் அருணகிரியார் குறிப்பிடுகின்றார். நளின குருமலை மருவி என்றும் குரு மலையில் மருகுருநாத என்றும் குருமலை விளங்கு ஞான சற்குருநாத என்றும், குருவெற்பிலுறை என்றும் குருமலையின் மேல் அமர்ந்த பெருமாளே என்றும் இருமலையில் யோகத்த மர்ந்த பெருமாளே என்றும் குருமலை மீத மர்ந்த பெருமாளே என்றும் குருமலை மருவிய என்றும் குருகிரி மேவிய என்றும் மந்திர குருமலைதனில் அமர் பெருமாளே என்றும் பாடியுள்ளார்.

முருகப்பெருமான் சிவபெருமானுக்குப் பிரணவ உபதேசம் செய்த காரணமே இம்மலை இப்பெயர் பெற்றதற்குக் காரணம் என்பது அவரது கருத்து. இவர் முருகப்பெருமானிடத்துக் கொண்ட பேரன்பின் மிகுதியினால் சிவபெருமான் முருகனை மூன்று முறை சுற்றி வந்து கைகட்டி வாய் பொத்தித்தலைவணங்கிப் பிரணவ உபதேசம் பெற்றார்

என்ற குறிப்பையும்

> சேவேறும் ஈசர் சுற்ற மாஞான போதபுதது
> சீராக வேயுரைத்த குருநாதா

என்றும் பாடியருளினர். இக்கருத்தை வலியுறுத்தக் கந்தர் அந்தாதியில் மாற்கரியார்க்கு உபதேசம் செய்த என்றும் பரமர்க்கு ஒரு குருக்கள் என்றும் முத்தர் புகழ் தம்பிரானே என்றும் பாடிக் காட்டினர். இறைவன் உபதேசம் பெற்றுக் கீழ்ப்பட்டதற்கு ஏற்பவும், முருகன் உபதேசம் செய்ததனைக் காட்டவும் இன்றும் சுவாமி மலைத்தலத்தில் இறைவன் திருக்கோயில் தாழ இருக்க, முருகப் பெருமான் கோயில் உயர இருத்தலைக் காணலாம். இக்கருத்தைக் காட்டவே இது இங்ஙனம் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதை முருகனது கோவில் கட்டட அமைப்பினின்றும் ஊன்றிக் கவனிப்பின் உணரலாம்.

இறைவன் முருகனிட மிருந்து பிரணவப் பொருள் உண்மையினை உணர்ந்தது உண்மையே. அதனுல் இறைவன் பிரணவ உபதேசம் பெற்றுன் என்பது பொருளன்று. இறைவன் முருகனைச் சுற்றி வந்து அப்பெரும் பொருளை உணர்ந்தான் என்பதும் இல்லை; முருகனை வாரி எடுத்துத் தன் தொடைமீது அமர்த்தி, செவியினை அவன் வாயருகு வைத்து அதன் பொருளை அவன் அறிந்திருப்பது உண்மையா என்று உணரக் கேட்ட நிலையே அன்றி வேறன்று. இதுவே மரபுஎன்பதைக் கந்தபுராணம் கசடறக் காட்டுகின்றது.

> காமரு குமரன் சென்னி எதுமென உயிர்த்துச் செக்கர்த்
> தாமரை புரையும் கையால் தழுவியே அயனும் தேற்ரு
> ஓமென உரைக்கும் சொல்லின் உறுபொருள்
> போமெனில் அதனை இன்னே புகலென் இறைவன்
> சொற்ருன்

முற்றொருங் குணமும் ஆதி முதல்வகேள் உலகம் எல்லாம்
பெற்றிடும் அவட்கு நீ முன் பிறர்உண ராத ஆற்றல்
சொற்றதோர் இனைய மூலத் தொல்பொருள் யாரும் கேட்ப
இற்றென இயம்ப லாமோ மறையினால் இசைப்ப தல்லால்
என்றலும் நகைத்து மைந்த எமக்கருள் மறையின்என்னாத்
தன் திருச் செவியை நல்கச் சண்முகன் குடிலை என்னும்
ஒன்றொரு பதத்தின் உண்மை உரைத்தனன் உரைத்தல் கேட்டு
நன்றருள் புரிந்தான் என்ப ஞான நா யகனும் அண்ணல்

என்ற பாடல்களைக் காண்க.

ஆனால், சுவாமி நாதன் என்றும், குருநாதன் என்றும் தகப்பன் சாமி என்றும் கூறப்படுதல் காரணம் என்னவோ எனில், சுவாமிகளாகிய தெய்வங்களுக்குத் தலைவன் என்றும் அவ்வாறே சாமிகளுக்கு இவன் தந்தை யாக இருப்பவன் என்றும் பொருள் தரும் நிலையில் அப் பெயர்கள் உள்ளன. இதனைக் குமரகுருபரர் வாக்காகிய "செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாளா" என்று பாடியிருத்தல் மூலம் பார்த்துக் கொள்ளலாம். குருநாதன் என்பதன் பொருள் அகத்தியர், நக்கீரர், அருணகிரியார், சிதம்பர சுவாமிகள், இராமலிங்கர் போன்ற உண்மையாசிரி யார்கட்கு உபதேச மூர்த்தியாக இருந்து உபதேசம் செய்த காரணத்தால் குருநாதன் என்ற பெயரை முருகன் பெற்றனன் என்க.

சுவாமிமலை சிறந்த மலைதான். நல்ல வளமுடையது தான். இதில் எந்த விதமான ஐயமும் இல்லை. திருமாலும் வணங்கும் பதிதான். ஞானிகள் சேரும் பதியும் இதுவே. அருணகிரியார்க்குப் பாததரிசனம் காட்டிய பதியும் இதுவே. இவை அனைத்தும் அருணகிரியார் வாக்கைக் கொண்டே அறியலாம்.

சுபானமுறு ஞானந்தபோதனர்கள்சேரும் சுவாமிமலை என்பதனால் தவசிகள் வந்து வணங்குவதையும், திருமால் முதலியவர்கள் வணங்கும் தலம் என்பதைச் சுராதிபதி மால் அயனும் மாலொடு சலாம் இடு சுவாமி என்றும் கேசவன் பரவு குருமலை என்றும் பாடப்பட்டதனாலும், அருணகிரியார் பாத தரிசனம் பெற்றதைக் கையா எனக்கு உன் அடிகாண வைத்த தனி ஏரகத்தின் முருகோனே என்பதனாலும் அறியலாம். நிலவளம், நீர்வளம், குடிவளம் முதலானவற்றை,

சூளிகையு யர்ந்த கோபுர
மாளிகைபொன் இஞ்சி சூழ்தரு
சுவாமிமலைநின்று லாவிய பெருமாளே

என்றும், சூதமிகவளர் சோலை மருவு சுவாமிமலை என்றும் மருவு ஞாழல் அணி செருந்தி அடவி சூத வன நெருங்கி வளர் சுவாமிமலை என்றும்,

ஏரன திர்த்து வந்து நீர்கள் கட்டி அன்று
தான்நி றைக்க வந்த தொருசாலி
யேமி குத்து யர்ந்த மாவ யற்கள் மிஞ்சும்
ஏர கத்த மர்ந்த பெருமாளே

என்றும் பாடிய பாடல்களால் தெரியலாம்.

இவ்வளவு பெருமைக்குரிய சுவாமிமலை திருமுருகாற்றுப்படையில் குறிப்பிட்டுப் பேசப்படவில்லை. ஏரகம் என்றே குறிப்பிட்டுச் செல்கிறது. சிலப்பதிகாரத்தும் ஏரகம்தான் குறிப்பிடப்படுகிறது. "சீர் கெழு செந்தியும் செங்கோடும், வெண்குன்றும் ஏரகமும் நீங்கா இறைவன்" என்பது சிலப்பதிகாரம். இவ்வாறு சங்க நூற்களில் கூறப்படும் ஏரகம் அருணகிரியார்கருதும்சுவாமிமலை அன்று. திருமுருகாற்றுப்படையில் வரும் ஏரகத்தைப் பற்றிக் குறிப்பு எழுத வந்த

நச்சினார்க்கினியர், ஏரகம்—மலை நாட்டகத் தொரு திருப்பதி என்று எழுதிப் போந்தனர். மலைநாடு ஈண்டுச் சேர நாடாகும். சோழ நாடன்று. சிலப்பதிகாரத்திற்குரிய அரும்பத உரையில் வெண்குன்று என்பதற்குச் சுவாமி மலை என்று பொருள் விளக்கினர். இதனால் ஏரகம் என்பது தனிப்பதி என்பது புலனாகிறது. சிலப்பதிகாரத்தில் கூறப்பட்ட முருகன் தலங்கட்குப்பின் எண் உம்மை கொடுத்துப் பேசப்பட்டிருத்தலைக் காண்க.

குன்றுதோருடல்

குன்று தோருடல் என்பது இதுவரை மேலே சுட்டிக் காட்டிய தலங்களைப் போன்று ஒரு தனித்தலம் அன்று, முருகன் மலைகிழவோன் என்ற பெயருடையன் ஆதலாலும் குறிஞ்சிக் கிழவன் ஆதலாலும் அவன் குன்று தோருடும் குமரன் ஆயினன். முருகன் மலைக்கு உரியன் ஆதலை "சேயோன் மேய மை வரை உலகம்" என்ற தொல்காப்பிய அடியாலும் தெளியலாம். மலைக்குத் தெய்வம் இவனே ஆவான். அருணகிரியாரும் இந்த உண்மையினை உணர்ந்து பலகுன்றிலும் அமர்ந்த பெருமாளே என்றும், பலமலையுடைய பெருமாளே என்றும், குன்று தோருடல் மேவு பெருமாளே என்றும் பாடியருளினர்.

பொது முறையில் பாடிய அவர் சிறப்புமுறையில் பல குன்றுகளின் பெயர்களைத் தனித்தனி அமைத்து, அவற்றி லும் முருகன் எழுந்தருளி அன்பர்கட்கு அருள்புரிவதைப் பாடியருளினர். திருமுருகாற்றுப் படையில் குறிப்பிட்ட அடியாகிய "குன்று தோருடலும் நின்றதன் பண்பே" என்ற அடிக்குப் பொருள் கூற வந்த நச்சினார்க் கினியர், "மலைகள் தோறும் சென்று விளையாடுதலும் தனக்கு நிலை நிறை குணம்" என்று விளக்கினர்.

முருகனுக்குரிய மலைகளுள் திருப்பதிமலையினையும் குறிப்பிட்டுள்ளார். திருப்பதிமலையே திருவேங்கடமலை

யாகும். திருவேங்கடமலை திருமால் திருப்பதிகளுள் தலை சிறந்தபதி. வேயேய் பூம்பொழில் சூழ் விரையார் திரு வேங்கடவா என்று ஆழ்வார் திருமாலைப் பாடுகிறார்.

மறந்தும் புறந் தொழாத பிரம வீரவைஷ்ண வராம் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்,

மாண்டு பிறந்து மலும் வைகுந்தம் புக்கவரும்
கண்டு தொழக் காதலிக்கும் வேங்கடமே

என்றும்,

வாடப் பசித்த வரியுழுவை வாலாட்டி
மேடத்தைப் பார்த்து றும் வேங்கடமே—மாடத்துக்
கம்பமத மாவென்றான் காசினிக்கும் வெண்ணெய்ச்
செம்பவள மாவென்றான் சேர்வு

என்றும் பாடி அப்பதி திருமால் பதி என்று காட்டினர். இளங்கோ அடிகளும் அப்பதி திருமால்பதி என்னுங் கருத் தாதலை,

வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
உரு மருங் கோங்கிய இடைநிலத் தானத்து
மின்னுக் கொடிஉடுத்து விளங்குவில் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகைஅணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையில் ஏந்தி
நலம்கிளர் ஆரம் மார்பில் பூண்டு
பொலம்பூ ஆடையில் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்

எனத்திருமாலின் நின்ற கோலத்தைப் பாடியருளினர்

ஆனால் அருணகிரியார்,

*மலர்க் கமல வடிவுள செங்கை*
*அயிற்குமர குகைவழி வந்த*
*மலைச் சிகர வடமலை நின்ற பெருமாளே*

என்றும்,

**வேந்தகு மாரகுக சேந்தம யூரதட**
**வேங்கட மாமலையில் உறைவோனே**

என்றும்,

**சிலை வாங்கிய நாரண னார்மரு**
**மகனும்குக னேபொழில் சூழ்தரு**
**திருவேங்கட மாமலை மேவிய பெருமாளே**

என்றும் பாடியருளினர். ஆகவே இத்தலம் சைவர்கட்கும் வைணவர்கட்கும் உரிய தலமாக விளங்கியது போலும். இன்னும் வடநாட்டினர் திருவேங்கட முடையானைப் பாலாஜீ என்று போற்றிப் புகழ்கின்றனர். இச்சொல் முருகன், பாலசுப்பிரமணியன் என்னும் பொருள் தரும் சொல்லாக உள்ளது. ஆகவே, இது முருகன் தலம் என்று கருதுதற்கும் இடம் இருக்கிறது. இன்றும் திருவேங்கட முடையானுக்கு வில்வத் தழைகளால்தான் அர்ச்சனை நடைபெறுகிறது. நெற்றியில் கோபிச்சந்தனமே அணியப்படுகிறது. மூலட்டானத்தை ஆராய்ந்து பார்த்தால் முருகப் பெருமானுக்குரிய சின்னங்களே தென்படக் கூடிய நிலையில் இருப்பதாகப் பலர்கருதுகின்றனர். ஆகவே, இது முருகன் தலமாக இருத்தலில் தவறில்லை என்க. மால் முருகனின் மாமனுதலின் இருவரையும் இம்மலையில் நாம் வணங்குதற்குரியோம் என்று கூறிக் கொண்டு மேலே செல்வோமாக.

## பழமுதிர்சோலை

பழமுதிர் சோலை, இது ஆறுமுகப் பெருமானது படை வீடுகளுள் ஆறுவது படைவீடாகக் கூறப்படுவது. இதனை

மதுரைக்கு வடக்குப் பன்னிரண்டு கல் தொலைவில் உள்ள இது போது கள்ளழகர் கோவில் என்று கூறப்படுகின்ற தலம் என்று கருதுகின்றனர். கள்ளழகர் கோயில் திருமால் இருஞ் சோலை என்று கூறப்படுகிறது. ஆகவே, திருமால் இருஞ் சோலைதான் பழமுதிர் சோலை என்று இயைத்துக் கூறுகின்றனர். திருமால் இருஞ் சோலை திருமாலுக்குரியது என்பது சங்க நூலாம் பரிபாடலால் புலனாகிறது. 'ஓங்கு இருங்குன்றம் நாறிணர்த் துழாயோன் நல்கின் அல்லதை ஏறுதல் எளிதோ' என்பது பரிபாடல். திருமால் குன்றம் என்பர் இளங்கோ அடிகள். திருமுருகாற்றுப்படையின் மூலம் பழமுதிர் சோலை திருமாலுக்குரியபதி என்ற குறிப்புக் காணப்பட்டிலது. பழமுதிர் சோலை நல்லவளமான அருவியினை யுடையது என்ற குறிப்புத்தான் காணப்படுகிறது. இழுமென இழிதரும் அருவிப் பழமுதிர் சோலை என்பது அவ்வடி. இதற்கு உரைவகுத்த நச்சினார்க்கினியர் மலையின் உச்சியினின்றும் இழும் என்னும் ஓசை படக் குதிக்கும் அருவியை யுடைய பழம் முற்றின சோலைகளையுடைய மலை என்று வகுத்தனர்.

இப்பதியும் திருப்பதி போலத் திருமாலுக்கும் திருமுருகனுக்கும் உரியபதி போலும். இங்குச் சரவணப் பொய்கை என்னும் தீர்த்தம் இருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது. அதனை,

திருமால் குன்றத்துச் செல்குவீ ராயின்
விண்ணோர் ஏத்தும் வியத்தகு மரபில்
புண்ணிய சரவணப்பொய்கை உள

என்ற சிலப்பதிகார அடிகளில் காணலாம். இங்குள்ள திருமாலுக்குத் திருப்பதியில் நடப்பது போல வில்வார்ச்சனை நடைபெறுதலைக் காணலாம். கோயில் நுழை

வின் வலப்பக்கச் சிலை ஒன்றிற்கு விபூதி குவிக்கும் செயல் இன்றும் நடைபெறுதலைக் காணலாம்.

இவ்விடம் பழம் உதிர் சோலை என்பதற்கு ஏற்ப செல்லாறு தோறும் இருமருங்கினும் அடர்ந்த சோலைகள் இருப்பதை அறியலாம். இத்தலத்தை அடையப் பேருந்தி (பஸ்) வசதி உண்டு. கோவில் பெரியதாக உள்ளது.

பழமுதிர் சோலையைப் பற்றி அருணகிரியார் பல படப்புகழ்ந்து பாடியுள்ளார்.

திரு மலிவான பழ முதிர் சோலை

என்றும்,

சோதியின் மிகுந்த செம் பொன் மாளிகை விளங்கு
சோலைமலை வந்து கந்த பெருமாளே

என்றும்,

அழகான பொன் மேடையு யர்த்திடு கின்ற
முகில் தாவிய சோலைவி யப்புறு
அலையாமலை மேவிய பத்தர்கள் பெருமாளே

என்றும்,

ஆரத் தோடகி லுற்றத ருக்குல்
மேகத் தோடொரு மித்துநெ ருக்கிய
ஆதிச் சோலைம லைப்பதி யில்திகழ் பெருமாளே

என்றும் பாடியருளினர்.

பழமுதிர்சோலை மலைகளுள் சிறந்தது என்ற குறிப்பை விளக்க அருணகிரியார் இதனைக் குலகிரி என்றும் குறிப்பிட்டுப் பாடி அருளினர். (குலகிரி - சிறந்த மலை.)

குலகிரி யில்புக் குற்றுறை உக்ரப் பெருமாளே
கொடிமினல் அடைந்து சோதி மழகதிர் தவழ்ந்தஞான
குலகிரி மகிழ்ந்து மேவு பெருமாளே

என்ற அடிகளைக் காண்க.

பழமுதிர்சோலை மலையைப் பற்றி வேறுவிதமான கருத்தும் உண்டு. அதாவது அது வள்ளிமலை என்பதாகும். இங்குத்தான் முருகன் கிழவுருவுடன் சென்று வள்ளிமுன் நின்றனர் என்பதாம். இதற்கு எடுத்துக் காட்டாக,

எழுமுதிரைப்புனத் திறைவி முன்புதன்
குழமுதிர் இளநலம் கிடைப்ப முன்னவன்
பழமுதிர் களிறெனை வருதல் வேண்டிய
பழமுதிர் சோலையம் பகவற் போற்றுவாம்

என்ற கந்த புராணச் செய்யுளைக் காட்டுவர்.

இந்தக் குறிப்பு அருணகிரியார் வாக்காலும் அறிய வருகிறது.

அருணகிரியார் வள்ளிமலையில் பாடிய திருப்புகழ்கள் பதினொன்று. அவை எல்லாவற்றிலும் வள்ளியம்மையாரின் மணமே பேசப்பட்டுள்ளது.

வள்ளி படச்சாரல் வள்ளிமலை மேவு
வள்ளிமண வாளப் பெருமாளே

என்றும்,

வள்ளிக் குழாம் அடர்ந்த வள்ளிக்கல் மீது சென்று
வள்ளிக்கு வேடை கொண்ட பெருமாளே

என்றும்,

வள்ளிக் குழாத்து வள்ளிக்கல் காத்த
வள்ளிக்கு வாய்த்த பெருமாளே

என்றும்,

வனசார் மரபினில் வரும்ஒரு மரகத
வள்ளிக்கு வாய்த்த பெருமாளே

என்றும்,

வள்ளிபடர் கின்ற வள்ளிமலை சென்று
வள்ளியை மணந்த பெருமாளே

என்றும்,

வடிவாற்றி வள்ளி அடிபோற்றி வள்ளி
மலைகாத்த நல்ல மணவாளா

என்றும்,

வரையின்கண் வந்துவண் குறமங்கை பங்கயம்
வரநின்று கும்பிடும் பெருமாளே

என்றும் பாடியுள்ளார்.

வள்ளியம்மையார் இங்குஅமர்ந்து தினைப்புனங் காத்திருந்தமையால் இம்மலை வள்ளிமலை என்ற பெயரையே கொண்டது என்ற குறிப்பில் அரிவை விலங்கல் என்று ஈற்றுப்பாடலில் பாடினர்.

வள்ளிமலை வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த திருவலம் ரயில்வே ஸ்டேஷனுக்கு வடக்கே ஒன்பது கல் தொலைவில் உள்ளது. மலையை வலம் வந்தும் வழி படலாம்.

இதுவரையில் ஆறுமுகப் பெருமானது ஆறுபடை வீடுகளைப்பற்றிப் பேசினேம். அவனுக் குரிய பதிகள் எங்குமானாலும் நமது வாழ்நாளில் இந்த ஆறுபடை வீடுகளையேனும் நேரில் கண்டு வணங்குதல் இன்றியமையாதது.

வணங்குவதால் அவன் நமது உள்ளத்தில் குடி கொண்டு திருவருள் புரிபவன் என்பதைக் குமரகுருபரர்,

ஆறு திருப்பதிகண் டாறெழுத்தும் அன்பினுடன்
கூறுபவர் சிந்தைகுடி கொண்டேனே

என்றருளினர். அல்லது இருந்த இடத்திலிருந்தாகிலும் துதித்திடல் வேண்டும். இதுவே அருணகிரியார் கட்டளை என்பதை,

திருவாவி னன்குடி பங்காளர் எண்முது சீருரைத்
திருவாவி னன்குடி வானுர் பரங்குன்று சீரலைவாய்
திருவாவி னன்குடி யேரகம் குன்றுதோ ருடல்சென்ற
திருவாவி னன்குடி கொண்டதண் கார்வரை செப்புமினே

என்னும் கந்தர் அந்தாதி மூலம் அறிவித்துக் கொண்டு முடிக்கின்றேன்.

---

அடிக்குறிப்பு: திருஆவி-இலக்குமியின் உயிரான திருமால்,
நன்குடி–பார்வதி, சதிர்-சதுரப்பாடு,
உவாவினன்–இளைஞனும்முருகன், அதிர்-முழங்கும்,
உவா-யானை, இனன்-கூட்டம்
வ்ரை–பழமுதிர்சோலை.

# ஆறுமுகன் அடியவர்கள்

சூரில் கிரியில் கதிர்வேல் எறிந்தவன் தொண்டர்குழாம்
காரில் கதியன்றி வேறிலே காண்தண்டு தாவடிபோய்த்
தேரில் கரியில் பரியில் திரிபவர் செல்வமெல்லாம்
நீரில் பொறியென் றறியாத பாவி நெடுநெஞ்சமே

மெய்யன்பர்களே!

இன்று பொருளாக இருக்கும் பொருள் ஆறுமா முகனது அடியார்களைப் பற்றிப் பேசுவதாகும். அடியவர்களின் பெருமை அளவிட்டுச் சொல்ல இயலாது. தொண்டர்தம் பெருமை சொல்லவும் அரிதே என்பர் ஒளவையார். இறைவனே அடியவர் பெருமை இத்தகையது என்பதை சுந்தரருக்குக் கூறும்போது,

பெருமையால் தம்மை ஒப்பார் பேணலால் எம்மைப்
பெற்ருர்
ஒருமையால் உலகை வெல்வார் ஊனமேல் ஒன்றும்
இல்லார்
அருமையாம் நிலேயில் நின்ருர் அன்பிஞல் இன்பம்
ஆர்வார்
இருமையுங் கடந்து நின்ருர் இவரைநீ அடைவாய்

என்று அருளிச் செய்துள்ளார்.

மாசி லாத மணிதிகழ் மேனிமேல்
பூசு நீறுபோல் உள்ளம் புனிதர்கள்
தேசி ஞல்எத் திசையும் விளக்கிஞர்
பேச ஒண்ணுப் பெருமை பிறங்கிஞர்

என்றும்,

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர்

என்றும்,

ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணிஅல தொன்றிலர்
ஈர அன்பினர் யாதும் குறைவிலர்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ

என்றும் சேக்கிழார் தெரிந்து செப்பியுள்ளார். இவ்வாறான பெருமை அவர்கள்பால் செறிந்தும் மிடைந்தும் இருத்தலின்,

அன்பர்பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலைதானேவந் தெய்தும் பராபரமே

என்று தாயுமானவர் சாற்றியருளினர். இவ்வளவு பெருமைக்குரிய அடியவர்களைப் பற்றியும் நாம் அறிய வேண்டுவது கடமை அன்றோ?

அடியவர்கள் ஈசன் அடியவராகவும், முருகன் அடியவராகவும், திருமால் அடியவராகவும், தேவி அடியவராகவும், கணபதி அடியவராகவும் இருக்கின்றனர். ஈண்டு முருகப் பெருமானுடைய அடியவர்களைப் பற்றியே பேசுவோமாக.

முருகன் அடியவர்கள் என்பதனால், அருணகிரியார் குமரகுருபரர், சிதம்பர சுவாமிகள், இராமலிங்க சுவாமிகள் போன்ற அடியவர்களைப் பற்றிப் பேசப்போகின்றேனோ என்றுசிலர் எண்ணக்கூடும். நான் இவர்களைப்பற்றி இங்குப் பேசப் போவதில்லை. இவர்களைப்பற்றிப் பல முறை பலர் பேச நீங்கள் கேட்டுள்ளீர்கள். ஆகவே, இரண்டாயிர ஆண்டுகட்கு முன்பு இருந்த சங்க காலத்து முருகன் அடியவர்களைப்பற்றியே இதுபோது உங்கட்கு நினைவு படுத்த எண்

ணியுள்ளேன். அவர்களுள்ளும் நக்கீரராகிய சங்கப்புலவரைப் பற்றியும் இங்குப் பேச முன்வரவில்லை. அவர் திருமுருகனைப் பற்றிப் போற்றிப் பாடிய திருமுருகாற்றுப் படையினை அறியாதவர் இருக்கமுடியாது. திருமுருகாற்றுப் படையினை அறிந்தவர் நக்கீரரை அறியாமல் இருக்க முடியுமா? ஆகவே, நக்கீரனாரையும் நீக்கி வேறு சில முருகன் அடியவர்களைப் பற்றிய பேச்சே ஈண்டுச் சிந்தனைக்கு உரியதாகும். அவர்கள் ஆசிரியர் நல்லந்துவனார், கடுவன் இளவெயினனார், குன்றம் பூதனார், கேசவனார், நப்பண்ணனார், நல்லச்சுதனார், நல்லழுசியார் என்பவர்கள்.

மேலே குறிப்பிடப்பட்ட ஏழு அன்பர்களும் முருகப் பெருமான் மீது அன்புகனிந்து பாடல்களைப் பாடியுள்ளனர். அப்பாடல்கள் சங்கநூற்கள் வரிசையினைச் சார்ந்த எட்டுத் தொகையில் ஒன்றான பரிபாடல் என்னும் நூலில் உள்ளன. எட்டுத் தொகை நூல்கள் இன்ன என்பதை,

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந் தார் சொல்லும் கலியோ டகம்புறம்என்
றித்திறத்த எட்டுத் தொகை

என்ற வெண்பாவால் தெரிந்து கொள்ளலாம். இதனுள் ஓங்கு பரிபாடல் எனச் சிறப்பிக்கப்பட்டதையும் சிந்தித்தல் வேண்டும். இதனால் பரிபாடல் என்னும் நூல் சிறந்த நூல் என்பது தெளிவாகின்றதன்றோ?

பரிபாடல் என்பது பரிபாடல் என்னும் பாவினால் பாடப்பட்ட ஒரு தொகுப்பு நூலாகும். இது பரிபாட்டு எனவும் கூறப்பெறும். பரிபாடலாவது இசைப்பாவாகும். இவ்வாறு பொருள்கண்டனர் இந்நூலுக்கு உரை வகுத்த பரிமேலழகர். பரிபாடலாவது பரிந்த பாட்டு என்பது இளம்பூரணர்கருத்து. உளம்கூர் பெருமை இளம்பூரணர்

தொல்காப்பியத்துக்கு உரைகண்ட பெரியார். அவர் பரி பாடல் இன்னது என்பதை விளக்கும்போது, "பரிந்த பாட்டுப் பரிபாட்டு எனவரும்; அஃதாவது ஒருவெண்பாவா லாகி வருதலின்றிப் பல உறுப்புக்களோடு தொடர்ந்து ஒரு பாட்டாகி முற்றுப் பெறுவது" என்றனர். பேராசிரி யரும் தொல்காப்பியத்திற்கு உரை எழுதியவர். அவர் "பரிபாடல் பரிந்து என்பது வருவது; அது கலியுறுப்புப் போவாது நான்கு பாவானும் வந்து பல அடியும் வருமாறு நிற்கும்என்று உணர்க" என்று விளக்கினர். மேலும் அவர் விளக்கம் தரும்போது, "அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களுள் இன்பத்தையே அடிப்படையாகக் கொண்டு கடவுள்வாழ்த்து மலை, புனல் விளையாட்டு முதலானவற்றில் இப்பாடல் வரப்பெறும்" என்பர். உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர், "கடவுள் வாழ்த்து உட்பட இன்பப் பொருள் குறித்து உல கியல் பொருந்தப்பெற்று வரும்" என்பர். யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர் "தெய்வமுங்காமமும் பொருளாகக் கொண்டுவரும்" என்பர். இத்தகைய உரையாசிரியர்களின் கருத்தினால் பரிபாடல் தெய்வ வாழ்த்துக்குரிய பாடல் என்பது பெறப்படுகிறது.

பரிபாடலில் எழுபது பாடல்கள் இருந்தனவாக இறையனார் களவியல் உரையாலும் தொல்காப்பிய உரை யாலும் தெரிகிறது. அவற்றுள் எட்டு திருமாலுக்கும், இருபத் தொருபாடல் முருகப் பெருமானுக்கும், ஒன்று காடுகிழாருக்கும், இருபத்தாறு பாடல்கள் வையை ஆற்றிற்கும், நான்கு மதுரைக்கும் உரியனவாகும் என்பது,

திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்
தொருபாட்டுக் காடுகாட் கொன்று—மருவிய
வையைஇரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
செய்யபரி பாடல் திறம்

என்னும் வெண்பாவால் தெரியவருகிறது. ஆனல், இப்போது கிடைத்துள்ள பாடல்கள் இருபத்தி நான்கு ஆகும். அவற்றுள் திருமாலுக்குரியவை ஏழு, முருகனுக் குரியவை எட்டு, வையைக்குரியவை ஒன்பது. ஆனல், வெண்பாவடிவில் ஐந்து பாடல்களும் அகவல் வடிவில் முப்பது பாடலும் மதுரையைப்பற்றி உள்ளன.

பரிபாடல் இசைப்பா என்ற பெயரைப் பெற்றதற்கு ஏற்ப, ஒவ்வொரு பாட்டின் ஈற்றிலும் பண் குறிப்பிடப்பட் டுள்ளது. இதனுல் இப்பாடல் தேவாரம் போலப் பண் ணுடன் பாடப்பட் டிருக்கவேண்டும் என்பது தெரிகிறது. இந்நூலில் வரும் பண்கள் பாலையாழ், நோதிறம், காந் தாரம் என்பன. இவ்வாறு இசை வகுத்த பெரியார்கள் யாவர் என்பதையும் இந்நூலால் அறியலாம். நன்னுகனுர், பெட்டகனுர், கண்ணனுகனுர், மருத்துவனல்லச்சுதனுர், பித்தாமத்தார், நாகனுர், நல்லச்சுதனுர் என்பவர்கள் இசை வகுத்தவர்கள்.

இனி எம்முறையில் சங்ககாலத்து முருகன் அடி யவர்கள் ஆறுமுகப் பெருமானை அன்புடன் வழுத்தினர் என்பதைக் கவனிப்போம்.

### ஆசிரியர் நல்லந்துவனுர்

ஆசிரியர் நல்லந்துவனுர் பாடிய பாடல்கள் நான்கு பரிபாடலுள் உள்ளன. அவற்றுள் மூன்று வைகை நதிக்கும், ஒன்று முருகப் பெருமானுக்கும் உரியனவாக உள்ளன. அவ்வாறு பாடப்பட்ட பாடல் திருப்பரங்குன் றத்து முருகன் மீது பாடப்பட்டதாகும். திருப்பரங் குன் றம் இமயமலை போன்றது என்பது ஆசிரியர் கருத்து. ''பரங்குன்று இமயக் குன்றம் நிகர்க்கும்'' என்பர். இவ்வாறு திருப்பரங்குன்றம் இமயக்குன்று என்று கூறுதற்குக் காரணமும் காட்டுகின்றுர்.

முருகப் பெருமான் தெய்வயானையை மணந்த திருப் பதி திருப்பரங் குன்றம் ஆதலின், அம் மணக்கோலத் தைக் கண்டுகளிக்க, தேவர்களும் முனிவர்களும் அவுணர் களும் ஒன்று கூடியதனால் அஃது இமயம் போன்றது என் கிறார். இறைவன் உமையம்மையினை மணந்த ஞான்று தேவர்களும் மற்றும் யாவர்களும், இமயம் சேர்ந்தனர் அல்லரோ? அதுபோல் அவ்விறைவர்தம் திருமகனார் திரு மணத்திற்கு தேவர்களும் மற்று யாவர்களும் வந்துற்றனர்; வந்தவர்கள் யார் யார் என்பதை ஆசிரியர் நல்லந்துவனார்,

மண்மிசை அவிழ்துழாய் மலர்தரு செல்வத்துப்
புண்மிசைக் கொடியோனும் புங்கவம் ஊர்வோனும்
மலர்மிசை முதல்வனும்மற்றவனிடைத் தோன்றி
உலகிருள் அகற்றிய பதின்மரும் இருவரும்
மருந்துரை இருவரும் திருந்துநூல் எண்மரும்
ஆதிரை முதல்வனில் கிளந்த
நாதர்பன் ஒருவரும் நன்றிசை காப்போரும்
யாவரும் பிறரும் அமரரும் அவுணரும்
மேவரு முதுமொழி விழுத்தவ முதல்வரும்
பற்று கின்றுநின் காரண மாக

என்று காட்டினர். புண்மிசைக் கொடியோன்-திரு மால். புங்கவம் ஊர்வோன்-இறைவன். மலர்மிசை முதல் வன்-பிரமன். பதின்மர் இருவர்-பன்னிரு சூரியார். மருந் துரை இருவர்-மருத்துவர் இருவர். எண்மர்-அஷ்டவீசுக்கள். நாதர் பன் ஒருவர்-உருத்திரர் பதினொருவர். திசை காப்போர்-அஷ்ட திக்குப் பாலகர். விழுத்தவ முதல்வர்-தெய்வமுனிகள். யாவர்களும் பேணிவணங்கும் பெற்றியது திருப்பரங்குன்றம் என்பது ஆசிரியர் கருத்து.

உடம் புணர்காதலரும் அல்லாரும் கூடிக்
கடம் பமர் செல்வன் கடிநகர் பேண

என்ற அடிகளில் இந்த உண்மையினை உணரலாம்.

திருப்பரங்குன்றம் இமயம் ஒக்கும் என்று கூறிய ஆசிரியர், அங்குள்ள சுனை இமயத்துச் சரவணப்

பொய்கை போன்றது என்பர். மலையில் மேகம் அதிர அவ்வதிர் குரலைக் கேட்ட சேவல் எதிர்கூவ, அவ்வோசையைக் கேட்டயானை முழக்கம் செய்ய, ஒரே ஓசையுடையதாக மிளிறும் அம்மலை என்றும் ஆசிரியர் பாடியுள்ளார். மலர்கள் மலர்ந்து வண்டுகள் ஒலிக்க இன்பம் தரும் காட்சியாகப் பரங்குன்றம் விளங்குவதை,

வீழ்தும்பி வண்டொடு ஞிமிறார்ப்பச் சுனைமலர்க்
கொன்றை கொடியிணர் ஊழ்ப்பக் கொடிமலர்
மன்றல மலர மலர்காந்தள் வாய்நாற
நன்றவிழ் பல்மலர் நாற நறைபனிப்பத்
தென்றல் அசைவருஉஞ் செம்மற்று

என்றனர்.

திருப்பரங் குன்றத்தில் வழிபடும் மாதர்கள் கேட்ட வரங்கள் இன்னின்ன என்பதை ஆசிரியர் அழகுபடக் கூறுகிறார். அவர்கள் தங்கட்கு நல்ல பிள்ளைப்பேறு கிடைக்க வயிறு வாய்க்கவேண்டும் என்றும், பொருள் பெருக வேண்டும் என்றும், தம் கணவர் போரில் வெற்றி காண வேண்டும் என்றும் வேண்டினார்களாம்.

கருவயிறு உறுகெனக் கடம்படு வோரும்
செய்பொருள் வாய்க் கெனச் செவிசார்த்து வோரும்
மையமர் அடுகென அருச்சிப் போரும்,

என்ற அடிகளை காண்க.

ஆசிரியர் நல்லந்துவனார் முருகனிடத்துக் கொண்டுள்ள அன்பினையும் அவனே முதன்மையான தெய்வம் என்பதை உணர்ந்தமையினையும் "முதல்வ" என்று விளித்திருப்பதாலும், "குன்றம் உடைத்த ஒளிர்வேலோய்" என்றதனாலும், தேவர்கள் பலர் பரங்குன்றை அடைந்தனர் எனமுன்பு கூறியிருப்பதனாலும் தெரிந்து கொள்ளலாம்.

இவர் முருகனை வாழ்த்தும் முகத்தான் திருப்பரங் குன்றையே வாழ்த்துகின்றார். இவர் வாழ்த்திய வாழ்த்து,

மறுமிடற் றண்ணற்கும் மாசிலோள் தந்த
நெறிநீர் அருவி அசும்புறு செல்வ!
மண்பரிய வானம் வறப்பினும் மன்னுகமா
தண்பரம் குன்றம் நினக்கு

என்பது இதற்கு விளக்கம் காட்டிய பரிமேலழகர், "முருகற்கிடமாகிய பரங்குன்றை வருணித்த முகத்தால் எதிர் முக மாக்கியும் படர்க்கை யாக்கியும் அவனையே வாழ்த்தி முடித்தமையின் கடவுள் வாழ்த்தாயிற்று" என்றனர். இவ்வாறு இறைவனைச் சின்னாள் வாழ் பல்பிணியுடைய சிற்றறிவினர் வாழ்த்துவது இவ்விறைவன் வாழ்வதற்கு அன்று. அவனே அனைவர் நல்வாழ்விற்குக் காரணனாய் இருக்க, அவனை மக்கள்வாழ்த்துவது என்றால் அது விந்தை அன்றோ? ஆனால், மணி மொழியார் இவ்வாறு இறைவனை அவனது அடியார்களும் மற்றும் உள்ளவர்களும் வாழ்த்துதற்கு ஏற்ற காரணங் காட்டுகிறார்.

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம் நின்பால்
தாழ்த்துவதும் தாமுயர்ந்து தம்மையெல்லாம் தொழ வேண்டிச்
சூழ்த்துமது கரமுரலும் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானும் உன்னைப் பரவுவனே

என்ற திருவாசகத்தைக் காணவும்.

ஆசிரியர் நல்லந்துவனார் திருப்பரங் குன்றத்தை வாழ்த்தி முடித்திருப்பதில் ஒரு குறிப்புக்காணப்படுகிறது. இதனால் அம் மலை வாழ்வை இவர் பெரிதும் விரும்பினர் என்பது புலப்படுகிறது. இவர் திருப்பரங்குன்றத்தைப் பாடியதை இவரை ஒத்த பெரும்புலவராகிய மதுரை மருதன் இளநாகனார்,

சூர்மருங் கறுத்த சுடர்இலை நெடுவேல்
சீர்மிகு முருகன் தண்பரங் குன்றத்
தந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை
யின்றீம் பைஞ்சுனை

என்று பாடியிருப்பதை அகநானூற்றில் காணலாம்.

**கடுவன் இளவெயினனார்**

இவர் பாடிய பாடல்கள் பரிபாடலில் மூன்று உள்ளன. அவற்றுள் இரண்டு திருமாலுக்கும், ஒன்று முருகப் பெருமானுக்கும் உரியவை. இவர் இருவர் மீதும் பாடியுள்ள பாடல்களால், இவ்விரு தெய்வங்களிடத்தும் பேரன்புடையவர் என்பது பெறப்படுகிறது. இவரது பெயர் எயினனார் என்று அறியவருதலின், இவரது மரபு வேடர் மரபாக இருக்கக் கூடும் என்பது புலனாகிறது. வேடர் குலத்தில் பிறந்த திண்ணனார் இறைவன் மாட்டு அன்பு கொண்டது போல், இவர் இவ்விரு தெய்வங்களிடத்து அன்பு கொண்டனர் போலும்!

இவரது பாடல், யானை முருகற்குரிய வாகனம் என்பதையும் அவனே சூர்மா தடிந்தவன் என்பதையும் கிரௌஞ்சமலையைப் பிளந்தவன் என்பதையும்குறிப்பிட்டுச் செல்கிறது. முருகக் கடவுள் நிறம் சூரியனைப் போன்று ஒளியுடையது என்பதை 'ஞாயிற்றேர் நிறத்தகை' என்ற தொடரால் குறிப்பிட்டுள்ளார். இது,

உலகம் உவப்ப வலன்ஏர் புதிரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி.

என்னும் நக்கீரர் வாக்கை நினைப்பிக்கின்ற தன்றோ? இவர் முருகனைச் 'சால்வ! தலைவ!' என்றும் 'நீயேவரம்பிற்று இவ்வுலகம் ஆதலின் சிறப்போய்' என்றும் கூறி முருகனது பெருமையினைப் பேசியுள்ளார். இந்த அளவுடன் நின்ற

னரோ இவர்? பெரும் பெயர் முருக என்றும் அன்றோ பேசினர்! பெரும்பெயராவது பெரும் பொருள். பெரும் பொருள் இன்னது என்பதை விளக்கும்போது நச்சினார்க் கினியர் வீடு (மோட்சம்) என்று கூறினர். இதனால் மோட்சம் அளித்தற்குரியன் முருகன் என்பது தெரிகின்றதன்றோ?

கடுவன் இளநாகனார் முருகனை அடைந்து இன்புறு வோர் இன்னார் என்பதையும், அடைந்து இன்புறாதவர் இன்னார் என்பதையும் தெளிவுறத் தெரிந்துள்ளார். அடைந்து இன்புறுவோர்,

நின்குணம் எதிர்கொண்டோர் அறங்கொண்டோ அல்லதை
மன்குணம் உடையோர் மாதவர் வணங்கியோர் அல்லதை

என்றும், இன்புறாதவர்,

செறுதீ நெஞ்சத்துச் சினநீடி னோரும்
சேரா வறத்துச் சீரி லோரும்
அழிதவப் படிவத் தயரி யோரும்
மறுபிறப் பில்லெனும் மடவோரும் சேரார்

என்றும் சுட்டிக் காட்டினர்.

இதனால் அவன் திருவருள் பெறச் சினம் நீங்க வேண்டும் என்பதும், அறத்தொடு நின்ற அகம் வேண்டும் என்பதும், கூடா ஒழுக்கமும் அழிந்த தவவிரதமும் கூடா என்பதும், மறுபிறப்பு உண்டு என்ற உணர்ச்சி வேண்டும் என்பதும் பெறப்படுதலைக் காண்க.

கடுவன் இளவெயினனார் முருகப் பெருமானிடத்துக் கொண்டுள்ள அன்பினை என்னென்று இயம்புவது? அவர் உலகவாழ்வில் வெறுப்புக் கொண்டவராகவும் தெரிகிறது. அவர் முருகனிடத்தில் பொன்னையும் பொருளையும் போகத் தையும் வேண்டிலர்; அருளையும், அன்பையும், அறனையுமே வேண்டினர். இதனை,

பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருண் இணர்க் கடம்பின் ஒலிதா ரோயே

என்று அவர் முருகனை வேண்டிய வேண்டுகோளால் தெளியவும்.

உண்மை அன்பர்கள் இவ்வாறே வேண்டுவர் என்பதைக் கீழ்வரும் பாடல்களால் தெளியலாம்.

கோல நீடிய நிதிபதி வாழ்க்கையும் குறியேன்
மேலை இந்திரன் அரசினைக் கனவிலும் வெஃகேன்
மால யன்பெறு பதத்தையும் பொருளென மதியேன்
சால நின்பதத் தன்பையே வேண்டுவேன் தமியேன்

என்று கந்தபுராணத்தும்,

அண்டர்பொய் வாழ்வையும் அயன்பொய் வாழ்வையும்
விண்டுவின் வாழ்வையும் வெஃகி லேனியான்
தண்டைகள் அணிந்தநின் சரணத் தன்பையே
கொண்டிட வேண்டுவன் என்று கூறினன்

என்று கந்தபுராணத்துச் சுருக்கத்தும் வீரபாகு தேவர் முருகனை வேண்டியதைக் காணவும். திருவாசகத்தில் மாணிக்கவாசகனார்,

போகம் வேண்டி, வேண்டி லேன்பு ரந்தராதி இன்பமும்
ஏக நின்க ழலிணைய லாதி லேன்என் எம்பிரான்
ஆகம் விண்டு கம்பம் வந்து குஞ்சி அஞ்ச லிக்கணே
ஆக என்கை கண்கள் தாரை யாறதாக ஐயனே

என்று விரும்பியதைக் காண்க.

இவரது பாடலில் வரும் முருகனது பிறப்பிற்கும்கந்த புராணத்துக் கூறப்படும் முருகனது பிறப்புக்கும் பெரிதும் வேறுபாடு உண்டு. அவற்றை அவ்வந்நூற்களில் கண்டு கொள்ளவும்.

**குன்றம் பூதனர்**

இவர் முருகன் மீது பாடிய பாடல்கள் இரண்டு பரி பாடலில் உள்ளன. இவரது பாடலால் இவர்க்குத் தமிழ் மொழியினிடத்துள்ள பற்றும் திருப்பரங் குன்றத்தின் மீதுள்ள அன்பும் புலனுகின்றன. தமிழின் சிறப்பைக் கூறுமிடத்தில் நான்கு வேதங்களை அறிந்த புலவர்களை நோக்கிக் கூறுகிருர். இதனுல் வேதங்களினும் தமிழே சிறப்புடைத்து என்பதை அவர்கட்கு அறிவுறுத்தவே

நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர் கேண்மின்
தள்ளாப் பொருள் இயல்பில் தண்டமிழ்ஆய் வந்திலார்
கொள்ளார்இக் குன்று பயன்

என்று இங்ஙனம் கூறினுர் என்பது தொனிக்கும் குறிப் பாகும்.

இவர் முருகனை வாழ்த்தி வணங்கியதை,

நயத்தகு மரபின் வியத்தகு குமர
வாழ்த்தினேம் பரவுதும்

என்று பாடிப்பரவியதால் அறியலாம்.

இவரது பாடலில் சக்களத்திபோராட்டம் நன்கு சித் திரிக்கப்பட்டுள்ளது.முருகன் தெய்வயானை காலில் விழுந்து வணங்குவதும் கூறப்பட்டுள்ளது. இப்படி வணங்கிய தால் தெய்வயானை தன் மார்பை ஈந்து மகிழச் செய்த செய்தியும் அறிவிக்கப் பட்டுள்ளது.

திருந்தடி தோயத் திரைகொடுப் பானை
வருந்தல் எனஅவற்கு மார்பளிப் பானை.

என்ற அடிகளைக் காண்க.

வடிவார் குறத்தி தன்பொன் அடிமீது நித்த முத்தன்
முடியான துற்று கந்து பணிவோனே

என்று அருணகிரியார் பாடுவர். இவ்வாறு பணிதலை அவர் பல இடத்துக் குறிப்பிட்டுள்ளார். முருகன் வள்ளியையும் கும்பிட்டு வணங்குவர்.

எயினர்மட மானுக்கு மடல்எழுதி மோகித்து
இதன் அருகு சேவிக்கும் முருகா விசாகனே

என்று அருணகிரியார் பாடுதல் காண்க.

மகனறிவு தந்தை அறிவு என்பது நம் நாட்டுப் பழமொழி. சிவபெருமானும் உமையம்மையினை வணங்கியுள்ளார். இதனைக் கற்பனைக் களஞ்சியமாம் சிவப்பிரகாச சுவாமிகள்,

ஆதிபகவன் தனதூடல் தணிப்பான்பணிய அவ்விறைவன்
பாதம் இறைஞ்சும் அதற்கும் நெற்றிப் பகையும் அல்குல்
பகையுமாம்
சீதமதியும் அரவும்விழும் செயற்கும் உவகை செயாமல்அலை
மாது பணியும் அதற்குமனம் மகிழும் உமையை
வணங்குவாம்

என்றனர். இவ்வாறு கணவன்மார் மனைவியர் காலில் பணிதல் ஊடலில் நிகழும் நிகழ்ச்சி என்பதைத் தொல்காப்பியமும்,

மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
நினையும் காலை புலவியுள் உரிய

என்று கூறுகிறது.

## கேசவனார்

இவர் முருகன்மீது பாடியபாட்டு ஒன்றே பரிபாடலில் உளது. இவரது பெயரைப்பார்க்கும்போது இவரது முன்னோர்களும்இவரும் பரம்பரைவைணவராக இருந்திருக்கவேண்டும் என்பது தெரிகிறது. இவரது பெயர் கேசவனார் என்றிருக்கிறது. கேசவன் என்னும் திருநாமம் திருமாலுக்கே

உரியது. இந்த வைஷ்ணவப் பெயரை இவரது பெற்றோர்கள் இவருக்குச் சூட்டி இருக்கின்றனர். இப்படி இருந்தும் இவர் முருகப் பெருமானிடத்தில் முதிர்ந்த அன்பு கொண்டு அவனைப் பாடிப் பரவியுள்ளார். இவ்வாறு வைஷ்ணவ சமயத்தைச் சார்ந்தவர்கள் சைவ சமயக் கடவுளைக் கனிந்து பாடிய நூல்கள் தமிழில் உண்டு. சைவத் திருமுறைகளில் ஒன்றுன ஒன்பதாம் திருமுறையில் காணப்பெறும் திருவாலி அமுதனுர், புருடோத்தம நம்பி ஆகிய இருவர்களும் வைஷ்ணவ மரபினர் என்பது அவர்கள் திருப் பெயரால் விளங்குகின்றது. கேசவர் புருடோத்தமர் என்று நாலாயிரப்பிரபந்தத்தில் திருமாலைக் குறித்துப் பாடப்பட்டிருத்தலைக் காணவும். பகழிக் கூத்தர் என்பவர் ஒரு புலவர். இவரும் வைஷ்ணவரே. இவர் திருச்செந்தூர் முருகப் பெருமான்மீது பிள்ளைத் தமிழ் பாடித் தம் வயிற்று வலியைப் போக்கிக் கொண்டவர். கேசவனுர் பாட்டில் அரிய குறிப்பு ஒன்று காணப்படுகிறது. அதாவது முருகன் நறும்புகையினை நனி விரும்புபவன் என்பது. இதனை, "நறையின் நறும்புகை நனியமர்ந் தோயே" என்று முருகனை விளித்திருப்பதால் அறியலாம். இதனுல் கற்பூர ஆலத்தி முன்னர் இல்லை என்பதை ஈண்டு அறிதல் வேண்டும். 'சலம் தூபமொடு தீபம் மறந்தறியேன்' என்று அப்பர் தூபத்தைக் குறிப்பிட்டிருப்பதை ஈண்டே நினைவு கூர்தல் வேண்டும். முருகன் பாட்டில் பெருவிருப்பினனுய் இருத்தலையும் இவர் குறிப்பிடுகிறுர்.

கெழீஇக் கேளிர் சுற்றம் நின்னை
எழீஇப் பாடும்பாட்டமர்ந் தோயே

என்னும் அடிகளைக் காணவும். இறைவரும் சொற்றமிழ் பாடுக என்று சுந்தரருக்குக் கட்டளையிட்டதையும் கூர்ந்து நோக்குக. பாட்டில் பரமர்க்கு விருப்பம் ஆதலைத் தாயுமானவரும் "பன்மாலைத் திரள் இருக்கத் தமையுணர்ந்தோர்

பாமாலைக்கே நீதான் பட்சம் என்று நன்மாலையா எடுத்துச் சொன்னார் நல்லோர்" என்று அறிந்து பாடினார்.

கேசவனார் முருகப் பெருமானிடத்துக் கொண்டுள்ள அன்பு பெரிது. அவர் ஆறுமாமுகனை வழி படுதலையே விரும்பி வரமாகக் கேட்டனர். அவர் கேட்டவரம்,

**அன்னை ஆகலின் அமர்ந்தியாம் நின்னைத்**
**துன்னி துன்னி வழிபடு வதன்பயன்**
**இன்னும் இன்னும் அவை ஆகுக**
**தொன்முதிர் மரபின் நின்புகழினும் பலவே.**

என்பது. இது குறித்தன்றோ, சேக்கிழார் பெருமானும் தொண்டர்களின் வேண்டும் வரத்தைக் குறிப்பிடுகையில்

**கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.**

என்று விதந்து பாடினார்.

**நப்பண்ணனார் :**

இவர் முருகன் மீது ஒரே பாடலைப் பாடியுள்ளார். அது பரிபாடலில் இருப்பது. இவரது பாடலில் மதுரையில் உள்ளார் பற்பல ஊர்திகளில் வந்து பரங்குன்றை வணங்கிச் செல்வர் என்பது தெரிகிறது. அப்படி அவர்கள் வந்து வணங்குதலை ஆசிரியர் நல்ல உவமை நயத்தால் உரைத்தருளினர்.

**அறம்பெரி தாற்றி அதன்பயன் கொண்மார்**
**சிறந்தோர் உலகம் படருநர் போல**

என்பது அவ்வுவமை.

பாண்டியனும் தன் பரிவாரங்களுடனும் தன் மனைவியருடனும் வந்து மலையேறி வணங்குதலையும் குறித்துப் பாடியுள்ளார்.

வழுதி, மடமயிலோரும் மனையவ ரோடும்
கடனறி காரியக் கண்ணைய ரோடும்நின்
சூருறை குன்றில் தடவரை யேறி

என்ற அடிகளில் காண்க.

திருப்பரங்குன்றத்தில் பலவித இசைக்கருவிகளை இசைத்து வழிபட்ட வகையினையும் இவர் அறிவிக்கின்றனர்.

தெய்வப் பிரமம் செய்கு வோரும்
கைவைத் திமிர்புகுழல் காண்கு வோரும்
யாழின் இனிகுரல் சமங்கொள் வோரும்
வேள்வியின் அழகியல் விளம்பு வோரும்
கூர நாண்குரல் கொம்மென ஒலிப்ப
ஊழுற முரசின் ஒலிசெய் வோரும்

என இசையை முழக்கி வழிபட்டோரைக் காட்டினர். இவ்வாறு இசைக் கருவிகளை எழுப்பியும், மற்றும் பலவாரும் அன்பர்கள் வழிபடுவதை மணி மொழியாரும்

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்

என்று திருப்பள்ளி எழுச்சியில் பாடியுள்ளார்.

கடம்பமா அணிநிலை பகர்ந்தே
முடங்கமர் ஆயமொ டேத்தினம் தொழுதே—

என்று நப்பண்ணனுர் பாடிமுடிக்கின்றுர். முருகனைத் தாம் மட்டும் வாழ்த்தி வணங்கி நல்லருள் பெற விரும்பாது ஆயமொடு ஏத்தினம் என்று பரவி இருப்பதிலிருந்து அவரது பரந்த மனப்பான்மையினை நன்கு அறிந்து கொள்ளலாம்.

**நல்லச்சுதனுர் :**

இவர் பரிபாடலில் பாடியுள்ள முருகன் பாட்டு ஒன்று உள்ளது. இவர் இப்பரிபாடல்களின் யாடல்

கள் சிலவற்றிற்கு இசை வகுத்த காரணத்தால் இவர் இசையிலும் வல்லுநர் என்பது தெரிகிறது. இவர் திருப் பரங்குன்றத்து அடியின் கண் வாழ்தலையே வரமாக வேண்டுவதிலிருந்து இத்திருப்பரங்குன்றத்தினிடத்தும், முருகனிடத்தும் கொண்டுள்ள அன்பு இத்தகைத்து என் பது தெரிய வருகிறது.

குன்றத்து அடியுறை இயைகெனப் பரவுதும் என்ற அடியினைக் காணவும். இந்த வாழ்வு தமக்கு என்றும் இருக்க வேண்டும் என்பது அவரது பேரவா என்பது,

நன்னமர் ஆயமோடு ஒருங்குநின் அடியுறை
இன்றுபோல் இயை கெனப் பரவுதும்
ஒன்றூர்த் தேய்த்த செவ்வநின் தொழுதே

என்று இவர் இறுதியில் தம் பாட்டில் இசைத்து இருப் பதால் தெளியலாம். மேலும், இவரது பாட்டின் வாயிலாக திருப்பரங்குன்றச் சிறப்பு அங்கு மகளிர் ஆடும் அழகு முதலானவைகளையும் அறிந்து இன்புறலாம்.

**நல்லழுசியார் :**

இவர் பாடிய பாடல்கள் இரண்டு பரிபாடலில் உள்ளன. அவற்றுள் ஒன்று வைகைக்கு உரியது. மற் றொன்று முருகனுக்கு உரியது. இவர் திருப்பரங்குன்றத்து வாழ்வைப் பெரிதாக மதித்தவர். அதனால் இங்கு வாழ்பவர் மேலுலக வாழ்வையும் விரும்பார் என்று விதந்து பாடு கின்றார்.

மாலை மாலை அடியுறை இயைநர்
மேலோர் உறையுளும் வேண்டுநர் யாஅர்

என்று வினவுகின்றார்.

திருப்பரங்குன்றத்தில் நறும்புகையினை மிகுதியும் எழுப்பி வழி படுதலால் அப்புகை மேலே எழும்பி இமையாத நாட்டத்தினையுடைய தேவர்களின் கண்களை இமைக்கச்செய்தது என்றும் சூரியன் மண்டலம் நறும்புகையால் மறைப்புண்டது என்றும் கூறும் முகத்தால் அங்குத் தூப வழிபாட்டினரின் மிகுதியினை அழகுறக் காட்டினார் நல்லழுசியார்.

திசை நாறிய குன்றமர்ந் தாண்டாண்டு
ஆவி உண்ணும் அகில்கெழு கமழ்புகை
வாய்வாய் மீபோய் உம்பர் இமைபிறப்ப
தேயா மண்டிலம் காணுமா றின்று

என்ற அடிகளைக் காணவும். இவ்வாறெல்லாம் திருமுருகனைச் சங்க காலத்து அடியார்கள் தம் புலமை தோன்ற வாழ்த்தியும் வணங்கியுள்ளனர். அவர்களையும் நாம் நினைவு கொள்ள வேண்டும் என்பதற்காகவே, ஆறுமுகனின் அடியார்கள் என்னும் பொருள் பற்றி இது வரையில் பேசி,

இடுதலைச் சற்றும் கருதேனைப் போதமி லேனையன்பால்
கெடுதலி லார்தொண் டரில்கூட் டியவா கிரௌஞ்சு
வெற்பை
அடுதலைச் சாதித்த வேலோன் பிறவி அறவிச்சிறை
விடுதலைப் பட்டது விட்டது பாச வினைவிலங்கே.

என்று துதித்துக் கொண்டு முடிக்கின்றனன்.

# சஷ்டி விரதம்

*வளைபட் டகைம்மா தொடுமக் களெனும்*
*தளைபட் டழியத் தகுமோ தகுமோ*
*கிளைபட் டெழுசூர் உரமும் கிரியும்*
*தொளைபட் டுருவத் தொடுவே லவனே*

*மெய்யன்பர்களே!*

இன்று பேசப்படும் பொருள் சஷ்டி விரதம் என்னும் பொருளைப்பற்றியாகும். கந்தர் சஷ்டியாகிய இந்த நாளில், கந்த சஷ்டியைப் பற்றிப் பேசுவது மிக மிகப் பொருத்தமே ஆகும்.

தெய்வங்களின் திருவருளை மக்கள் பெற வேண்டிய வழிகள் பலவற்றுள் அவ்வத் தெய்வங்களுக்குகந்த விரதங்களை மேற் கொள்வதுமொன்ருகும். முழு முதற் பரம்பொருளாம் கண்ணுதற் பெருமான் திருவருளைப் பெற வேண்டினுல் சோமவார விரதத்தையும் சிவராத்திரி விரதத்தையும் மேற் கொள்ளலாம், தேவியின் திருவருளைப் பெற நவராத்திரிப்பூசையையும், விஞயகப் பெருமான் திருவருளை நாடினுல், விஞயக சதுர்த்தியையும் திருமால் திருவருளைப் பெற லட்சுமி நாராயணன் விரதத்தையும் மேற் கொள்ளலாம். இப்படியே முருகன் திருவருளைப் பெறுதற்கு வெள்ளிக் கிழமை விரதம், கார்த்திகை விரதம், சஷ்டி விரதம் ஆகியவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும்.

வெள்ளிக் கிழமையில் கந்தப் பெருமானைக் கருத்தில் உன்னி அந்நாளில் விரதம் இருந்தால், இன்னபலன் கிடைக்கும் என்பதை வசிட்டர் முசுகுந்தனுக்கு அறிவித்த தன் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

எள்ளரும் சிறப்பின் மிக்க எழுவகை வாரம் தன்னுள்
வெள்ளிநாள் விரதம் தானே விண்ணவர் உலகம் காத்த
வள்ளல்தன் விரதம் ஆகும் மற்றது புரிந்த மேலோர்
உள்ளமேல் நினைந்த எல்லாம் ஒல்லையில் முடியும் அன்றே

என்று கூறினர். இவ்விரத்தை மேற் கொள்பவர் மேலோர் என்று ஈண்டுக் குறிப்பிட்டதையும் உன்னுதல் வேண்டும். இவ்வாறு இந்த விரதத்தை மேற் கொண்டு பகீரதன் தன் பகையை வென்ருன் என்பது தெரிகிறது. இதனை மேற் கொள்ளுமாறு பணித்தவர் சுக்கிராசாரியார்.

கோரன் என்னும் அசுரன் பகீரதனது நாடு நகரங்களை வென்று கைப்பற்றிஞன். அதனால் பகீரதன் தன் மனைவி மக்களுடன் காட்டில் வாழ நேர்ந்தது, இதனை

பகீரதன் என்னும் வேந்தன் படைத்தபேர் உலகை எல்லாம்
நிகரறு கோரன் என்னும் நிருதன்அங் கொருவன்வெளவ
மகவொடு மனையும் தானும் வனத்திடை வல்லை ஏகிப்
புகரவன் தனது முன்போய்த் தன்குறை புகன்று நின்ருன்

என்ற பாடலால் தெரியலாம். அந்தத் தருணமே

பார்க்கவன் என்னும் ஆசான் பகீரதன் உரைத்தல் கேளா
வேற்கரன் மகிழும் ஆற்ருல் வெள்ளிநாள் விரதம் தன்னை
நோற்குதி மூன்றி யாண்டு நுங்களுக் கல்லல் செய்த
மூர்க்கனும் முடிவன் நீயே முழுதுல காள்வை என்ருன்.

இக்கட்டளையை மேற்கொண்டு பகீரதன் விரதத்தை அநுட்டித்துத் தன் பகையை வென்று அரசைப் பெற்ருன்.

நாரத முனிவர் விநாயகப் பெருமானிடம் சென்று தாம் சப்த முனிவர்களிலும் மேம்பட்ட முனிவராக மதிக்கப் படுதற்குரிய முறையில் மேற் கொள்ள வேண்டிய விரதம் ஒன்றை அருளுமாறு வேண்டினார். அது போது விநாயகப் பெருமான் கார்த்திகை விரதத்தை மேற் கொள்ளுமாறு பணித்தார் என்பதை,

முன்னவன் அதனைக் கேளா முழுதருள் புரிந்து நோக்கி
அன்னது பெறுதி திண்ணம் ஆறுமா முகத்து நம்பி
பொன்னடி வழிபா டாற்றிப் பொருவில்கார்த்திகைநாள் நோன்மைப்
பன்னிரு வருடம் காறும் பரிவுடன் புரிதி என்றான்.

என்ற பாடலால் அறியலாம், இவ்வாறே மேற் கொண்ட நாரதர் சப்த முனிவர்களில் சிரேஷ்டராய்த் திகழ் வாரானார்.

நாரதர் மட்டும் இந்தக் கார்த்திகை விரதத்தை மேற் கொண்டு தாம் விழைந்ததைப் பெற்றார் என்ப தில்லை. மேலும், சிலரைக் குறிப்பிட வேண்டுமாயின், ஒரு பிராமணன் இதனை மேற்கொண்டு, அரசனாகப் பிறந்து அவனியை ஆண்டான் என்பதையும் இவனைப் போலவே மற்றும் ஓர் அந்தணன் மேற்கொண்டு மனத்தில் நினைத்த யாவற்றையும் முடித்துக் கொண்டான் என்பதை யும், வேடன் ஒருவனும் வேந்தன் ஒருவனும் நோற்று, சந்திமான், வந்திமான் என்னும் பெயரைப் பெற்று உலக முழுமையும் ஆண்டனர் என்பனவற்றையும் குறிப் பிடலாம். இந்த விரதம் பலராலும் மேற் கொள்ளப் பட்டுப் பயன் தரும் அளவில் இருப்பதைக் கச்சியப்ப சிவாசாரியார்.

இப்படி ஆரல் நாளில் விரதத்தை இயல்பின் நோற்று
முப்புவனத்தின் வேண்டும் முறைமையை அடைந்த நீரார்
மெய்ப்படு தொகையை யாரே விளம்புவர்

என்று விதந்து பாடினார்.

வசிஷ்டர் முசுகுந்தனுக்கு வெள்ளிக்கிழமை விரதம் கார்த்திகை விரதங்களை மட்டும் கூறியதோடன்றிச் சஷ்டி விரத்தையும் மேற்கொள்ளுமாறு பணித்துள்ளார். அவ்விரதத்தைப் பற்றிக் கூறும் போது, "ஒப்பரும் விரதம் வேறு ஒன்று உளது உரைப்பக் கேண்மோ" என்று கூறி இதனைத் தேவர்களும் முனிகளும் மேற்கொண்டனர் என்பதை.

சொற்படு துலையின் திங்கள் சுக்கில பக்கம் தன்னின்
முற்பகல் ஆதி ஆக மூவிரு வைகல் நோற்றூர்

என்றும் கூறினார்.

இவ்வாறு கூறக்கேட்ட முசுகுந்தன் கந்த சஷ்டி விரத்தை மேற்கொண்டான். இவ்விரதத்தை மன்னன் மேற்கொண்டதனால் மகிழ்ந்த முருகப் பெருமான், அவன் முன் தோன்றிக் காட்சி அளித்தான் என்பது.

ஆன காலையில் ஆறுமா முகமுடை அமலன்
கோன வன்தனக் கருளுவான் மஞ்ஞைமேல் கொண்டு
தானை வீரனும் எண்மரும் இலக்கரும் சார
வானு ளோர்களும் கணங்களும் சூழ்வுற வந்தான்

என்ற பாடலால் தெரியவருகிறது.

இது வரையில் முருகனுக்குரிய விரதங்கள் இன்னின்ன என்று கண்டோம். இனி அவ்விரதங்களை மேற்கொள்பவர் எம்முறையில் அவ்விரத நாட்களில் நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் இதுபோது அறிதல் இன்றியமையாதது.

வெள்ளிக்கிழமை நோன்பு நோற்பவர், வெள்ளிக்கிழமை முற்றும் உணவை அகற்றி வியாழன், சனியாகிய தினங்களில் பகலில் மட்டும் உண்டு வெள்ளிக்கிழமை மட்டும் உறங்காது இவ்விரத்தை அனுட்டிக்க வேண்டும் என்பது மரபு. இதனை,

"ஞாயிறு முதலாம் நாளில்
ஒன்றெனும் வெள்ளி முற்றும் உணவினைத்
துறந்து முன்பின்
சென்றிடும் இரண்டு நாளும் திவாவினில் அடிசில் மாந்தி
இன்துயில் அதனை நீத்து"

என்று கூறியவாற்றுல் தெளிக.

கார்த்திகை நோன்பை மேற் கொள்பவர் பரணி நட்சத்திரத்தில் பின்னேரத்தில் ஒருவேளை உணவு கொண்டு, கார்த்திகை நட்சத்திரத்தில் ஆடையுடன் குளத்தில் மூழ்கி, பின் தூயஆடைபுனைந்து, நியமத்துடன், ஐம்புலன்களை அடக்கி ஆசாரியன் திருவடிகளை வணங்கி, முருகனைவழிபட்டு, அவன் புராணத்தையும் பாராயணம் பண்ணிக் கையால் நீரை முகந்து பருகித் தருப்பைப் படுக்கையில் உறங்கி மாதர்களை அந் நாளில் இயமனுகமதித்து முருகனைத் தியானம் புரிந்து கொண்டு உறங்காது, அடுத்த உரோகிணி நட்சத்திரத்தில் சந்தியாவந்தனம் முடித்துக் கொண்டு (அதாவது காலை வழிபாடு) கந்தப்பெருமான் திருவடிகளை வணங்கி அடியவர்களுடன், பாரணம் செய்து பகலில் உறங்காது முடிக்க வேண்டும். பகலில் உறங்கினுல் நூறு நல்ல பண்புடைய பிராமணர்களைக் கொன்றபாவத்திற்கு உள்ளாவர். இவற்றை எல்லாம் கந்தபுராணம் ஒழுங்குற,

தூசொடு கயத்தில் மூழ்கித் தூயவெண் கலைகள் சுற்றி
ஆசறு நியமம் முற்றி ஆன்றமை புலத்தன் ஆகித்
தேசிகன் தனது பாதம் சென்னிமேல் கொண்டு
செவ்வேள்
பூசனை புரிந்திட் டன்னுன் புராணமும் வினவி னுல்

கடிப்புனல் அள்ளித் தன்னேர் கைகவித் துண்டு முக்கால்
படுத்திடு தருப்பை என்னும் பாயலில் சயனம் செய்து
மடக்கொடி மாதர் தம்மை மறலியா மதித்து வள்ளல்
அடித்துணை உன்னிக் கங்குல்அவதியும் உறங்கா துற்றுன்

அந்தநாள் செல்லப் பின்னர் உரோகினி அடைந்த காலை
சந்தியா நியமம் எல்லாம் சடக்கென முடித்துக் கொண்டு
கந்தவேள் செம்பொன் தண்டைக் கால்முறை
வழிபட் டேத்தி
வந்தமா தவர்க ளோடும் பாரணம் மகிழ்ந்து செய்தான்

பாரணம் விதியில் செய்தோன் பகற்பொழு துறங்கு மாயின்
ஆரண மறையோர் தம்மில் ஐம்பதிற் றிருவர் தம்மைக்
காரணம் இன்றிக் கொன்ற கடும்பழி எய்தும்

விழியோடும் இமைகூ டாமே வெய்யவன் குடபாவ்வீழும்
பொழுதள விருந்து மற்றைப் புறத்துள செயலும் போற்றி

என்று திட்டமிட்டுப் பாடியுள்ளது.

சஷ்டிவிரதத்தை மேற்கொள்பவர், நீரில் மூழ்கி, மேலாடை கீழாடை இரண்டும் மட்டும்தாங்கி, காலை மாலை களில் சந்தியாவந்தனக் கடமைகளைமுடித்து,தியானத்தில் அமர்ந்ததும், கொழுக்கட்டை நிவேதனத்தை முருகனுக் குச் சமர்ப்பித்து, அவனது திருப்புகழைச் செவிமடுத்து சிறிதளவு நீர் அருந்தி உபவாசம் இருக்க வேண்டும். இவ்வாறுதான் இவ்விரதத்தை மேற்கொள்ளவேண்டும் என்பதைக் கச்சியப்ப சிவாசாரியார்,

முந்திய வைகல் ஆதி மூவிரு நாளும் காலை
அந்தமில் புனலில் மூழ்கி ஆடைஓர் இரண்டு தாங்கிச்
சந்தியில் கடன்கள் செய்து தம்பவிம் பங்கும் பத்தில்
கந்தனை முறையே பூசை புரிந்தனர் கங்குல் போதில்

நிறைதரு கட்டி கூட்டி நெய்யினுல் சமைக்கப் பட்ட
குறைதவிர் மோத கத்தைக் குமரநா யகற்க ருத்திப்
புறவுள விதியும் செய்து பிரான்திருப் புகழ்வி னவி
உறுபுனல் சிறிது மாந்தி உபவசித் திருந்தார் மாதோ

என்றுபாடியுள்ளார்.

திருமுருகாற்றுப் படையிலும் கந்தப் பெருமான் விரதத்தை மேற்கொண்டவர் இருக்கும் நிலையினைப் பேசுகையில்.

சீரை தைஇய உடுக்கையர்
மாசற இமைக்கும் உருவினர்
ஊன்கெடு மார்பினர்
என்பு எழுந்து இயங்கும் யாக்கையர்
நன்பகல் பலவுடன் கழிந்த உண்டியர்
இகலொடு செற்றம் நீக்கிய காட்சியர்
இடும்பை யாவதும் அறியா இயல்பினர்

என்று இவ்வாறு பேசினர்

ஸ்ரீ ஆண்டாள் அம்மையாரும் பாவை நோன்மைப் நோற்கையில் எப்படி நோற்றனர் என்பதைக் குறிப்பிடுகையில்.

நெய்யுண்ணோம் பால்உண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம்முடியோம் செய்யாதன செய்யோம்
தீக்குறளைச் சென்றோதோம் ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி

என்று விதந்து ஓதி விரதம் முடிந்த பிறகு, பால் சோறு, மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக் கூடி இருந்து, உண்ட நிலையினைப் பேசினர்.

ஆகவே மேலே, குறிப்பிட்ட முறையில் எவராயினும் விரதங்களை மேற்கொண்டு முறைப்படி நடந்தால் பெரும் பயனைப் பெறுவர் என்பதைக் கச்சியப்ப சிவாசாரியார்,

ஆகையால் அயன்அறியா அருமறைமு லந்தெரிந்த
ஏகநா யகன்விரதம் எவரேனும் போற்றியிடில்
ஓகையால் நினைந்தளலாம் ஒல்லைதனில் பெற்றிடுவர்
மாகமேல் இமையவரும் வந்தவரை வணங்குவரே

என்று பயனைப் பாடிக் காட்டினர். எனவே, நாமும் கந்தவேள் விரதத்தினை மேற்கொள்வது முறையன்ரோ? அவனுக்குரிய சஷ்டி விரதத்தை அனுட்டித்தல் சாலவும் சிறந்தது. இவ்விரதம் சாலச் சிறந்தது என்பதற்குப் பல காரணங்கள் உண்டு. முன்பே இவ்விரதத்தைப் பற்றி விநாயகர் கூறுகையில் "ஒப்பறு விரதம்" என்று ஓதியுள்ளார். ஐப்பசி மாதம் சுக்கில பட்சம், ஆறும் திதியில் தான் சூரன் மாண்டநாள். அவன் மாண்டதனுல்தான் விண்ணவர்தம் நிலையினைப் பெற நேர்ந்தது. விண் குடி புகும் நிலை வாய்த்தது. "பயிற்றும் இவ்விரதம் தன்னுல் தாரணி அவுணர் கொண்ட தம்பதத்தலைமை பெற்ருர்" என்ற அடிகளைக் காணவும்.

சூரபதுமன் கொல்லப்பட வேண்டியவன். அவன் மிகமிகக் கொடியவன். தேவர்களை அவன் படுத்தியபாடு சொல்லத்தரமன்று. அவன்,

சிற்சிலர் தமது நாவைச் செங்கையைச் சேதித் திட்டான்
சிற்சிலர் துண்டம் தன்னைச் செவிகளைக் களைதல் செய்தான்
சிற்சிலர் தாளைத் தோளைச் சென்னியைச் சேதிப் பித்தான்

இந்த அளவில் நில்லாது தேவர்களைச் சிறையிலும் அடைத்தனன். மேலும் இவனது அட்டகாசத்தை அறைதற்கும் அச்சம் ஏற்படுகிறது. சூரபதுமன் தன் அரசை ஏற்று நடத்தும்போது தேவர்களை ஏவிப்பணி கொண்டது அம்மம்ம அத்துணை கொடுமையாக இருந்தது! தேவர்களில் எவரையும் விட்டுக் கொடுத்திலன். திருமாலை நோக்கி இவன்.

**களித்திடும் நிமிறும் வண்டும் கலந்திட நறவம் மாந்தித்**
**துளித்திடும் துழாய்மால் தன்னைச் சூரனும்அவுணன் பாரா**
**அளித்தவன் தன்மூ தாதை ஆயினை அதனுல் நின்னை**
**விளித்திடும் எல்லை தோறும் விரைந்திவண் மேவு**
**கென்ருன்**

அதாவது, கூப்பிடும்போது நீ வரவேண்டும் என்ற கட்டளை பிறப்பித்தான் என்பது. பிரம தேவனை நோக்கி,

செங்கம லத்தின் மேவும் திசைமுகத் தொருவன் தன்னைத்
துங்கமோ ரசுசெய்யும் சூரனும் வீரன் பாரா
இங்குநின் மைந்தரோடும் என்னிடம் தன்னில் ஏகி
அங்கமை வமையும் நாளும் அறைந்தனை போதி என்றான்

அதாவது, தினமும் நாள் நட்சத்திரம் அறிவித்துப் பஞ்சாங்கம் ஓதிச் செல்க என்று பணித்தவாறு. சூரியனை நோக்கி,

அறத்தினை விடுத்த தீயோன் அருக்கனை நோக்கி நம்மூர்ப்
புறத்தினில் அரணம் மீதாய்ப் போகுதல் அரிது கீழ்மேல்
நிறுத்திய சிகரி யூடு நெறிக்கொடு புக்கு வான்போய்
எறித்தனை திரிதி நாளும் இளங்கதிர் நடாத்தி என்றான்

அதாவது எம் மூர்க்கோட்டை மீது செல்லாது மலைப்பக்கமாகச் சென்று இளங்கதிர் வீசிச் செல்க என்று திட்டம் இட்டுக் கூறினன் என்பதாம். சந்திரனை நோக்கி,

அறைகழல் சூர பன்மன் அவிர்மதி தன்னை நோக்கிப்
பிறையென வளரு மாறும் பின்முறை சுருங்கு மாறும்
மறைவொடு திரியும் ஆறும் மற்றினி விடுத்து நாளும்
நிறைவொடு கதிரோன் போல்இந் நீள்நகர் வருதி
என்றான்

அதாவது எந்தநாளும் கலையில் குறையாது பதினாறு கலைகளுடன் பூரணசந்திரனாகத் தினமும் பொலிய வேண்டும் என்பதாம். அக்கினிப் பகவானைப் பார்த்து,

பொங்கழல் முதல்வன் தன்னைப் புரவலன் விரைவில்
நோக்கி
இங்குநம் மூதூர் உள்ளோர் யாவரே எனினும் முன்னின்
அங்கவர் தம்பால் எய்தி அவர்பணி யாவும் ஆற்றிச்
செங்கம லம்போல் யாவர் தீண்டினும் குளிர்தி என்றான்

அதாவது, தன் நகரில் யாராகிலும் நினைத்தால் அவர்க்கு ஆவன செய்து, எவர் தீண்டினாலும் அவர்களைச் சுடாது குளிர்ச்சியாக இருக்க வேண்டும் என்று பணித்த வாரும். இயமதர்மனை ஏறிட்டு நோக்கி,

சுடர்முடிஅவுணர்செம்மல் தொல்பெருங் கூற்றை நோக்கி
படுமுழு துயிரை நாளும் படுப்பது போல நந்தம்
கடமத கரியை மாவைக் கணிப்பிலா அவுணர் தம்மை
அடுவது கனவும் உன்னு தஞ்சியே திரிதி என்றான்

அதாவது, உலகில் தினமும் உயிர்களைக் கொல்வது போலத் தென்னாட்டு அவுணர்களையும், யானை, குதிரைகளையும் கொல்லுதல் கூடாதுஎன எச்சரிக்கை செய்தவாறும். வாயு பகவானை நோக்கி,

அண்டரும் உலவை யானை அவுணர்மாத் தனைவன் பாரா
எண்தரும் நம்மூ தூரில் யாவரும் புனைந்து நீத்த
தண்துளி நறவ மாலை தயங்குபூண் கலிங்கஞ் சாந்த
நுண்துகள் ஆடு சுண்ணம் மாற்றுதி நொய்தின் என்றான்

அதாவது நகரில் தும்புதூசுகள் இல்லாமல் இருக்கச் செய்ய வேண்டும் என்று கூறியவாறும். வருணனை நோக்கி,

காவலன் வருவான் தன்னைக் கண்ணுறீஇ நம்மூ தூரில்
நாவிவெண் பளிதம் சாந்தம் நரந்தமோடளவித் தீம்பால்
ஆவியின் வெளிய நொய்ய அரும்பனிநீரில் கூட்டித்
தூவுதி இடங்கள் தோறும் காற்றது துடைக்க என்றான்

அதாவது மணமுடைய பொருள்களுடன் பனி நீரைக் கூட்டி நகர் எங்கும் தூவுதி என்பதாம். இந்திரனை விளித்து,

வாசவன் தன்னை நோக்கி மால்கெழு திருவின் மேலோன்
தேசுறு துறக்கம் வைகும் தேவர்தம் குழுவி னோடும்
ஆசையம் கிழவரோடும் அருந்தவ ரோடும் போந்து
பேசிய பணிகள் ஆற்றித் திரிமதி பிழையேல் என்றான்

அதாவது இந்திரன் எண் திசைப்பாலகர்களுடனும், தவசிரேஷ்டர் களுடனும் தினமும் வந்து, இட்ட பணியினை ஒழுங்காகச் செய்து போமாறு கட்டளை பிறப்பித்த வாறும். அந்த அளவில் அந்தக் கொடிய சூரபதுமன் நின்றனனா? இந்திரனையும் தேவர்களையும் விளித்துத் தம் அரண்மனையில் மீனைப்பிடித்து வந்து தருமாறும் பணித்தான்.

ஊனமுற்றோர் போலிவ்வா றுலைகின்ற காலத்தில்
ஒருநாள் சூரன்
வானகத்துத் தலைவனையும் அமரரையுங் வருகஎன
வலித்துக் கூவித்
தானவர்க்குத் தம்பியர்நீர் அவர்பணிநும் பணியன்றோ
தாங்கவேலை
மீனனைத்தும் சூறைகொண்டு வைகலும் உய்த்திடுதீர்என
விளம்பினானல்

அந்தோ 'என்ன கொடுமை'!

சூரபதுமன் செய்த கொடுமைகள் இன்னின்ன என்பதை அருணகிரியார் பாடுகையில்,

உருத்திரரைப் பழித்துலகுக்
குகக்கடையப் பெனக்ககனத்
துடுத்தகரப் படுத்துகிரித் தலமேழும்
உடுத்தபொலப் பொருப்புவெடித்
தொலிப்ப மருத்திளைப்ப நெருப்
பொளிக்கஇருப்பிடத்தைவிடச் சுரர்ஓடித்
திரைக் கடலுள் படச்சுழலச்
செகத்தரை இப்படிக் கலையச்
சிரித்தெதிர்கொக் கரித்துமலைத் திடுபாவி

என்று எடுத்துக் கூறினார்.

இவ்வாறு பல்லாற்றானும் கொடுமை செய்து வந்தவன் சூரன் ஆதலின், அவனைக் கொன்று தேவர்களைக் காக்க வேண்டியது முறைமை என்று உளம் கொண்ட முருகப்

பெருமான் அவனோடு போர்புரியத் தொடங்கினார். சூரனை வென்ற ஆறுமாமுகனைவணங்கும் நிலையில் கச்சியப்பசிவாசாரியார்.

மாயையின் வலியோ னாகி மால் முதலோரை வென்றே
ஆயிரத் தோர்எட் டண்டம் அரசுசெய் துகம்நூற் றெட்டு
காயம தழிவின் றாகிக் கடவுளாற் கலக்கண் செய்த
தீயசூர் முதலைச் செற்ற குமரன்தாள் சென்னி வைப்பாம்.

என்றும்,

விரிஞ்சன்மால் தேவராலும் வெலற்கும் விரலோனாகிப்
பெருஞ்சுரர் பதமும் வேத ஒழுக்கமும் பிறவு மாற்றி
அருஞ்சிறை அவர்க்குச் செய்தஅவு ணர்கோண்
ஆவி கொள்வான்
பரஞ்சுடர் உருவாய் வந்த குமரனைப் பணிதல் செய்வாம்

என்றும் துதிகவிகள்பாடிப் போற்றியுள்ளார்.

சூரபதுமனது இளவல் தாரகன் மீது திருமால் தனது சக்காரயுதத்தினை விட்டபோது, அது அவன் கழுத்தில் ஆரமாயிற்றே அன்றி அவனை அழிக்கவில்லை. ''தாரகன் அசுரன் கண்டம் தன்னைவந்தணுகிச் செம்பொன் ஆரமாயிற்று'' என்ற அடியினால் அறியலாம். தாரகனே திருமாலை அடக்கி வென்றான் என்றால், சூரன் மால் முதலோரை வென்றான் என்பதும் மால் தேவராலும் வெலற்கரும் விறலோன் என்பதும் உண்மை அன்றோ?

இவ்வாறு, பல்லாற்றாலும் கொடுமை செய்து வந்தவன் சூரன் ஆதலின், அவனைக் கொன்று தேவர்களைக் காக்க வேண்டியது முறைமை என்று உளம் கொண்ட முருகன் அவனோடு போர் புரியத் தொடங்கினான்.

அதுபோது சூரன், மாயிருள் உருவம் கொண்டு மறைந்து நின்று ஆர்க்கலுற்றான். விண்ணோர் மெய்த் தொகை நுகர்வான் உன்னி விண்ணிடைக் கிளர்ந்து சென்றான். இவ்வாறு சூரபதுமன் வருவதை உணர்ந்த தேவர்கள் தலைத்தலை சிதறி நில்லாது ஓடினர். ஓடியவர்கள் முருகப் பெருமானை நோக்கி,

நண்ணினர்க் கினியாய் ஓலம் ஞானநா யகனே ஓலம்
பண்ணவர்க் கிறையே ஓலம் பரஞ்சுடர் முதலே ஓலம்
எண்ணுதற் கரியாய் ஓலம் யாவையும் படைத்தாய் ஓலம்
கண்ணுதற் பெருமான் நல்கும் கடவுளே ஓலம் ஓலம்
தேவர்கள் தேவே ஓலம் சிறந்தசிற் பரனே ஓலம்
மேவலர்க் கிடியே ஓலம் வேல்படை விமலா ஓலம்
பாவலர்க் கெளியே ஓலம் பன்னிரு புயத்தாய் ஓலம்
மூவரும் ஆகி நின்ற மூர்த்தியே ஓலம் ஓலம்
கங்குலின் எழுந்த கார்போல் கனைஇருள் மறைவின் ஏகி
நுங்கிய செல்வான் சூரன் ஓடவும் நோன்மை இல்லேம்
எங்கினி உய்வம் ஐய இரையும்நீ தாழ்க்கல் கண்டாய்
அங்கவன் உயிரை உண்டெம் ஆவியை அருளு கென்றார்

இவ்வாறு தேவர்கள் ஓலம் இட்டுவேண்டிய வேண்டுகோளை உணர்ந்த முருகப் பெருமான் கருணை கூர்ந்து தன் திருக்கரத்தில் உள்ள திருநெடும் வேலை நோக்கி, "இவன் ஆகம் போழ்ந்து வருகுதி" என்று கட்டளை இட்டனர். சூரன் தன் மீது குமரன் வேல் வருதலை அறிந்து, "முடிவிலா வரத்தினேனை என் இவன் செய்யும் அம்மா இவன் விடும் எஃகம்" என்று எள்ளி நகையாடிக் கடல் நடுவே மாமரமாக நின்றான். இவன் மாமரமாகி நின்ற நிலையினைப் பல படப்புனைந்த கந்தபுராணம்,

அத்தியின் அரசு பேர ஆலமும் தெரிக்கில் ஓங்க
மெய்த்திறல் வாகை வன்னி மெலிவுற வீரை யாவும்
தத்தம திருப்பை நீங்கத் தாதவிழ் நீபத் தாரோன்
உய்த்திடு தனிவேல் முன்னர் ஒருதனி மாவாய் நின்றான்

என்று அழகுறப் பாடுகிறது. அதுபோது வேலனது வேல்

விடம்பிடித் தமலன் செங்கண் வெங்கனல் உறுத்திப் பாணி
இடம்பிடித் திட்ட தீயில் தோய்ந்துமுன் இயற்றி அன்ன
உடம்பிடித் தெய்வம் இவ்வா றுருகெழு செலவின் ஏகி
மடம்பிடித் திட்ட வெஞ்சூர் மாமுதல் தடிந்த தன்றே

அதாவது, மாவடிமாகிய சூரனை இருபிளவாக வேல் பிளந்தது என்பதாம்.

இருபிளவாகச் சூரன் வீழ்ந்தும் மடிந்தான் இல்லை. அவ்விரு பிளவுகளுள் ஒரு பிளவில் மயில் வடிவுடனும், மற்றொருபிளவினுள் சேவல் வடிவுங் கொண்டும், வந்து முருகன் முன்னர்,

மணிகிளர் வரைய தொன்றும் மாகதப் பிறங்கல் ஒன்றும்
துணையடி சிறகர் பெற்றுச் சூல்புயல் அழிய ஆர்த்துத்
திணிநில விசும்பின் மாட்டே சென்றெனச் சேவலோடு
பிணிமுக உருவாய் வந்து பெருந்தகை முன்னம் புக்கான்

அதுபோது முருகப்பெருமான், குக்குட உருவை நோக்கிக் கடிதில்நீ கொடியேயாகி, ஆர்த்தி என்று கூறிச் சேவலைக் கொடியாகக் கொண்டும், மயிலை நோக்கி, "சுமக்குதி எம்மை"என்று கூறி,பார்திசை வானம் முற்றும் பரிஎன நடத்தலுற்றான். இவ்வாறு தீயனாகிய சூரன் இறுதியில் முருகன் திருவருளால் இன்பமே உற்றான். இதனை வியந்து கந்தபுராணம்,

தீயவை புரிந்தா ரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவர் ஆகி மேலைத் தொல்கதி அடைவர் என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ அடுசமர் அந்நாள் செய்த
மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்

என்று பாராட்டுகின்றது.

ஈண்டுநாம் ஓர் அருமைக் குறிப்பையும் அறிதல் வேண்டும். குமரப் பெருமான் ஏன் மயிலைவாகன மாகவும் சேவலைக் கொடியாகவும் கொண்டனர்? காரணம் இருக்க வேண்டும் அன்றோ? மயிலின் மாண்பைப் பற்றிப் பேசிய இடத்தில் மயில் "ஆனதனி மந்திர ரூபநிலை கொண்டது

ஆடும்மயில்'' என்பதைஅறிந்தோம். மயில் தன்தோகையை விரித்த நிலையில் முருகன் அதில் விளங்கும் தோற்றத்தைக் கண்டால், மயில் பிரணவம் போல் விளங்க, அதன் இடையே குமரன் பிரணவ நாதன் என்பதையும், தன்னை அன்றிப் பிரணவமே இல்லை என்பதையும், வேறு மந்திரங்களும் இல்லை என்பதையும் முருகன் உணர்த்தி நிற்பதை உணரலாம். இதன் குறிப்பைச் சிதம்பர சுவாமிகள். "செறி கலப மயில் முதுகில் உதய சின்மய நூய'' என்றருளிச் செய்தனர்.

சேவல்நாததத்துவத்தின்அறிகுறி. சேவல்எப்படிஉயர ஏறிக் கூவி, இருளை ஒழிக்கச் சூரியனை வருகஎன அழைக்கவும் மக்களை விழிப்பித்து அவர்அவர் பணியில் ஈடுபடவும் செய்கிறதோ, அது போல முருகன் திருக்கரச் சேவல் அன்பர்களின் அஞ்ஞான இருளைப் போக்கி மெய் ஞானமாகிய ஒளியினில் செறிய ஒலியிடும் நிலையில் இருப்பது என்பதைக் காட்டவே சேவலைத் திருக்கரம் கொண்ட கோலமாகும். பிறப்பாகிய தூக்கம் அறவும் அது கூவும் இயல்பினது. இதனையும் சிதம்பர சுவாமிகள்.

மலஇரவு விடிய மிகுதுறவுணர்வு நசையறுதன்
மலிகுணக் குன்றின் முடிமேல்
மன்று ஞானக்கதிர் எழுந்தொளிபரப்பமா
ருது தசநாத முழுதும்
அலகில் பவதுயில் அறக் கூவுசேவல்

என்று பாடி அருளினர்.

இத்துணைக்கும் காரணமாகிய சஷ்டிநாளை நாம் விரத நாளாகக் கொண்டு நம்பகையை வென்று குமரனைப் போற்றி வாழ வேண்டியது கடமை அன்றோ? ஆகவே, நாமும் கந்தவேள் விரதமாம் கந்தர் சஷ்டி விரதத்தை மேற்

கொண்டு அவனது திருவருளைப் பெற வேண்டுமென்று வேண்டிக் கொண்டு,

துய்யதோர் மறைக ளாலும் துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபேர் அடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க அன்னான்
பொய்யில்சீர் அடியார் வாழ்க வாழ்கஇப் புவனம் எல்லாம்

என்று வாழ்த்தி முடித்துக் கொள்கின்றேன்.

# தேவகுஞ்சரி திருமணம்

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றுநின் சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறக்கற் றிலேன்மத கும்பகம்பத்
தறுகண் சிறுகண்சங் ராம சயிலே சரசவல்லி
இறுகத் தழுவும் கடகா சலபன் னிருபுயனே

மெய்யன்பர்களே;

நேற்றுச் சஷ்டிவிரதச் சிறப்பின் மூலகாரணமான சூரசம்மாரத்தைப் பற்றிப் பேசினோம். சூரன் சம்மாரத்தின் பின் நிகழ்ந்த நிகழ்ச்சி திருமணம் ஆதலின், இன்று தேவ குஞ்சரியின் திருமணத்தைப் பற்றிப் பேசும் பெரும்பேறு பெற்றுள்ளோம். தேவகுஞ்சரி என்பாள் தெய்வயானை யாவாள்.

தேவர்கள் தலைவன் தேவேந்திரன். அவன் சூரனது கொடுமையால் பட்டபாடு இன்னது என அறிந்தோம். அந்தப் பாடுகளை முருகப் பெருமான் தீர்த்து அவனை விண்குடி ஏற்றினர். இதனால் பெருமகிழ்வு கொண்ட வலாரி தனது நன்றியினைச் செலுத்தத் தான் வளர்த்த மகளாகிய தெய்வ யானையை முருகப் பெருமானுக்குத் திருமணம் முடிக்க எண்ணினன்.

காய்ந்திடு தம்பகை கடந்து பொன்னகர்
வேந்தியல் முறையருள் வேற்கை வீரற்குக்
கூந்தலஞ் சிறுபுறக் குஞ்ச ரந்தனை
ஈந்திட மகபதி இதயத் தெண்ணினன்.

கொண்டுவன் தன்கருத்தை மால் அயன் முதலான தேவர் வேண்டிக் கூற, அவர்களும் இது நல்ல எண்ணமே என்று மொழிந்தனர். பிறகு திருப்பரங் குன்றம் சென்று சண்முகப் பெருமான்முன் நின்று,

கன்னின்ற மொய்ம்பின் அவுணக்களை கட்டல் செய்தாய்
இந்நின்ற தேவர் சிறைமீட் டனைஎன் தனக்கு
முன்நின்ற தொல்சீர் புரிந்தாய் அதுமுற்றும் நாடிச்
செய்ந்நன்றி யாகச் சிறியேன் செயத்தக்க துண்டோ

என்று பணிவுடன் பேசி, தமியேன் பெறு மங்கையினை வதுவை செய்து நின் பெருந் தோளில் கலத்தி என்று வேண்டிக் கொண்டனன். ஆறுமாமுகனும் அவ் வேண்டு கோட்கு இசைந்தனன். ஆகவே, அத்திருமண நிகழ்ச்சியினைப் பற்றிப் பேசுதற்கு முன்பு சில அரிய குறிப்புக்களைப் முன்னர் பேசி மேலே செல்வோமாக. இறை வன் நம்மைப்போல மக்கள் இனத்தவனு? அவனும் நம் மைப்போல மனைவி மக்களுடன் வாழ்பவனு? அவனுக்கும் திருமணமா? என்பன போன்ற வினுக்களை எழுப்பக் கூடும். ஆம், இவ்வினுக்கள் நல்ல வினுக்களே. இவற்றிற்கு விடை இறுக்க வேண்டியதும் நம் கடமையாகும். உண்மையில் இறைவன் பண்பைப் பற்றிப் பேசுகையில், தாயுமானவர்

குலமி லான் குணம் குறியிலான் குறைவிலான் கொடி
தாம்
புலமி லான் தனக் கென்னஓர் பற்றிலான் பொருந்து
இலமி லான்மைந்தர் மனைவியில் லான்எவன் அவன்சஞ்
சலமி லான்முத்தி தரும்பர சிவனெனத் தகுமே

என்றருளிச் செய்தனர். ஆனுல், அவனுக்குப் பார்வதி என்னும் மனையாள் உள்ளாளே எனக் கேட்கக்கூடும். உமையம்மை மக்களைப் போன்று சப்ததாதுக்களாகிய எலும்பு, தசை முதலான பொருள்களால் அமைந்த

மானிட வடிவினள் அல்லள். அவளை அருட் கருணை தாஞய திருவுள்ள முடைய தவவல்லி என்பர் சேக்கிழார் பெருமாஞர். மேஞள் அகிலம் தரமெல்இயலா, ஆறு அருள் தன்னை அளித்தொருபால், தாஞக இருத்திய தற்பரன்" எனக் கந்த புராணம் கழறுகிறது, இதஞல் இறைவனுக்கு வாய்த்த, மனைவி மக்களுக்கு வாய்க்கும் மனைவி போன்ற வள் அல்லள் என்பது பெற்றும். அவ்வாறே அவனுக்கு மக்களும் இலர். "பிடியதன் உரு உமை, கொள மிக கரியது வடிகொடுதனதடி வழிபடும் அவர் இடர் கடிகண பதிவர அருளினன்" என்னும் திருஞான சம்பந்தர் அருள் வாக்கும், "அறிஞர் ஆயோர் சிந்திக்கும் தனது தொல்லைத் திருமுகம் ஆறும் கொண்டார்" என்னும் கச்சியப்பசிவா சாரியார் திருவாக்கும் இறைவனே விநயகஞகவும் முருகஞகவும் இருப்பவன் என்பதை அறிவிப்பதஞல் அவனுக்கு நம்மைப் போலப் பிள்ளைகள் இல்லை என்பதை யுணரவும்.

இரதி தேவியும் இறைவன் மக்களைப் போல் போகியல்லள் என்பதைத் தன் கணவஞன மன்மதன் இறந்த போது புலம்பிய புலம்பலின் மூலம்.

நேயமொடு மறைபயிலும் திசைமுகனைப் புரந்தரனை
நின்னைத் தந்த
மாயவனை முனிவர்களை யாவரையும் நின்கணையால்
மருட்டி வென்ருய்
ஆயதுபோல் மதிமுடித்த பரமனையும் நினைந்திவ்வா
றழிவுற் ருயே
தீயழலின் விளக்கத்தின் படுகின்ற பதங்கத்தின் செயலி
தன்றே

என்று அரற்றி அறிவித்தாள்.

இவ்வாறு இருக்க, ஏன் இறைவன் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று வினவவும் கூடும். இதற்கு விடையாக மணி மொழியார் அழகிய முறையில்,

தென்பால் உகந்தாடும் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பால் யோகெய்தி வீடுவர்காண் சாழலோ

என்றும்,

மலையரையன் பொற்பாவை வாள்நுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடீ
உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்களெலாம் கலங்கிடும்காண் சாழலோ

என்றும் உணர்த்தியுள்ளார். இந்த உண்மைகளை அறிந்தே நாம் இறைவனுக்கு ஆண்டு தோறும் திரு மணங்களை நடத்தி நாம் மங்களமாக இருக்க வழி வகுத்துக் கொள்கிறோம். அவனை வாழ்த்துவதும், வணங்குவதும் கூட நம் பொருட்டேயாகும். இதனை மணி மொழியார் தேவர்கள் மேல் வைத்து, "வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான் மனம் நின்பால் தாழ்த்துவதும் தாமுயர்ந்து தம்மை எல்லாம் தொழ வேண்டி" என்று பாடியருளினர். எனவே, முருகப் பெருமானும் நம்மை ஆட் கொள்ளவே தெய்வயானை யாரைத் திருமணம் முடித்துக் கொள்கின்றார். இனி அத்திருமணச் சிறப்பைச் சிறிது பேசுவோமாக.

முருகப் பெருமான் திருமணம் கண்டு இன்புற்று இன் னருள் பெற விண்ணவர்களும் மண்ணவர்களும் திருப்பரங் குன்றம் நோக்கி வரலாயினர். வரும் வழியிலேயே அவர்

ர்கள்" இன்பக் கடலில் திளைப்பாராயினர். அது போது கூட லும் ஊடலும் இனிதின் நிகழ்ந்தன.

இவ்வாறு ஊடியும் கூடியும் புனலில் மூழ்கிய தம்பதி கள் சோலையில்உள்ள இருக்கைகளில்அமர்ந்தனர். கணவன் மார்கள் நல்ல மணமுள்ள மலர்களைப் பறித்து வந்து, தம் தம் மனைவியர் கூந்தலில் சூட்டிக் கொள்ளுமாறு வேண்டி நின்றனர். அப்படி வேண்டிய காதலர்களில் ஒருவன், மலர் களைக் கொய்து வந்து "மாதர்களில் அரசியாய் இருப்ப வளே" என்று மிகுந்த காதல் உணர்ச்சியோடு தன்காதலி யினை விளித்தனன். அவன், மாதர்களில் அரசியாய் இருப் பவளே எனப் பன்மையில் கூறியதால் தன்னைப் போலப் பல மாதர்கள் தன் கணவனுக்கு உண்டு போலும் என்று எண்ணிக் கொண்டு கோபம் கொண்டு இருக்கை விட்டு எழுந்து போயினள். இந்தக் காட்சியினைக் கவி

மின்னார் தமக்கோர் அரசேவெறி வேங்கை வீயும்
புன்னாக வீயும் கொணர்ந்தேன்புனை கிற்றி என்ன
மன்னா உனக்குப் பலருண்டுகொல் மாதர் என்னா,
தன்னாவி, அன்னான் தனைச்சீறியொர் தையல் போனாள்

என்று பாடிப் பரவசமுற்றனர். இந்த முறையில் திருப் பரங்குன்றத்தில் யாவரும் இன்பமுற்றிருந்தனர். முருகப் பெருமான் தெய்வயானையை மணமுடிக்கும் சடங்கு தொடங்கப்பட்டது. எல்லாச் சடங்குகளும் முடிந்த பின் இந்திரன் தன் மகளாகிய தெய்வ யானையை முருகன் திருக் கரத்தில் பிடித்துக் கொடுத்துக் கன்னிகாதானம் செய் தனன். உடனே முருகப் பெருமான்,

மங்கல நாணை மணிக்களம் ஆர்த்து
நங்கை முடிக்கொர் நறுந்தொடை சூழ்ந்தான்

என்னியங்கள் ஒலித்தன. யாவரும் களித்தனர் முருகப்

பெருமான் தன் வாழ்க்கைத் துணைவியாம்தெய்வயானையுடன் அம்மையப்பனது அடிமலர் இணைகளில் வீழ்ந்து வணங்கினன். இறைவனும் இறைவியும் மகிழ்ந்து,

அடித்த லத்தில்வீழ் மக்களை இருவரும் ஆர்வத்
தெடுத்த ணைத்தருள் செய்துதம் பாங்கரில் இருத்தி
முடித்த லத்தினில் உயிர்த்துமக் கெம்முறும் முதன்மை
கொடுத்தும் என்றனர் உவகையான் மிக்கமொள்
கையினர்

ஆயினர். அதன்பின் முருகனும் தேவகுஞ்சரியும் அளவிலா இன்பத்துள் மூழ்கித் திளைத்தனர். இதனை

இன்ன தன்மைய தாகவே எம்மையீன் றெடுத்த
அன்னை தன்னுடன் ஆறுமுகன் உறையுளின் அடைந்து
பொன்னின் மஞ்சமேல் படுத்துமெல் லமளியில் புவனம்
மன்னு யிர்த்தொகை உய்ந்திட முயங்கிவை கினன்

என்ற திருப்பாடலில் காணவும்.

முருகன் தெய்வயானையுடன் கூடி இன்புற்றது தனக்கு இன்பமாதற் பொருட்டு அன்று என்பதை நாம் நன்கு உணரவே கச்சியப்ப சிவாசாரியார் உயிர்த் தொகை உய்ந்திட முயங்கிவைகினன் என்று முடித்துக் காட்டினார். இறைவன் போகியாக இருந்து காட்ட வில்லை என்றால் உயிர்கள் போகத்தைத் துய்க்க முடியாது. இந்த உண்மையினை இறைவன் தட்சணாமூர்த்தியாக அமர்ந்து சனகாதி முனிவர்கட்கு உபதேசம் புரிகையில் யோகத்தில் அமர்ந்த காலத்தில் மன்மதன் இருந்தும் கூட எவ்வுயிரும் போகத்தில் இச்சையின்றியே கிடந்தன. இதனைச் சைவ எல்லப்ப நாவலர் தெள்ளத் தெளிய,

எல்லா உயிர்க்கும் உயிர்அருணேசர் இவர் அசையின்
அல்லாது அணுவும் அசையாதென்பது அறிந்தனமே
வில்லாடன் மாரன், இருக்கவும் யோகம்விளைத்த அந்நாள்
புல்லாதிருந்தன எல்லாவுயிரும் தம்போகத்தையே

என்று பாடியருளினர். "காண்பார் ஆர் கண்ணுதலே நீ காட்டாக் காலே" என்பது அப்பர் பெருமானார் அருள்வாக்கன்றோ?

ஆகவே, முருகப் பெருமானும் இறைவனில் வேறு அல்லன் ஆதலின், உயிர்கள் இன்புற தேவகுஞ்சரியுடன் இணைந்து இன்புற்றனன். இந்தத் தெய்வயானைத் திருமணத்தின் சிறப்பைக் குமர குருபர சுவாமிகள், பாடி மகிழ்ந்தனர். இதனையே நாமும்பாடி மகிழ்வோமாக,

பாடல்

மழைக்கொந் தளகக்கலப மயில்இளஞ் சாயல்நெடு
மதர்அரிக் கெண்டையுணகண்
மான்கன்றை அமருலகு வாழப் பிறந்திடும்
மடப்பிடியை வானவில்லை
குழைக்கும் தடக்கைத் திருத்தாதை நீரொடு
கொடுப்பக் குடங்கை ஏற்றுக்
கொழுமலர் மணங்கமழ் மணப்பந்தர் நிற்பஅக்
கொம்புமின் கொடியின்ஒல்கி
இழைக்கும் பசும்பொன் தசும்பெனஅ சும்புபொன்
துளிப்பது போன்று
இளமுலை முகம் கோட்டி நின்று
எய்யாமை நோக்கும் படைக்கண் கடைக்கண் நோக்கும்
இன்னமுதம் ஊற்ற இன்பம்
தழைக்கும் பெருங்காதல் வெள்ளம் திளைத்தவன்
சப்பாணி கொட்டி அருளே
தையல்நாயகி மருவு தெய்வநாயகன் மதலை
சப்பாணி கொட்டி அருளே

என்பது

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடியார் எல்லாம்

என்று வாழ்த்துக் கூறி இந்த அளவில் எனக்கிட்ட பணயினை முருகப் பெருமான் திருவருள் துணையால் முடித்துக் கொள்கின்றேன்.